

# சித்திரம்
# கலைமதிப்பீடு











சி. டானியல்.







FOR GRADE 9 - 13 STUDENTS WHO OFFER ART

தரம் 9 - 13 சித்திரப் பாட மாணவர்களுக்கானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரம்
# கலைமதிப்பீடு

தரம் 9, 10, 11 - 13 மாணவர்கட்கானது

## (பகுதி ஒன்று)

சி. டானியல் (Dip. In. Art)
உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல் கல்வி)

விற்பனை
ராஜா புத்தகசாலை
இல. 111. பிரதான வீதி
மட்டக்களப்பு
தொலைபேசி. 22371

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு:- சித்திரம் - கலைமதிப்பீடு.

வகை :- அழகியல் கல்வி

ஆக்கம் :- சி. டானியல்

மொழி :- தமிழ்

பதிப்பு :- முதல் பதிப்பு 1999 மார்ச்

பக்கம் :- 93

உரிமை :- வெளியீட்டாளருக்கு

பதிப்பு :- ஜெஸ்கொம் அச்சகம், மட்டக்களப்பு

வெளியீடு:- டா. நிறோஷன், எருவில், களுவாஞ்சிகுடி

விலை :- ரூபா. 125/-

(சகல உரிமைகளும் நூலாசிரியருக்கே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

தமிழர் வளர்த்த கவின் கலைகளுள் ஓவியம், சிற்பம் என்பன முக்கிய இடம் பெறுவதை தமிழர் வரலாற்றிலிருந்து நாம அறிந்து கொள்ளலாம். சிந்து வெளிக் காலம் முதல் வளர்ந்து வந்த இக் கலைகள் பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் உச்ச நிலையை அடைந்திருந்தன. இக் கலைகள் இன்றும் தமிழகத்தில் இடையறாது வளர்ச்சி பெற்று வருகின்றன. ஆனால் இலங்கையில் அந்த அளவில் வளர்ச்சி பெறவில்லை என்றே கூற வேண்டும். இலங்கையைப் பொறுத்த வரை, ஓவியச் சிற்பக் கலைகள் பௌத்த மதத்துடன் தொடர்பு படுத்தி, விகாரைகள், தாதுகோபுரங்கள் ஆகியவற்றில் காணப்படும் சிற்ப ஓவியங்களை ஆதாரமாகக் கொண்டு இக்கலைகள் பற்றிப் பேசப்படுகின்றது. அதற்கமைவாகவே எமது நாட்டில் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், இவற்றிற்கு வெளியேயும் ஓவிய சிற்பக கலைபற்றிய கருத்துக்கள் வளர்ந்து வந்துள்ளன.

இலங்கையில் சிற்ப ஓவியக் கலைகளைப் பொறுத்த வரையில் அது அனுராதபுர காலம், பொலநறுவைக் காலம், கண்டிக் காலம் என வகுக்கப்பட்டு அக்காலகட்டத்தினுள் ஏற்பட்ட சிற்ப ஓவியக் கலைகளின் படிமுறை வளர்ச்சி ஆராயப்படுகின்றது.

சிற்பக் கலையைப் பொறுத்த வரை புத்தர் சிலைகள், சந்திரவட்டக்கல், துவார பாலகர், ஈசுறுமுனிய விகாரைச் சிற்பங்கள், நீர்த்தடாகங்கள் பராக்கிரமபாகு சிலை, சிற்பத் தூண்கள், வாமனரூபங்கள், கும்ப கலசங்கள் முதலியன முக்கியத்துவம் பெறுகின்றன. ஓவியக் கலையைப் பொறுத்தமட்டில் பௌத்த ஜாதகக் கதைகள் பற்றிய ஓவியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றின் புறநடையாக சிகிரியா மலை ஓவியங்கள் அமைகின்றன.

ஓவியர் டானியல் எழுதியுள்ள இந்நூலில் இலங்கையின் ஓவியச் சிற்பக் கலை வரலாற்றுப் பின்னணி நன்கு விளக்கப்பட்டிருப்பதுடன், கால ஓட்டத்தில் ஏற்பட்ட படிமுறை வளர்ச்சியும், இந்து ஆலயங்களில் பிரதிபலிக்கும் திராவிட கட்டிட, சிற்ப ஓவியக் கலை வளர்ச்சியும், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள நவீன ஓவியக்கலை வளர்ச்சியும், இஸ்லாமிய கலை பற்றியும். வரிசையாகக் கூறப்பட்டுள்ளன. ஒரு மாணவன் அடிப்படையாக அறிந்திருக்க வேண்டிய தகவல்கள் இவற்றில் அடங்கியுள்ளன. இந்த வரிசைப்படுத்தல் முறை வரவேற்கத்தக்கது.

இந்நூலில் திராவிட சிற்ப ஓவியக் கலை பற்றி ஒரேயொரு அத்தியாயம் மட்டுமே இடம் பெறுகின்றது. தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை இவ்விடயம் இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டியதாகும். நூலாசிரியர் கொடுத்துள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு கலாயோகி ஆனந்த குமாரசாமி, கலைப்புலவர் நவரெத்தினம் போன்றோர் எழுதிய பல நூல்களைத் தேடிப்படித்து, தமிழர் வளர்த்த ஓவிய சிற்பக் கலை பற்றி இன்னும் விரிவாக அறிந்து கொள்ள வேண்டியது தேடல் ஆர்வம் மிக்க மாணவரின் கடமையாகும்.

இச் சந்தர்ப்பத்தில் இந்நூலின் ஆசிரியரான ஓவியர் டானியல் பற்றி மிகச் சுருக்மாகவேனும் சில தகவல்களைக் கூறவேண்டியுள்ளது. ஓவியக் கலையை முறையாகப் பயின்று சான்றிதழ் பெற்றுள்ள இவர், தனது சுய முயற்சியாலும், சுய தேடலினாலும் தனது ஓவிய ஆற்றலை வளர்த்துக் கொண்டவர். ஓவியக் கலையின் பல்வேறு பாணிகளான இயற்பண்பு (NATURALISM), யதார்த்தம்(REALISM), அக உணர்வு(IMPRESSIONISM), வர்த்தக ஓவியம் (COMMERCIAL) முதலியவற்றில் முத்திரை பதித்தவர். ஓவியத்தின் பிரயோகம் என்ற வகையில் பல சஞ்சிகைகளுக்கும், நூல்களுக்கும் அட்டைப் படங்களும், பிற ஓவியங்களும் வரைந்தவர். வர்த்தக விளம்பரங்கள் பலவற்றிற்கு கலைத்துவமான கருத்துள்ள ஓவியங்களை வரைந்தமைக்காக பாராட்டப்பட்டவர், பல ஓவியக் காட்சிகளில் தனது ஓவியங்களை இடம் பெறச் செய்தவர். தனிநபர் ஓவியக் கண்காட்சியை நடாத்த வல்லவர்.

தனது அளவுக்கு மிகுந்த தன்னடக்கம் காரணமாக 'குடத்துள் விளக்காக' இன்றும் இத்தனை வருட ஓவியப்பணிக்குப் பின்னும், விளம்பரத்தை விரும்பாது, அமைதியாக வாழ்ந்து வருகிறார். ஆனால் அதை நாம் அனுமதிக்கக கூடாது.

இவரது ஓவியக் கண்காட்சிகளைப் பல இடங்களில் நடாத்தி, மக்கள் ஊடகங்கள் மூலம் (MASS MIDIA) இவரது ஓவியத் திறனைப் பலரும் அறியச் செய்ய வேண்டும் அப்படிச் செய்வது அவர் புகழ் பெறுவதற்காக அல்ல. அவர் வாழும் இந்த மட்டுநகர் மண்ணுக்குப் பெருமை சேர்ப்பதற்காகவே. சரி அதை யார் செய்வது ஏன் அவர் பணி புரியும் கல்வித் திணைக்களம் அதைச் செய்யலாமே.

க. தங்கேஸ்வரி
கலாசார உத்தியோகஸ்தர்

கச்சேரி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

கவின் கலைப்பாடம் இலங்கையின் பாடசாலை கலைத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்டு ஆண்டுகள் பல கடந்து விட்டன. சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் ஒன்றினை மாணவர் கட்டாயம் கற்க வேண்டிய நிலை ஒன்று உண்டு.

இவற்றில் 'சித்திரமும் கைப்பழக்கம், ...... எனும் முது மொழிக்கமைய மாணவர் தம் கைவண்ணத்தினை மேம்படுத்தி கலைத்திட்டத்தில் தமக்குள்ள பங்கினை பெற்றுக் கொள்ள விரைந்து நிற்கும் இக்கால கட்டத்தில் கை வண்ணம் மட்டும் அல்லாது அறிவு ரீதியிலும் பலவற்றை அறிந்து செயற்பட வேண்டியுள்ளனர்.

தமிழ் மொழி வளமுள்ள மொழியாய் உள்ள போதிலும் சித்திர சிற்பக் கலையின் பல்வேறு அம்சங்களை பற்றிய கோட்பாட்டு அறிவை பெற்றுக் கொள்ள பாட நூல்கள் இல்லாத நிலை இந்நாட்டிற் காணப்படுகின்றது. இன்றைய கலைத்திட்டம் பல பழம் பெரும் சிற்ப சித்திர வடிவங்களை பிள்ளைகள் அறிந்து கற்க வேண்டிய நிலையை உரு வாக்கியுள்ளது. ஆனால் இது பற்றிய பாட நூல்கள் அரிதாகவே உள்ளன.

சித்திர கலைப் பாடத் திட்டத்தில் பல் வேறு பாணியில் உள்ளக்கப்பட்ட புராதன சிற்பங்கள், கட்டிடங்கள், சுவரோவியங்கள் கைப்பணி பொருட்கள், அலங்கார வடிவங்கள் போன்றவற்றை இலகுவில் அறியக் கூடிய வகையில் சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்க முடி யாது. தற் காலம் பாடசாலை நிலையில் சித்திரம் கற்பிற்கும் ஆசிரியருக்கு பெருமளவு பற்றாக்குறை உண்டு. கற்பிக்க வேண்டும் என்பதற்காக அப்பாடத்தில் அனுபவம் பெறா தோறும் வகுப்பறை கற்பித்தலில் ஈடுபட வேண்டிய நிலையில் பாட விடயங்களை வெறும் பாடமாக மாணவர்கள் முன் வைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே இந் நூல் மாணவர்களுக்கும், கற்பிற்கும் ஆசிரியர்களுக்கும் கற்றல் கற்பித்தலை இலகுவாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடொன்றிற்கு ஆசிரியர்கள் பல்வேறு வரலாற்று கால கட்டத் தினை பல்வேறு இனங்களுடனும்' சமயங்களுடனும் சம்மந்தப் படுத்தி தெரிவுகளை மேற் கொண்டு சித்திர விளக்கம் குறிப்புகளை நல்வழி சமைக்கும் வழி அவசியமாகும். இவ்வா றான பல நூல்களை துணையாக கொண்டு அழகியியல்கல்விக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. சி. டானியல் அவர்களின் முயற்சியினால் இச் சித்திரப் பாட துணை நூலில் பல தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ள விடயங்களும் படங்களும் சித்திரங்களும், தமிழ் மொழி மூல மாணவரை பொறுத்த வரையில் புதியவையாகவும் அவசியமானவையாகவும் உள்ளன

சித்திரப் பாடம் மூற்று பிரிவாக கற்பிக்க படுகையில் எழுத்து மூல குறு வினா க்களுக்கும் வினாக்களுக்கும் விடையழிக்கும் வாய்ப்பினை இந்நூல் தருகின்றது.

சிற்ப சித்திர கலையுடன் பின்னிப் பிணைந்த இந்நாட்டுக் கலைஞர்களின் வரலாற்றுக் குறிப்புகள் சமய சம்மந்தமான கட்டிடங்கள் அவற்றின் தகவல்கள் வரலாறுகள் என்பவற்றை மாணவர்கள் அறிய இந்நூலாசிரியர் வசதி ஏற்படுத்தி கொடுத் துள்ளார் ஒவ்வொரு அத்தியாயங்களிலும் இடம் பெற்றுள்ள சித்திரங்களும் படங்களும் சிறப்பான அம்சங்களாகும்.

இத்துணை நூல் நிச்சயமாக தமிழ் மொழி மூலம் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன் படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை இறுதியாக இந்நூலானது சித்திரக் கலை பயிலும் மாணவர்களுக்கு பரிட்சையில் சிறந்த பெறு பேற்றை பெற நிச்சயம் துணை செய்யும் எனும் நம்பிக்கைக்கு பாத்திரமாக அமைந்து காணப்படுகிறது.

பட்டிருப்பு கல்வி வலயம்
கல்வி அலுவலகம்
களுவாஞ்சிகுடி
19 03 99

K. முத்துலிங்கம்
வலய கல்விப்பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

இந் நூலாசிரியரான திரு. சி. டானியல் அவர்கள் தற்போது அழகியியல் பாடத்திற்கான உதவிக்கல்விப்பணிப்பாளராகக் கடமை புரிந்துவருகின்றார். இவர் மட்டக்களப்பு தொலைக்கல்வி பிராந்திய நிலையத்தில், தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கு சித்திரப் பாட போதனாசிரியராகப் பல ஆண்டுகள் சேவை புரிந்தவராவார். நுண்கலைக் கல்லூரியில் கலைப்பாட நெறியில் நன்கு பயிற்சி பெற்றுத் தேறியவராவார்.

தமிழ் மொழியில் வரைதற் பாட நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இலங்கையின் பண்டைய கலைத் தொடர்புடைய விடயங்களைக் கொண்ட நூல் ஒன்று இன்று முழுமையாக இல்லை. இக்குறைபாட்டை நீக்கவேண்டுமென பலர் இந் நூலாசிரியரை வற்புறுத்தியதன் பேரில் இப் பணியை இவர் மேற்கொண்டுள்ளார். இந்நூல் முழுமை பெற வேண்டுமென கலைத் தொடர்புள்ள சிங்கள நூல்களையும், ஆங்கில நூல்களையும் இவர் தேடியெடுத்து தமிழ் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்தும், கலையோடு தொடர்புடைய மூத்த அறிஞர்களைச் சந்தித்து, அவர்களது ஆக்கங்களை சேகரித்தும் இந் நூலை ஆக்கியுள்ளார்.

இந் நூலில் பண்டைய பாரம்பரியக் கைப்பணிக்கலை, பண்டைய சிற்பக்கலை, பண்டைய ஓவியக்கலை, பண்டைய கட்டிடக்கலை, அலங்காரக்கலை என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூல் பாடசாலை மாணவர்களுக்கும், வரைதற் பாடநெறியைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சியினை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படக் கூடியதொன்றாகும்.

இந்நூலாசிரியரின் முயற்சி பாராட்டக் கூடியது. இவரது பணி மேலும் சிறப்புடன் மிளிரவேண்டும். அது சகலருக்கும் பயனளிக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி

க. நடராஜா,
சிரேஷ்ட போதனாசிரியர்,
தொலைக்கல்வி பிராந்தியநிலையம்
மாவட்டக் கல்வித் திணைக்களம்,
மட்டக்களப்பு.
1999 . 03 . 19

''ஸ்ரீ அகம்''
ஆரையம்பதி - 01
ஆரையம்பதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அரச நுண்கலைக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்ட சில தமிழ் மாணவர்களில் திரு. டானியலும் ஒருவர். தனது அரச சேவையை சித்திர ஆசிரியராக ஆரம்பித்து சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகராகத் தனது சேவையை விரிவுபடுத்தி தற்போது அழகியல் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்கின்றார். திரு. டானியல் தனது சேவையின் மூலம் மாணவருக்கும், சித்திர ஆசிரியருக்கும் நல்ல பணி ஆற்றி வருபவர்.

இலங்கையில் பல இடங்களிலும் ஆசிரிய முன் சேவைப் பயிற்சியையும், சேவை கால வகுப்புக்களையும் நடாத்தி பாராட்டுப் பெற்றவர். அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட தொலைக் கல்வி நிலையத்திலும், கல்வியியல் கல்லூரியிலும் பகுதி நேர போதனாசிரியராகவும் கடமைபுரிபவர். திரு. டானியல் கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்து நடாத்தப்படுகின்ற அழகியல் பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல், செயலமர்வுகள் போன்றவற்றில் நிறைவான பங்களிப்பினைச் செய்து வருவதோடு, அழகியல் பாடத்திட்டம் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கி வருபவர். சித்திரப் பாடத்தைப் போதிப்பதில் திரு. டானியல் தனக்கென ஒரு தனிப்பாணியை கடைப்பிடித்து முத்திரை பதித்தவர் என்பதை நான் இங்கு குறிப்பிட்டுக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

சித்திரப் பாடத்திற்காக இவரால் தொகுத்தெடுக்கப்பட்ட இந்நூல், அழகியல கல்வி பயிலும் மாணவர்களுக்கும், அப்பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் உதவும் தமிழில் இவ்வாறான ஒரு நூல் இல்லையே என்ற நீண்ட காலக் குறையை இந்நூல் நிவர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

தனது படிப்பு, பயிற்சி, சேவைஅனுபவம் ஆகியவற்றின் மூலம் இந்நூல் மெருகு படுத்தப்பட்டு தமிழ் மாணவ சமுதாயத்திற்கு முன் வைக்கப்படுகின்றது. இதனை அனைவரும் வரவேற்பது நாம் அவருக்குச் செய்யும் கௌரவமாக இருக்கும். அவரது சேவை மேலும் மேலும் விரிவுபட்டுச் சிறக்க என் நல்வாழ்த்துக்கள்.

ஓவியத்துறையில் தனித்திறமை பெற்றுள்ள திரு. டானியல், வெகு விரைவிலே தனது படைப்புக்களைக் கொண்ட கண்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்வதன் மூலம் கலைத்துறைக்கு மேலும் மெருகூட்டுவார் என எண்ணுகிறேன்.

ஏ. ஆர். ஏ. அசிஸ்
பீடாதிபதி

தேசிய கல்வியல் கல்லூரி
அட்டாளைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை....

இன்று பாடசாலைகளில் கற்பிக்கப்படும் அழகியல் பாடங்களில் சித்திரக்கலை முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. செய்முறை பரீட்சை மாத்திரமின்றி எழுத்து மூலப் பரீட்சைக்கும் மாணவர்கள் கட்டாயம் தோற்ற வேண்டியுள்ளனர். பண்டைய மக்களின் கலை பற்றியும் அவற்றின் வரலாறு (HISTORY), தொன்மை (ARCHAEOLOGICAL) கலைப்பாணி போன்ற விடயங்கள் சம்மந்தமான வினாக்களுக்கு மாணவர்கள் விடை எழுத வேண்டியுள்ளது. இது தரம் 6 இல் இருந்து 13 வரை நடைமுறைப் படுத்தப்படுகிறது.

தமிழ் மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இது விடயமான தகவல்களையோ குறிப்பையோ பெற்றுக் கொள்வதற்கான சஞ்சிகையோ, நூல்களோ இல்லை. அவ்வாறு வெளிவந்த நூல்களாயினும் பூரணத்துவமான முறையில் மாணவரின் தேவையை பூர்த்தியாக்கக் கூடியதாக இல்லை. சித்திரம் கலைமதிப்பீடு என்னும் இச்சிறு நூல் அக்குறையை நிறைவேற்ற முயற்சிக்கின்றது.

எனவே இந் நூலில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் எழுதப்பட்ட விடயமானது, நம் நாட்டின் புராதன கலை, கலாசாரம், சிற்பம், சுவரோவியம், கைவினைப்பொருட்கள், அலங்கார வடிவங்கள் என்பவைகளை விமர்சிப்பதாகும்.

ஒரு நாட்டின் பண்டைய கலை, அதன் வளர்ச்சி, செறிவு, தனித்துவம் என்பவற்றை கொண்டே அந் நாட்டின் வரலாறு, வாழ்க்கைமுறை, கலாசாரம், முன்னேற்றம் என்பவற்றை அறியலாம்.

உலகம் தோன்றிய காலம் முதல் பல்வேறு பேரரசுகள் தோன்றி மறைந்தாலும் அப்பேரரசுகள் காலத்தில் உருவாக்கப்பட்ட கலைச் செல்வங்கள் அழியவில்லை இறக்கவும் இல்லை அவை மாறும் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்று உயிர்த்துடிப்புடன் வளர்கின்றன என்பது மறக்க முடியாத உண்மை. எனவே இந்நூலில் எழுதப்பட்டுள்ள விடயங்கள் வெறும் கற்பனை கட்டுரைகள் அல்ல.

மாணவரின் பாடத்திற்கு ஏற்ப பரீட்சையை நோக்கமாக கொண்டு நன்கு தெளிவாக ஆராயப்பட்டு சரியான தகவல்களுடன் மாணவர்களுக்கு விளங்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

ஒரு அத்தியாயத்தில் தேவையின் பொருட்டு குறிப்பிடப்பட்டுள்ள விடயம் மறு அத்தியாயத்தில் விபரமாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தொடர்பு காணப்படுவது சிறப்பானதொரு அம்சமாகும்.

சிங்கள கலையைப்பற்றி கூறும் போதெல்லாம் அதற்கு சமமான தமிழ் கலையைப் பற்றியும் எழுதியுள்ளேன். இப்புத்தகம் சிறிதாயினும் இதை உருவாக்க எடுத்துக்கொண்ட காலமும், சிரமமும் அதிகமாகும். நேரடியாகப் பார்த்தறிந்ததிலும் பல நூல்களை படித்ததன் மூலமும், புகைப்படங்கள், வரைபடங்கள் தேடுவதிலும், அதிக முயற்சியும் காலமும் தேவைப்பட்டன. இந்நூலை உருவாக்குவதற்கு உதவி புரிந்த நண்பர்களுக்கும், அறிஞர்களுக்கும் நன்றிகூறுகின்றேன்.

ஆங்கில, சிங்கள நூல்களை அழகு தமிழில் மொழிபெயர்த்து உதவிய திரு. என். தெய்வநாயகம் (ஆங்கில ஆசிரியர்) திரு செ. பேரின்பராசா (ஆசிரியர்) செல்வன் சீ ரவீதிரன். தேவையான ஆலோசனை வழங்கிய திரு. மா. பேரானந்தம் (அதிபர்) ஜனாப் எம் எச். புகாரி. (போதனாசிரியர்) திரு எஸ். தருமரெத்தினம், (ஆசிரியர்) ஆகியோருக்கும் எனது நன்றியை கூறுகின்றேன்.

பல அலுவலக வேலைப் பளுவின் மத்தியிலும் அணிந்துரை வழங்கிய வலய கல்விப் பணிப்பாளர் திரு க. முத்திலிங்கம் ஐயா அவர்கட்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந் நூல் மாணவர்கட்கு மாத்திரமன்று, நம் நாட்டின் பண்டைய மக்களின் கலையை அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் ஏற்றது. இறுதியாக இந்நூலைஅழகிய முறையில் உருவாக்கிய ஜெஸ்கொம் அச்சகத்தாருக்கும் என் நன்றிகள்

சி. டானியல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்:

1. இலங்கையின் பாரம்பரிய கைப்பணிக் கலை

❋ முகமூடிகள் ❋ தும்பறைப்பாய் ❋ அரக்குவேலை
❋ மட்பாண்டங்கள் ❋ தமிழர் பாரம்பரிய கைப்பணிக்கலை
❋ குத்துவிளக்கு ❋ கோலமிடுங்லை

2. இலங்கையின் சிறப்புவாய்ந்த பண்டைய சிற்பங்களும், கட்டிடங்களும் 08

❋ இலங்கையின் பூர்வீக சிற்பங்கள் ❋ ஆயிரங்கால் மண்டபம்
❋ நீர்த்தடாகங்கள் ❋ ஈசுருமுனிய விகாரைச் சிற்பங்கள்
❋ நீராடும் யானைகள் ❋ குதிரைத்தலையும் போர் வீரனும்
❋ அரச குடும்பம் ❋ காதலர் சிற்பம் ❋ பொலநறுவை சிற்பகட்டிடக்கலை
❋ பராக்கிரம சிலை ❋ நிசங்கலதா மண்டபம்

3. இலங்கையின் பௌத்த சிற்பக் கட்டிடக்கலை 14

❋ தாது கோபுரங்கள் ❋ தாதுகோபுர வடிவங்கள்
❋ தாது கோபுர அங்கங்கள் ❋ பழமையான தாது கோபுரங்கள்
❋ கைப்பிடி வரிசை ❋ காவற்கல் (முறகல)
❋ பைரவர் உருவங்கள் ❋ வாமனரூபங்கள் ❋ சந்திரவட்டக்கல்
❋ வாசல் கடை ❋ பூரண கலசம்
❋ கற்பக விருட்ஷம் ❋ வட்டதாகே ❋ பொலனறுவ வட்டதாகே
❋ சிற்பத் தூண்கள் ❋ புத்தர் சிலைகள்
❋ இருத்தல் வடிவங்கள் ❋ நிற்றல் வடிவம் ❋ சயனித்தல் வடிவம்

4. இலங்கையின் புராதன ஓவியக்கலை 30

❋ விகாரைச்சித்திரங்கள் ❋ புராதன ஓவியங்கள் ❋ சிதுல் பௌவா
❋ மகிந்தலை ❋ ஹிந்தகலா
❋ தந்திரிமலை ஓவியம் ❋ திம்புலாகல ❋ புலிகொட
❋ மஹியங்கண ❋ சிகிரியா சுவர் ஓவியங்கள்
❋ டம்புள்ள குகை ஓவியங்கள் ❋ பொலனறுவை கால ஓவியங்கள்
❋ பொலனறுவை வட கோயில் ❋ திவங்க பிலிமகே

5. கண்டிக் கலை 41

❋ சுவரோவியங்கள் ❋ விகாரை ஓவியங்கள் ❋ தெகள்தொறுவ
❋ தலதா மாளிகை ❋ எம்பக்கே செதுக்கு வேலைப்பாடுகள்
❋ இலங்காதிலக விகாரை ❋ கடலாதேனிய ❋ யாப்பகூவா அரண்மனை

6. இலங்கையில் திராவிடக்கலை 50

❋ இந்து ஆலய அமைப்பு ❋ புராதன இந்து ஆலயங்கள்
❋ திருக்கோணேஸ்வரம் ❋ திருக்கேதீஸ்வரம்
❋ முனீஸ்வரம் ❋ கொக்கட்டிச்சோலைதான்தோன்றீஸ்வரர் ஆலயம்
❋ நயினாதீவு நாகபூசனிஅம்மன் ❋ நல்லூர் கந்தசுவாமி ஆலயம்
❋ பொன்னம்பலவாணேஸ்வரர் ❋ மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்
❋ சித்திவேலாயுதர் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கலச் சிலைகள்

- நடராஜ வடிவம் ❋ திருகோணமலை சோமஸ்கந்தமூர்த்தி
- பத்தினி (கண்ணகி) ❋ விநாயகர் சிலை 59

7. இலங்கையின் புராதன அலங்கார வடிவங்கள் மலர் அலங்காரங்கள்

- தாமரை மலர் ❋ அன்னாசி மலர் ❋ பினர மலர் ❋ தாழம்பூ
- கத்தரி மல் ❋ சப்பு மல் ❋ எசல மல் ❋ கடும்புல் மல்
- சீன மலர்

விலங்கு வடிவங்கள்

- சிங்க உருவங்கள் ❋ கஜசிங்கம் ❋ கேசரி ❋ சாட்டை பிடித்தசிங்கம்
- யாழி ❋ தேசியக் கொடியில் சிங்கம்

பறவை வடிவங்கள்

- அன்னம் ❋ மயில் (மொனரா)

விசித்திர வடிவங்கள்

- மகரம் ❋ மகர தோரணம் ❋ பேருண்ட பஷ்சய ❋ மகரம்
- மகரதோரணம் ❋ சேரபேந்து ❋ குஞ்சரப்பறவை
- மகரமும் தாமரையும் ❋ இராட்சத முகம் ❋ நாககுறியீடுகள்
- திரிங்குதல ❋ தோட்டலங்காரம் ❋ சுவஸ்திகா

புராதன கலையாக்கங்களில் கன்னியர் வடிவம்

- நாரிலதா (பூங்கன்னி) ❋ கின்னரப் பெண் ❋ நவநாரிக்குஞ்சரம்
- பஞ்சநாரி பல்லக்கு ❋ பஞ்சநாரி கட ❋ மல்யுத்தம்
- விஸ்வகர்மதேவர்

பிரயோக அலங்காரங்கள்

- சிப்புரு ❋ அரும்புவ ❋ ஒற்றைப்பட்டுக்கயிறு ❋ குந்திருக்க
- கல்வட்டம் (கல்பிந்து) ❋ தனிச்சுழி ❋ இரட்டைச்சுழி
- சுழிக்கோடு ❋ நீரலை ❋ சவடி ❋ பூவும் மொட்டும்
- அரசிலை ❋ சலுப்பொட்ட ❋ முத்துதெல
- பூங்கொடி (வள்ளிக் கொடி) ❋ தீச்சுடர் ❋ வல்பொத
- கலஸ்தங்கய

8. இஸ்லாமியக் கலை 78

- இஸ்லாமிய பள்ளிவாசல்கள் ❋ இஸ்லாமிய மகுதிகள்
- இஸ்லாமிய அலங்கார வேலைப்பாடுகள்

9. இலங்கையில் ஐரோப்பிய கலை

- மேலைத்தேய கிழைத்தேய ஓவிய முறை
- இலங்கை ஓவியக் கலையில் 43 ஓவியக் குழுவின் பங்களிப்பு

சிறப்பு வாய்ந்த ஓவியர்கள்


- சோளியஸ் மென்டிஸ் ❋ ஜோர்ஜ்கீட் ❋ AGS அமரசேகர
- HTP மஞ்சு சிறி ❋ டேவிற் பெயின்டர் ❋ JDA பெரேரா
- களனி விகாரை சுவர் ஓவியங்கள் ❋ கோதமி விகாரை ஓவியங்கள்
- எம் சாள்ஸ் ❋ ஸ்டான்லி அபேசிங்க ❋ திசரணசிங்க
- ஜஸ்டின் தெரனிகல ❋ றிச்சட் கெப்ரியல் ❋ ஐரவன் பீரிஸ்

கிறிஸ்தவ தேவாலயங்கள்

- பொறளை சகல புனிதர் தேவாலயம் ❋ கண்டி கிறிஸ்தவ ஓவியங்கள்
- கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் ❋ ஆனந்த குமாரசாமி
- ஓவியர் மார்க் ❋ SR. கனகசபை ❋ எம். எஸ். ஏ. ஆஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பாரம்பரியக் கைப்பணிக் கலை



நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஆசிய நாடுகளின் கலை, கைப்பணி, கைத்தொழிற் பொருட்கள் மிக முக்கியமான தொன்றாகும். இலங்கையின் கலாச்சாரக் கலை வளர்ச்சிக்கும், வளமைக்கும் இந்தியக் கலையும்கலைஞர்களும் மிக முக்கியமானவர்கள். இந்தியக் கலைஞர்கள் ஒன்றில் வந்து குடியேறியவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது ஆரியர்களாலோ, பௌத்த மதம் பரப்பும் குழுவினர்களாலோ இங்கு அழைத்து வரப்பட்டிருக்கலாம். எனவும் கூற இடமுண்டு. கொல்லர். பொற்கொல்லர், கல்வெட்டுவோர், தச்சர், துணி நெய்வோர், குயவர்என்போர் இவர்களில் அடங்குவர்.

காலப்போக்கில் இலங்கையின் கலைவடிவங்களிலும், படிமங்களிலும் இந்தியச் செல்வாக்கு தெளிவாகப் பிரதிபலிக்கிறது. இருந்த போதிலும் இலங்கையின் உள்நாட்டு பாரம்பரியம், இந்தியக் கலைகளினால் பாதிப்படையவில்லை எனவும் கூறலாம்.

கைப்பணிப் பொருட்கள் ஒரு நாட்டின் கலைத்திறனையும், படைப்பாற்றலையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. அவை அந்நாட்டு மக்களுக்கே உரித்தான வாழ்க்கை முறை, சூழல், அவர்களின் வரலாறு, கலாச்சாரம் என்பவற்றைப் பிரதிபலிக்கும் சாதனமாகவும் விளங்குகின்றன.


ஒவ்வொரு கலைப்படைப்புப் பற்றியும், தனித்தனியாக விளங்கிக்கொள்வதற்கு அவை தோன்றிய பிரதேசத்தினது பின்னணி பற்றி பரிசீலிப்பது பொருத்தமுடையதொன்றாகும். சிலவகைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் குறித்த பிரதேசங்கள் விஷேட நிலையை அடைந்துள்ளன. மூலப்பொருட்களின் செறிவு, ஆதரவு இவற்றின் தேவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ்விசேட நிலை தோன்றுகிறது. பித்தளை, வெள்ளிப் பாத்திரங்கள், புடவை, நெசவு பற்றிக்(Batik), பின்னல் வேலை, மரச் செதுக்கு வேலைகள், மூங்கில் பொருட்கள், பிரம்புக்கைப்பணி வேலைகள், மட்பாண்டங்கள் என்பன இவற்றில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கைப்பணிப் பொருட்கள் என்றால் அவை கைகளினால் செய்யப்பட்ட பாரம்பரிய பெறுமதி மிக்க பொருட்களாகும். அவற்றின் கலைத்திறனும், அழகியற் பெறுமானமும் காணப்பட்டால் ஒழிய கையினால் செய்யப்படும் எல்லாப் பொருட்களும் கைப்பணிப் பொருட்களாகா! வரலாற்று பின்னணியைக் கொண்டதும், பாரம்பரியமொன்றை சித்தரிக்கும் கலைப் படைப்புக்களே கைப்பணிப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. பாவனைகளுக்காக மட்டும் செய்யப்படும் ஏனைய பொருட்களில் இருந்து இவற்றை வே 'படுத்திப் பார்க்கவேண்டும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பல அலங்கார பாவனைக்குரிய கலைப் பொருட்கள் சுமார் இருபத்தைந்து நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும். கலைத்துறை ஆக்க முயற்சிக்கு உயர்ந்த நிலையிலாக அவை கருதப்படுகின்றன. இன்றும் கொழும்பு, கண்டி அரும்பொருட் காட்சிச் சாலையில் (Museum) வைக்கப்பட்டிருக்கும் புராதன கைப்பணி உபகரணப் பொருட்களும் களபாடங்களும் அவற்றை இன்றும் சான்று பகர்வையாகத் திகழ்கின்றன.



(1)

மட்பாண்டத்தின் அலங்காரம்



(2)

சாவித் துவாரம் உலோக வேலை

கண்டி மாவட்டத்தில் பெரும்பாலான கலைஞர்கள் பித்தளை, வெள்ளிப் பொருட்கள் நகைகள் போன்றவற்றை உருவாக்குவதில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஹேனவெல' தும்பறை போன்ற கிராமங்கள் அலங்காரப் பாய்கள் செய்வதிலும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. எம்பக்கே, 'கலாபுர, குள்னேபான ஆகிய கிராமங்கள் மரச்செதுக்கு வேலைகளுக்குப் பெயர் பெற்றவை. கூரகல, கூரகந்த, தெனியாய பறைகள் (மேளம்) செய்வதில் பேர்போனவை. பித்தளை, வெள்ளி வேலைகளுக்கு தத்தரம்பொல, தந்தூர, போமுனே நிலனவெல, உளுவந்துபிட்டிய, வன்னிபொல, கிரிவுலகடதெனிய தெளிவல, பமுணிவ போன்ற கிராமங்கள் புகழ் வாய்ந்து விளங்குகின்றன உலோக வேலைகளை துந்தன்வெட என சிங்களத்தில் அழைப்பர்.

அம்பாந்தோட்டையில் மட்கலம் வனைதற் தொழிலும், யாழ்ப்பாணத்தில் பனை ஓலையோடு அடிப்படையாகக் கொண்ட பொருட்களும், மட்டக்களப்பு பகுதியில் பிரம்பு இழைப்பு, பன்பாய் வேலையும் குருநாகலில் ஓலையை அடிப்படையாகக் கொண்ட கைப்பணிப் பொருட்களும் சிறந்து விளங்குகின்றன.

கைப்பணிப் பொருட்கள் என்பது குடிசைத் தொழில் அடிப்படையில் கைத்திறனமையினால் ஓரளவு பயன்பாடும், உயர்ந்த அழகியல் பெறுமானமும் உள்ள பொருளாகக் கருதப்படுகின்றன. இன்றைய இலங்கையில் கைப்பணித் தொழிலை இரு பிரிவாக்கலாம். பெறுமதியுள்ள கலைப் பெறுமானம் உள்ளவை - இரத்தினக்கற்கள், தங்க நகைகள், வெள்ளியினால் செய்யப்பட்ட பொருட்கள். மற்றயவை பயன்பாட்டுப் பெறுமதியுள்ளவை - மட்பாண்டங்கள், விளையாட்டுப் பொருட்கள், மரச் செதுக்கு வேலைப்பாடு நிறைந்த கலைப் பொருட்கள். இவற்றைக் குறைந்த வருமானம் உள்ளவர்களே வாங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மத்தியகால இலங்கையில் வாழ்ந்த கலை ஆசான்களும் அவர்களின் கீழ் பணிபுரிந்த சகல கலைஞர்களும் அரச அனுசரணையுடன் நடாத்தப்பட்டார்கள். இக் கலைஞர்களின் வழித்தோன்றல்கள் இன்று வாழ்ந்து வருவதுடன் எமது நாட்டின் அருமையான கலைப்பாரம்பரியத்திற்கு அவர்களின் பங்களிப்பினை செய்து வருகின்றார்கள். மாபெரும் கலைஞர்களின் பெயர்கள் அவர்கள் விட்டுச் சென்ற கலைப்படைப்புக்களில் காணக் படவில்லை. எனினும் ''வித்திபொத்'' எனும் தகவல் திரட்டும் சிங்கள நூலில் காணக் கூடியதாக உள்ளது. அரத்தாள தேவேந்திர மூலாச்சாரிய என்னும் கலைஞர் கண்டிக் காலத்தில் சிறந்ததொரு கலைஞராக விளங்கினார்.

இவரின் வழித்தோன்றலில் ஒருவரான் தந்தசிங்க மூலாச்சாரிய பட்டபத்தி என்பவர் தங்கம், பொன், வெள்ளி வேலைகளில் கைதேர்ந்த கலைஞராக விளைங்குகின்றார். இன்றும் W. M. ஜீவத்காமி என்ற கலைஞர்கள் யானைத்தந்த செதுக்கு வேலைகளில் சிறந்து விளங்கி வருகின்றார்.

கலைநுட்ப வேலைப்பாட்டையுடைய கைப்பணி வேலையை சிங்களத்தில் ''விஸ்வ கர்மவெட'' எனக் கூறுவர். வேலைத்தளப் பயிற்சியும், கலை நுணுக்கங்களைப் படிப் படியாகக் பேணி போதிப்பதில் குருசீடர் மிக அன்னியோன்னியமாக இணைந்து இருந்தனர் பாரம்பரிய கலைகள் நலிவுறாது பல நூற்றாண்டுகளாக பேணிப் பாதுகாக்க இம்முறையே உதவியது எனலாம். இன்று இலங்கையில் கைப்பணித் திறனை வளர்க்கும் பொருட்டு இலங்கை கைப்பணிச்சபை, சிறுகைத்தொழில் திணைக்களம் என்னும் அரச நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன. கற்பகம், லக்சல போன்ற நிறுவனங்கள் கைப்பணிப் பொருட்களை கொள்வனவு செய்து கலைஞருக்கு உதவும் அரச நிறுவனமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

## முகமூடிகள் (வெஸ்முன)



சிங்கள கலாச்சாரத்தின் பாரம்பரியங்களில் முகமூடி அணிந்து நடனமாடுவது மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. 'வெஸ்முன' என சிங்களத்தில் அழைக்கப்படும். இம்முகமூடி செய்வதற்கு கடல்தேங்காய்(கதுறு) எருமடு, ருக்கத்தன போன்ற மரங்கள் பயன் படுத்தப்படுகின்றன.


இன்று இலங்கையில் முகமூடி செய்தல் அம்பலாங்கொட எனும் கிராமத்தில் ஒரு சிறந்த கைத்தொழிலாக விளங்குகிறது. கடைகளில் விற்பனைக்காக உருவாக்கப்படும் சிறு முகமூடிகள் இவற்றில் இருந்து வேறுபட்ட ஒன்றாகும். இவை அலங்காரப் பொருளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது. முகமூடிகள் உருவாக்குவதில் மேற்கூறிய மரங்களை கூரிய கத்தியினால் முகத்தோற்றத்தைத் செதுக்கி அதன்பின் வெள்ளைக் கலவையினால் முகத்தோற்றத்தை உருவாக்கி சிவப்பு, மஞ்சள், வெள்ளை, கறுப்பு, ஆகிய நிறங்களைப் பயன்படுத்தி அழகு படுத்துவர். இவ்வர்ணங்கள் பூசப்பட்ட முகமூடிகள் பளபளம்பாய் தோன்றுவதற்கு 'ஹெல்' மரத்தின் பசையைப் பூசுவர். முகமூடி நடனம் இலங்கையில் உறுகுணு இராச்சியத்தின் கோல நடனங்களில் இடம் பெற்ற ஒன்றாகும். இன்று இன்நடனம் ஒரு சமயச் சின்னமாகவும், நோய், நொடி, துன்பம், என்பவற்றில் இருந்து மக்களைக் காப்பாற்றும் என்னும் ஐதீகக் கொள்கை சிங்களமக்களிடையே இருந்து வருகின்றது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந் நடனமானது பிற்காலத்தில் பொழுது போக்கிற்காக ஆடப்படும் ஒரு கலாச்சார நிகழ்ச்சியாக விளங்கி வருகின்றது.

நாடோடிக் கதைகள், அக்கதையில் வரும் கதாபாத்திரங்கள், மிருகம், பறவை போன்றவற்றின் முகங்களை முகமூடிகளில் செய்து நடனமாடுவர். இது இந்துக்களின் முருகன் ஆலயங்களில் நடைபெறும் சூரன் போரைப் போன்று இருக்கின்றது. கொடிய அரக்கர்களின் விகாரமான முகங்கள், பிதுங்கியகண்கள், பெரியமூக்கு, இரத்தம் தோய்ந்த பெரிய நாக்கு, கோரைப்பற்கள், காதுக்குப்பதிலாக பாம்பு உருவங்கள் என்பன முகமூடிகளில் உருவாக்கப்பட்டன. இவ்வாறான கொடூர வடிவங்கள் இந்து ஆலயங்களில் விக்கிரக அமைப்பில் அமைந்து காணப்படுவது குறிப்பிடதக்கது. இவற்றைப் பார்ப்போர் பீதியும், அச்சமும் ஏற்படும் தன்மையில் அவை அமைந்து விளங்குகின்றன. இந்தோசீனாவில் கருடன் (குருளு) முகமூடி இலங்கையின் முகமூடிகளுடன் ஒத்த தன்மைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றது.



## தும்பறைப் பாய்

கண்டி மாவட்டத்தில் தும்பறை பள்ளத்தாக்கில் குடிசைத் தொழிலாக சிறப்பு வாய்ந்த தும்பறைப் பாய்கள் பின்னப்படுகின்றன. இப்பகுதி மக்கள் இத் தொழிலை பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்றார்கள். இப்பாய்களுக்கான மூலப்பொருள் 'லியந்த லேனிக்கா' போன்ற ஒருவகைப் பூண்டில் இருந்து பெறப்படுகின்றது. இச் செடிகளில் இலைகள் உருண்டை வடிவான தண்டுகள் போன்றவை. இவை முதலில் 'கெவல்ல' என்னும் கத்தியினால் சீவப்பட்டு பசைப்பிடிப்பான நடுப்பகுதிகளில் பொறியினால் நசுக்கப்படுவதனால் எஞ்சிய பகுதி மென்மையான நார் போன்று உருவாக்கப்படுகிறது. பின்பு வேண்டிய வர்ணங்கள் சேர்க்கப்பட்டு அழகிய பாய்கள் பின்னப்படுகின்றன.

முற்காலத்தில் இதற்கான வர்ணங்களை இயற்கையான பொருட்களில் இருந்தே பெற்றார்கள். 'பதங்கி' என்னும் மரப்பட்டையை பதப்படுத்திய நாருடன் சேர்த்து அவிப்பதால் மஞ்சள் நிறம் பெறப்பட்டது. கடுக்காயுடன் சேர்த்து அவிப்பதால் கறுப்பு உண்டாக்கப்பட்டது. மரமஞ்சளுடன் (வனிநிவல்) கொறுக்காயைச் சேர்ப்பதால் சிவப்பு வர்ணம் பெறப்பட்டது.

இப்பாய்களில் பின்னும் அழகிய சித்திர வேலைப்பாடுகள் 'பெதுறுகலாவ, என சிங்கள மொழியில் அழைக்கப்பட்டன. மயில், யானை, பறவைகள், கொடி, சவடி குந்திரிக்கம் போன்ற அலங்காரங்கள் இப்பாய்களில் உருவாக்கப்பட்டன. டைமன் (DIAMOND) முக்கோண இழைப்பினதாய் இவ்வலங்காரங்கள் அமையப் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரக்கு வேலை (லாகிரி வெட)

இந்த அரக்கு வேலை அநேகமாக கண்டி மாவட்டத்தில் பலாங்கொடை என்னும் பகுதியில் கைத்தொழிலாக நடைபெறுகிறது. முக்கியமாக விரல்நகங்களே இதற்குப் பயன் படுத்துவதால் 'நியபொத வெட' எனச் சிங்களத்தில் கூறப்படுகிறது. 'லாகிரி' என்பது ஒருவகையான பூச்சியினால் சேகரிக்கப்படும் பிசின் கலந்த மெழுகாகும். இது இருவகையான பூச்சிகளில் இருந்து பெறப்படுகிறது.

'கெபிடிய' அல்லது 'கொன்வாகட' இது பல மரங்களில் காணப்படுகிறது டொகியிய வாகட இது இன்னுமொரு தாவரத்தில் இருந்து பெறப்படுகிறது. லக்கர் (லாகிரி) வேலை செய்யும் தொழிலாளர் 'ஈவடுவா' என அழைக்கப்படுகிறார்கள் லக் பூச்சிகளுடைய புதிதாக எடுக்கப்பட்ட மரக்கிளைகளை வெயிலில் காயவைத்து அதில் வடியும் பிசின் சேகரிக்கப்பட்டு நன்கு இடிக்கப்பட்டு பின் அரிக்கப்பட்டு இதை உருக்கிய பின் மெல்லிய சீலையினால் வடிகட்டுகிறார்கள். லக்கர் நார் போல இழுக்கப்பட்டு சுற்றிப் பதமாக்குவர். பின் கொடித் தண்டு கைப்பிடிகள், ஆலவட்டம் சாம்பல் கிண்ணம், ஜன்னல்தடிகள் போன்ற அலங்காரப் பொருட்களை மிக அழகாகச் செய்கின்றார்கள். இதில் சேர்க்கப்படும் சாதிலிங்கம் இளஞ் சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், கறுப்பு போன்ற வர்ணங்கள் சேர்க்கப்படுகின்றன. 'புஸ்கொழ' எனப்படும் ஒரு வகை இலைபள பளப்புக்காகப் பயன்படுத்தப்படுகிறது. குந்திரிக்கம், சவடி போன்ற அலங்கார வடிவங்கள் இவற்றில் உருவாக்கப்படுகின்றன.

# மட்பாண்டங்கள்

கண்டி, கொழும்பு, அரும் பொருள் காட்சிசாலையில் (**Museum**) காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் சட்டி, பானை, குடம், அரிக்கன் போன்ற மட்பாண்டங்களையும் அவற்றிலுள்ள அலங்கார வேலைப்பாடுகளையும் கொண்டு பாரம்பரியக் கைத்தொழிலாக மட்பாண்ட வேலை நிலவி வந்துள்ளது என்பதை அறியலாம்.

மட்பாண்ட வேலை இந்தியக் கைப்பணியாளர்களும் கலைஞர்களும் எமது பணியா ளர்களுக்கு பழக்கிக் கொடுத்தது ஒன்று எனலாம். களிமண் ஓடுகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றவற்றை செய்வதற்கு வனைசில் (சக்கரம்) உபயோகப் படுத்தினர். இம்மட்பாண்ட அலங்கார வேலைப்பாடு செய்வதில் இரு முறைகள் கடைப்பிடிக்கப் பட்டன. மட்பாண்டப் பொருட்கள் சூளையில் இடமுன் கூரிய ஈக்கில் போன்ற ஒன்றினால் கோடு கள் வரைந்து அலங்கரித்தல் சூளையில் இட்டபின் வர்ணங்களால் அலங்கரித்தல் என்பவையே அவைகளாகும்.

பதிய பலல, மதுர, தம்புள்ள, நாயகும்பர போன்ற இடங்கள் மட்பாண்ட வேலைகளுக்கு சிறந்து விளங்குகின்றன. இன்று களனிப் பிரதேசம் மட்பாண்ட வேலைக்கு சிறப்பு வாய்ந்து விளங்குகின்றது. வர்ணம் தீட்டுவதற்கு வெண்களி (மகுலு) வெள்ளை வர்ணத்திற்காகவும் குருகுல சிவப்பு வர்ணத்தையும் உண்டாக்கவும் மினிரத கறுப்பு வர் ணத்திற்காகவும் உபயோகிக்கப்படுகின்றது.

மீன்வடிவம் அரசிலை சுவடி போன்றவை கோடுகளால் அலங்கார வடிவங்களாக பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பாரம்பரிய கைப்பணிக் கலை


இலங்கைத் தமிழர் மத்தியிலும் கலை கைப்பணிப் பொருட்கள் பற்றியும் நாம் அறிய வேண்டியதாயுள்ளது. முன்பக்கத்தில் கூறியபடி புதிதாக உருவாக்கப்படும் ஒன்று கலை எனவும் பாரம்பரியமாகச் செய்யப்படும் ஒன்றினைக் கைப்பணி எனவும் நாம் கருதியாக வேண்டும்.

கோயிற் சிற்பங்கள் செய்தல், திரைச்சீலை ஓவியம் தீட்டுதல், தேர்ச் செதுக்குச் சோடனை வேலைகள், விக்கிரக வார்ப்புகள், தோரணம் கட்டுதல், காவடிகள் ஆலவட்டம், திருவாசி, சுவாமியைத் தாங்கும் வாகனம் அமைத்தல், மாலை கோர்த்தல், சாத்துப்படி கட்டுதல், குருத்தோலை அலங்கார வேலைப்பாடுகள், கோலம் போட்டு அலங்கரித்தல். இவைகள் மத சம்பந்தமான ஒரு பாரம்பரியக் கைப்பணி வேலைப்பாடாகும்.

பன்னீர்ச் செம்பு, குடம், குத்துவிளக்கு, கிண்ணம், வெற்றிலைத் தட்டம், செம்பு, வட்டி, சேவரக்கால் போன்றவை தமிழ் சமூகப் பண்பாட்டோடு இணைந்த கைப்பணிப் பொருட்களாகும்.

மரத்தினால் செய்யப்படும் உரல், உலக்கை, நீர் இறைக்கும் பட்டை (ஏத்து) இடியப்ப உரல் தட்டு, திருவு பலகை, உறி, திருகைக்கல், அம்மி, பாய் உமல் இளைத்தல் போன்ற பொருட்கள் தொழில் நுட்பத்தோடு சேர்ந்த வேலைப்பாடாகும்.

தங்கம், பொன், வெள்ளி என்பவற்றால் செய்யப்படும் அலங்கார அணிகலன்களான மோதிரம், காப்பு, வளையல்கள், குண்டலம், ஒட்டியானம், கால்களுக்கு அணியும் கொலுசு, கரணை போன்றவையும் தலை அலங்கார ஒப்பனைப் பொருட்களும் பாரம்பரியமான தமிழர் அலங்கார கைப்பணிப் பொருட்களாகும். இப்பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது உருவாக்குதல் பிரதேச அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் தொழிலாகக் கொள்ளப்படுவது கவனிக்கத் தக்கதொன்றாகும்.



## குத்துவிளக்கு

பண்டைத் தமிழர் நாகரிகத்தில் உன்னத நிலையை உணர்த்தும் புரதான சின்னங்களாக குத்து விளக்குகள் விளங்குகின்றன. கிறிஸ்து சகாப்தத்தின் முன்னரே இவ் வலங்கார விளக்குகள் பாவனையில் இருந்தன என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

அன்றும் இன்றும் குத்து விளக்குகளை ஆலயங்களுக்குத் தானம் செய்யும் முறை இருந்துவருகிறது. இவை தீப தானம் என அழைக்கப்படுகின்றன. தானமாக வழங்கப்பட்ட விளக்குகள் பலவகைப் பட்டவையாகும். சுவாமிக்கு ஆராத்தி எடுப்பதற்காக உபயோக்கப்படும் விளக்குகள் ஒருவகை திருவுருவங்களுக்கு முன்னால் இராக்காலத்தில் நின்று எரியும் விளக்குகள் இன்னொருவகை. தாழ் விளக்கு என்பதும் அதிலொரு வகை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தா விளக்கு என்பது இராக்காலங்களில் திருவுருவங்களுக்கு முன்பாக எரியப் பயன்படுத்தப்பட்டன. சர்வ சாதாரணமாக இவ்விளக்குகள் பித்தளையிலே காணப்படுகின் றன. எனினும் வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகங்களிலும் இவ்விளக்குகள் அமைக் கப்படலாயின. அனேகமாக இவ்விளக்குகள் குத்து விளக்காகவும் பெரும்பாலும் தூக்கு விளக்குகளாகவும் அமைக்கப்பட்டன. தூக்கு விளக்குகள் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட் டிருந்தன. சேவல், அன்னம், மயில் போன்ற அலங்கார வடிவங்களில் அமைக்கப்பட்டு விளங்கின. இன்னும் சிங்கம், யானை முதலியவற்றின் உருவங்களைக் கொண்டதாகவும் அமையப்பெற்றிருந்தன.

இம்மங்கல விளக்குகள் ஐந்து, ஏழு, ஒன்பது என்னும் திரிகளைக் கொண்டதாக ஒற்றைப்பட விளங்கின. தூண்டாமணி விளக்குகள் உச்சியில் வடிவத்தையும் நடுவில் எண்ணை கொள்ளும் பீப்பா போன்ற பகுதியையும் அடியில் திரி கொள்ளும் பகுதியையும் தாங்கிய வண்ணம் திகழ்ந்தன. இன்றும் இந்துக்களின் வீடுகளில் பூரணகும்பத்துடன் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளில் குத்துவிளக்குகள் முக்கிய பங்கினைப் பெறுகின்றன. இக்குத்து விளக்குகள் இல்லாத தமிழ் இல்லங்கள் குறைவு எனலாம். இந்து ஆலயங்களில் தீபாராதனை முக்கியமான தொன்றாக விளங்குகின்றது.

## கோலமிடுங்கலை



கோலம் போடுதல் தமிழ் நாட்டுக் கலைகளில் ஒன்று. கோலம் என்பது அழகு, ஒப்பனை மாதிரி என்ற பொருளும் உண்டு.

பெருவிரலுக்கும், அடுத்தவிரலுக்கும் இடையில் கோலம் பொடியினை வைத்து கோடுகளாக நிலத்தில் விழுமாறு செய்து தரையில் வடிவங்களை உருவாக்குவதே கோல மிடுதல் எனப்படும்.

மந்திரத்தகட்டில் வரைவது போன்று மாவினால் தரையில் கோலம் அமைத்து வழிபடும் முறையே பிற்காலத்தில் கலைநுட்பம் நிறைந்த கலையாக வளர்ந்தது.

குத்து விளக்குப் பூசை செய்பவர்கள் கோலம் இட்டு அதன்மீது விளக்கை வைத்து வழிபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலம் போடுங்கலையை தனது தாய் அல்லது தமக்கை மூலமே தமிழ்ச் சிறுமி கற்றுக் கொள்கிறாள்.

புதுப் பெண்ணாக கணவன் வீடு செல்லும் பெண்புதுமையான முறையாக கோலம் போடுதல் அப்பெண்ணுக்கு பெருமை தரும் ஒன்றாக தமிழ்நாட்டில் கருதப்படுகிறது. தமிழகப் பெண்களுக்கு கோலம் போடுதல் ஒரு தனி விருப்பமான செயலாகும்.


சாதாரண காலங்களில் கோலம் போடுவதற்கு அதற்குரிய வெண்களியை இடித்து வெண்மையான பொடியினைக் கொண்டும் சிறப்பான திருவிழாக்காலங்களிலும் மங்கள நிகழ்ச்சி நடைபெறும் காலங்களிலும் பச்சரிசி இடித்து மாவாக்கி கோலம் போடுதலும் மரபாகும்.

சூரிய உதயத்திற்கு முன் முற்றத்தில் தண்ணீர் தெளித்து கூட்டிவிட்டு கோலமிடுவர். ஒவ்வொரு நாட்களுக்கும் ஒவ்வொருவகையான கோலம்போடுதல் என்னும் விதியும் உண்டு.

தினந்தோறும் கோலம் இடாவிட்டாலும் நவராத்திரி, தீபாவளி, பொங்கல் போன்ற மங்கள தினங்கள் நாட்களிலும், மார்கழி மாதத்தில் மிகுந்தும் காணப்படும். மலர், சங்கு, மீன், மயில், தேர், முக்கோணம், நாற்கோணம், பாவைவிளக்கு, கோயில் ஆகியவை பெரும்பான்மை கோலங்களில் வடிவங்களாக பயன்படுத்தப்படுகின்றன.

கோலத்தில் சிக்கலான கோலத்தை சிக்கு கோலம் என குறிப்பிடுவர். புள்ளிகளை மையமாக வைத்து போடப்படும் கோலமாகும். இதனை போடுவதற்கு நினைவாற்றலும் அதிக கவனமும் தேவைப்படுறது.

புள்ளிகளை வைத்து அவற்றை நேர்கோடுகளால் இணைத்து அவற்றிடையில் வளை கோடுகள் அனைத்தும் வரைந்து அழகுபடுத்தப்படும். தேங்காய்ப் பூவினை உலரவிட்டு சாயமிட்டும், பூவிதழ்களைக் கொண்டு கோலமிடும் முறையும் உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிற் சிறப்பு வாய்ந்த பண்டைய கட்டிடங்களும், சிற்பங்களும்

ஒரு நாட்டின் பண்டைய கலை, நாகரிகம், கலாசாரம் என்பவற்றை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் அந்நாட்டின் புதை பொருட்களை நன்கு அறிய வேண்டும். அரைகுறையான உருவங்களோடு இருக்கின்ற சிற்பங்களும், நொருங்கிப் பொடியாகிக் கிடக்கின்ற மட்பாண்டங்களும், இடிந்து சிதைந்து கிடக்கின்ற கட்டிடங்களும், மழையிலும் வெயிலிலும் நிறமிழந்து காணப்படும் சுவரோவியங்களும், அக்கால மக்களின் கைபட்டு தேய்ந்து போன உபகரணப் பொருட்களும், மண்ணோடு மண்ணாகிமங்கிப் போன நாணயங்களும், பரிணாம பரம்பரையில் சிக்கி அறிவாளிகளின் மூளைக்கு சரியான வேலை கொடுக்கும் சாதனங்களாகும். இவையே பண்டைய மக்களை நம் முன்னே கொண்டு நிறுத்தக்கூடியவை. முன்னோரின் பண்பைக்காட்டும் சக்தி இவைகளுக்கே உண்டு.

அக்காலத்தில் நம் இலங்கைத்தீவும் சிறப்புற்று இருந்ததை எமது நாட்டின் புராதன சிற்பங்கள் எடுத்துக்காட்டுகின்றன. நம் நாட்டின் சிற்ப, கட்டிடக்கலையைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்வோமானால் நம் முன்னோரின் சிறப்பை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

நமது நாட்டின் வரலாறு விஜயன் இலங்கையில் அரசனாக இருந்தகாலத்தில் தொடங்குகிறது. விஜயன் இலங்கைக்கு வரமுன்பே இங்கு மனிதர் வாசம் செய்தார்கள் என்பது யாவரும் அறிந்ததொன்றாகும். நம்நாட்டின் வரலாறு தொடங்குமுன் இருந்த காலத்தை ''கற்காலம்'' எனக் கருதுவர்

இன்றும் றம்புக்கணைக்கு ஒரு கிலோமீற்றர் தொலைவில் ''படிகம்பெல'' என்னும் இடத்தில் கற்காலத்தைச் சேர்ந்த ஒரு சமாதி உள்ளது. இது யாரால்? எப்போது, கட்டப் பட்டது என ஊகிக்க முடியாமல் உள்ளது. மேலும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கரடுமுரடான கற்கால கருவிகள் வேடர் குடியிருந்த குகையருகே கண்டுபிடிக்கப்பட்டன. இவை கற்கால மனிதர்களின் முன்னேற்றத்தைக் காட்டும் அளவு கோலாக விளங்குகின்றன.

விஜயன் இலங்கை வந்தடைந்தமைக்கும் பௌத்த தூதுவர்களான சங்கமித்திரை, மகேந்திரன் இலங்கை வந்தடைந்தமைக்கும் இடைப்பட்ட காலம் 200 ஆண்டுகளாக கருதப்படுகிறது. இக்காலத்திலே அமைக்கப்பட்ட சிற்ப கட்டிடங்கள் பற்றிய ஆதாரங்கள் ஏதும் இல்லையென தெளிவாக கூறமுடியாவிட்டாலும், பலி, தொவில், கூத்து (சமயச்சடங்கு) ஆடுவதற்கான களிமண் உருவங்கள் செய்திருக்கலாம் என அனுமானிக்கக்கூடியதாகவுள்ளது. காரா, இராட்சத போன்ற தெய்வங்களுக்கு ஆலயங்கள் இருந்திருக்கலாம். இதுதற்காலிகமாக நிருமாணிக்கப்பட்டு அழிந்து போயிருக்கலாம் என அனுமானிக்கக்கூடியதாகவுள்ளது.

இலங்கையின் நிலையான சிற்ப கட்டிடக்கலை பௌத்த மத வருகையுடன் தொடங்கியதாக கூறப்படுகிறது. ஆனாலும் ஆரம்ப காலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்மக்கள் மட்டுமன்றி, ஒரு சாரார் பௌத்த மதத்தினராகவோ, பௌத்த சமயத்திற்கு ஆதரவு நல்கினராகவோ விளங்கினர் என்பதற்கு சான்றுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தைச் சேர்ந்த திட்டவட்டமான தமிழ் சிற்பங்கள் காணப்படவில்லையாயினும், கிளிநொச்சிக்கு அண்மையில் உள்ள உருத்திரபுரம் சிகிரியாவுக்கு அண்மையில் உள்ள இலக்குவெல போன்ற இடங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட சுடுமண் உருவங்கள் தெளிவாக இலிங்க வழிபாடோடு தொடர்புடையவை. இவை வரலாற்றுக்கு முந்தியதாக இருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

அனுராதபுரத்தில் புராதன காலத்தில் கற்குகைகளே பௌத்தகுருமாரின் வாசத் தலமாக பாவிக்கப்பட்டன. அனுராதபுரத்தில் உள்ள வெசகிரி விகாரை இவ்வாறானதாகும். இக்காலத்தில் இவ்வாறான குகைகள் சுவர் எழுப்பி விகாரைகளாக மாற்றப்பட்டன. டம்புள்ளை இவ்வாறு உருவாக்கப்பட்ட பௌத்த கோயிலாகும். ஈசுருமுனிய, பொலநறுவை கல்விகாரைகள் இவ்வாறு உருவாக்கப்பட்டவையே.



## பூர்வீக சிற்பங்கள்

அனுராதபுரத்தில் கி. பி. 4, 5ம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட சிற்பங்கள் இந்தியாவின் ஆந்திர (அமராவதி) நாகசினகொண்டா போன்ற இடங்களில் காணப்படும் சிற்ப மரபைக் கொண்டதாக விளங்குகின்றன. மாயாதேவியின் கனவு, இஸ்வாரத்திரியின் அற்புதம் போன்ற சிற்பங்களும் மகா இலுப்பமையில் கண்டெடுக்கப்பட்ட பளிங்கு கல்லினாலான புத்த உருவமும் இவற்றில் அடங்கும். இவற்றையே இலங்கையின் பூர்வீக சிற்பங்களாக கொள்ளலாம். இச் சிற்பங்கள் பற்றிய தகவல்கள் இதுவரையும் தெளிவாக கிடைக்கப் பெறவில்லை. இவை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

பழமை வாய்ந்த அனுராதபுர நகரம் கி. பி. 11ம் நூற்றாண்டுவரை சிங்கள மன்னர்களின் இராசதானியாக விளங்கியது. சுமார் 1000 ஆண்டுகளாக சிங்கள மன்னர்களின் வாசஸ்தலமாக விளங்கியது. அனுரதன் என்பவனே முதன்முதலாக தலைநகர் ஆக்கியமையால் அனுராதபுரம் என பெயர் பெற்றது என்பர்.

## ஆயிரங்கால் மண்டபம்

துட்டகைமுனு மன்னன் காலத்தில் அனுராதபுரத்தில் கட்டப்பட்ட மகா தூபியும் பௌத்த பிக்குகள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட ஒன்பது மாடிக்கட்டிடம் ஒன்றும் இங்கு அமைந்துள்ளது. லோக மகாபாயா செப்பு மாளிகை என்னும் பெயரும் இதற்குண்டு. 1000ற்கு மேற்பட்ட தூண்களும் உலோகம், யானைத்தந்தம் போன்றவற்றினால் உருவாக்கப்பட்ட இம் மாளிகையில் இன்று எஞ்சியிருப்பது 1000 கற்தூண்களும் மண்டபமுமே. அனுராதபுர, பொலநறுவை காலத்தில் கட்டப்பட்ட பௌத்த கட்டிடங்கள், தாதுகோபுரங்கள், அவற்றை சுற்றி அமைக்கப்பட்ட சிற்ப செதுக்கு வேலைப்பாடுகள், சந்திரவட்டக் கற்கள், சிற்பத் தூண்கள், புத்த சிலைகள் சிறப்பு வாய்ந்தவை. இவை பற்றி, அடுத்த அத்தியாயத்தில் விரிவாக கூறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்த்தடாகங்கள்

அனுராதபுர காலத்தில் உருவாக்கப்பட்ட ஸ்ஞான மண்டபங்கள் அல்லது நீரைச் சேகரித்து வைக்க உருவாக்கிய செயற்கைக் குளங்கள் முக்கியமானவை. அபயகிரி விகாரையின் அருகே கட்டப்பட்டிருக்கும் அழகிய படிக்கட்டுக்களும் இறங்கு வாயிலில் அமைந்து காணப்படும் பூரணகலசம் (பூங்கலசம்) அமைப்புக்களும் சிறப்புவாய்ந்தவை,

## ஈசுருமுனிய விகாரைச் சிற்பங்கள்

இந்தியாவின் பொற்காலம் எனக் கூறப்படுவது மௌரிய அசோகச் சக்கரவர்த்தியின் காலமாகும். குப்தர் காலம் இந்தியாவிலும் இலங்கையிலும் கலை எழுச்சி பெற்ற காலமாகும். இக்காலத்திலே அனுரதபுரக் கலைஞர் தம் ஆக்கங்களை வெளிப்படுத்தினர்.

அனுராதபுரத்தில் தேவநம்பியதீசன் காலத்தில் ஈசுருமுனிய விகாரையின் சிறப்பு வாய்ந்த கலை ஆக்கங்களை ஏற்படுத்தினான். ஈசுருமுனிய, மலைச்சுவரில் குடையப்பட்ட ஒரு விகாரையாகும். பௌத்த கோயிலுக்கு தேவையான சகல அம்சங்களையும் கொண்டுள்ளது. இவ்விகாரையின் அமைப்பு இதைத் தெளிவாக விளக்குகிறது. இலங்கையில் காணப்படும் குகை விகாரைகளில் பொலநறுவை கல் விகாரையும், இவ்விகாரையுமே மிக முக்கியமானவையாகும். இவ்விகாரையின் கற்பாறையில் இருபது வரையிலான சிற்பங்கள் காணப்படுகின்றன, கால வெள்ளத்தை எதிர்த்து நின்று, கலையின் பெருமையை விளக்கும் இச்சிற்பங்கள் நம் நாட்டின் பழம் பெருமையை வெளிப்படுத்துபவையாகும்.

## நீராடும் யானைகள்

இங்குள்ள கற்பாறையில் தண்ணீர்த் தடாகத்தில் விளையாடும் வகையில் அதாவது அசையும் தன்மையைக் காட்டும் வகையில் நான்கு யானை வடிவங்கள் புடைப்புச்(Relief) சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய மாமல்லபுர சிற்பத்தை ஞாபகப்படுத்தும் பாவனையில் இவை உள்ளன.

## குதிரைத் தலையும் போர் வீரனும்




இவ் விகாரையின் தெற்குப் பக்கத்தில் நல்ல தேகபாகுவான உடற்கட்டுள்ள இளைஞன் ஒருவன், இடதுகாலை மடித்து உட்காந்து அவ் உள்ளங்காலின் பக்கத்தில் வலது காலை மடித்து ஊன்றியபடி முழங்கால் மேல் வலது கையைப் போட்டு அமர்ந்துள்ளான். இவரின் வலது மேல் மூலையில் குதிரை முகம் ஒன்று காணப்படுகிறது. இச் சிற்பத்தின் அர்த்தம் தெளிவாகப் புரியவில்லை இது கபில முனியின் வடிவமென திரு ஆனந்த குமாரசாமி அவர்கள் கூறியிருக்கிறார்கள் குதிரையில் சவாரி செய்யும் ஒரு போர் வீரன் இளைப்பாறுவது போல் உள்ளது, அது அக்கினித் தேவன் மழையின் அதிபதி எனக் கருதுவோரும் உள்ளனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச குடும்பம்



ஈசுருமுனி விகாரையில் முற்பக்கமாக ஏறிச் செல்லும் வழியின் இடது புறத்தே உச்சுவரில் அரச குடும்பம் எனக் கருதக்கூடிய ஐந்து மனித வடிவங்கள் காணப்படுகின்றன. இது துட்டகைமுனு மன்னனின் குடும்பம் எனவும் இவனின் இடது பக்கத்தில் இருப்பது சாலிய குமாரனும் வலது பக்கமாய் இருப்பது அசோக மாலா எனவும், அவர்களின் பின்னால் சாமரை வீசும் பணிப் பெண்கள் இருப்பதாகவும் கலாநிதி பரணவிதானகே கூறியிருக்கிறார். இச்சிற்பமும் 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்திய பல்லவ அல்லது குப்த சிற்ப முறைக்கு சொந்தமானதென கூறப்படுகிறது.

## காதலர் சிற்பம்



ஈசுரு முனிய விகாரையின் பாறைக்கு பின்னால் அழகிய புடைப்புச் சிற்பமாக காதல் மொழி பேசும் ஆண் பெண் உருவங்கள் காணப்படுகின்றது. அன்பினால் கட்டுண்ட கன்னியினதும் காளையினதும் தோற்றத்தை கலைஞன் கல்லிலே தத்துரூபமாக பிரதிபலிக்க செய்துள்ளான் காதலனின் இடது பக்கம் அமர்ந்து இருக்கும் பெண்ணின் வடிவம் சிறப்பானது. இச் சிற்பம் இந்த இடத்தில் செதுக்கப்பட்டுள்ளது ஏன் என்பது தெரியவில்லை. புராதன மங்கள உத்தியாவனம் அமைந்திருப்பது விகாரைக்கு அருகிலேயாகும். சாலிய மன்னன் அசோகமாலா, இருவரும் உறவு ஏற்பட்டதும் இந்த உத்தியாவனத்திலே தான். இச் சிற்பம் அந்த விடயத்தை ஞாபகப் படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது என எண்ணத் தோன்றுகிறது.

யுத்தத்தின் பின் தன் காதலியை சந்திக்கும் ஒரு போர் வீரன் எனக்கருதினாலும் மிக உசிதமா உள்ளது.

அரைவிழி, மூடிய இப்பெண்ணின் இடக்கையில் அத்தபதாக முத்திரை காணப்படுகிறது. அத்தபதாக முத்திரைக்கு நாட்டிய அபிநயத்தில் கொடுக்கப்படும் கருத்து நாம் இருவர் என்பதே. இச்சிற்பத்தின் விரல்கள் சிதைந்து போனாலும், அழியாமல் இருக்கும் விரல்களைக்கொண்டு இதனை ஊகிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜந்தாவில் 19வது குகையில் நாகராசனும் அவனது மனைவியும் எனக்கூறப்படும் சிற்பம். இச்சிற்பம் போன்றே காணப்படுவதாக கூறப்படுகிறது. ஆனந்த குமாரசாமி அவர்கள் இவ்விருவடிவத்தையும் சிவனும் உமாதேவியும் எனக்கூறியுள்ளார்கள். ஆணின் உடலில் அணிந்து காணப்படும் பூ நூலும் பிற்பக்கத்தில் காணப்படும் திருவாசி அலங்கார அமைப்பும் இந்து கலாசாரத்தை வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

மேற்கூறப்பட்ட ஈசுருமுனிய விகாரை சிற்பங்களிலே குதிரைமுகமும் போர்வீரனும் பல்வசிற்பமாகும். இக்காதலர் சிற்பமே இந்திய குப்த மரபை சேர்ந்ததாகவுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலனறுவைக் கால சிற்ப கட்டடக் கலை

இராசராஜன் இலங்கையில் படையெடுத்த காலத்தே அனுராதபுரி பெருமை இழந்து பொலநறுவை தலைநகராகியது. பொலநறுவைக்காலத்தில் தென் இந்திய சோழ, பாண்டிய சிற்ப முறைகள் இலங்கையில் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தின. பௌத்த சிற்ப கலையின் முன்னேற்றம் இங்கு உட்புகுந்த இந்து கலாச்சாரத்தின் செல்வாக்கினால் படிப்படியாக குன்றியது. அனுராதபுரம் வட இந்தியாவுடன் தொடர்புற்றிருந்தது போலவே பொலனறுவை தென்னிந்தியாவுடன் தொடர்புற்றிருந்தது கட்டிட சிற்ப தேவைகளுக்கு கலைஞர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர்.

இக்காலத்தே செம்பு விக்கிரகங்களும் செங்கல்லினால் கட்டிடம் கட்டும் முறையும் ஏற்பட்டது. இந்து ஆலயங்கள் அமைக்கப்படலாயின. இரண்டாம் சிவ தேவாலயம் அக்காலத்தில் முற்றிலும் கருங்கல்லினால் கட்டப்பட்ட ஆலயமாகும். இக் காலத்தில் உருவாக்கப்பட்ட தெய்வசிற்ப வடிவங்கள் சில 'திரிபங்க' நிலையிலே அமைக்கப்பட்டன திரிபங்க வடிவங்களின் விஷேச தன்மையாதென்னில் இரு பாதங்களின் குதிகளும் ஒன்றை ஒன்று ஒட்டிஇருந்தாலும்உடலின்நிலையில் ஒரு பாதத்தில் ஊன்றி நிற்கும் ஒரு லலித தோற்றமாகும். நின்ற பாவனையில் உள்ள இவ் உடலில் மூன்று சிறு வளைவுகள் காணப்பட்டன. இந்திய ஓவியங்களிலும் சிற்பங்களிலும் இவ்வித வடிவங்கள் காணப்படுகின்றன. இது சோழ சிற்பங்களின் விஷேட அம்சமாகும். இக் காலத்தில் அமைக்கப்பட்ட தெய்வீக வடிவங்கள் எல்லாம் தாமரை இதழ் கொண்ட பத்மாசனங்களின் மேல் அமைக்கப்பட்டன.


திரிபங்க நிலை

பொலனறுவை காலத்துக்குச் சொந்தமான சிறப்பும் அழகும் வாய்ந்தவெண்கல சிற்பத் தொகுதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இவை இந்து சமய சம்பந்தமான இலட்சணங்கள் கொண்டவையாகும்... ஈஸ்வரன், பார்வதி போன்றவை இவற்றின் முக்கியமானவை

பொலனறுவையை தலைநகராகக் கொண்டிருந்த காலத்தில் பராக்கிரமபாகு நிஸங்க மன்னன் போன்ற மன்னர் சிறப்புவாய்ந்த கட்டிடங்களை உருவாக்கினர். இலங்காதிலக, திவங்கபிலிமகே, தூபராம மண்டபம் போன்றவை இவற்றில் சிலவாகும். இவை சிலைகள் வைக்கவே உருவாக்கப்பட்ட கட்டிடங்களாகும் பொலனறுவை அரசமாளிகை விகாரை கட்டிட சுவர்கள் ஒரு மீற்றர் கனவளவான திண்மம் கொண்டவையாக மேலே எழுந்து குவிந்து கூரை அமைப்பு இல்லாது அமைக்கப்படலாயின. நுட்பமான முறையில் அமைக்கப்பட்ட இவ்வாறான கூரை 'பொக்குகூரை' 'கெடிகே' என அழைக்கப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கிரமபாகு சிலை

பொலனறுவை பொத்குல் விகாரையின் அருகே ஒருபாறையில் ஏட்டுச்சுவடியைத் தாங்கிய வண்ணம் உடல் வெறுமையான நிலையில் மூன்று மீற்றர் உயரத்தில் ஒரு சிலை காணப்படுகின்றது. இது பராக்கிரமபாகு மன்னன் எனக் கூறப்படுகின்றது. பராக்கிரமபாகு காலத்தில் பொலனறுவையில் சிறப்புமிகு கலைகள் வளர்க்கப்பட்டன.

# நிஸங்கலதா மண்டபம்



நிசங்கலதா கற்தூண்கள்


சோழர் ஆதிக்கத்தை அடுத்து வந்த மறுமலர்ச்சிக் காலத்தில் புதுமாதிரியான கட்டிடங்களை சிருஷ்டிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிஸங்க மன்னன் தனது ராஜதானியை அலங்கரிப்பதற்கு எடுத்த முயற்சிகளில் நிஸங்கலதா மண்டபம் முக்கிய மானது. நிஸங்கலதா மண்டபம் தனித்தன்மை வாய்ந்த கட்டிடமாகும் $1\frac{1}{2}$மீற்றர் உயரமான மேடையில் இம்மண்டபம் அமைந்துள்ளது இம்மண்டபம் பௌத்த துறவிகள் வண ஓதுவதற்கு கட்டப்பட்ட மாளிகை எனக் கூறுவர். இங்குள்ள 12 தூண்களில் 8 விசேஷ தூண்களாக காணப்படுகின்றன இவை தாமரைமொட்டை ஒத்திருக்கின்றன. ஆனால் தண்டோடு ஒப்பி டுகையில் மலர் சிறந்ததாக காணப்படுகின்றது. இம்மாளிகையின் எல்லைப் புறத்தே சுற்றி யிருந்த கல்லினால் ஆன கிராதி வேலையானது மரவேலையைப் போன்றுள்ளது. இவ்வேலி யும் மண்டபத், தூண்களுக்கும் பொருத்தப்பாடு இல்லாமையாக இருப்பதால் இவை பிற் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என எண்ணவேண்டியிருக்கிறது. இம் மண்டபத்துக்கு மரத்திலான கூரை இருந்திருக்கலாம் பிற்காலத்தில் அது அழிந்திருக்கலாம் என கூறப்படு கின்றது.

பொலனறுவையை அடுத்து வந்த கம்பளை கண்டிக் காலங்களில் எல்லாம் இலங்கை கட்டிட சிற்ப அமைப்புக்களில் தென்னிந்திய கலை அம்சங்களைக் காணக்கூடியதாக உள் ளது. கம்பளைக் காலத்தில் கட்டிட சிற்பங்களில் முன்னேற்றம் இருந்திருக்கலாம். தென்னிந் திய ஆசாரியர்களையே இதற்கு பயன்படுத்தியிருக்கலாம். செங்கல்லான அடித்தளம் கருங்கல் வேலைப்பாடு தட்டையான கூரை அமைப்பு கொண்டதாக இக்கால கட்டிடங்கள் காணப் படுகின்றன. கடலாதேனிய, இலங்காதிலக இவற்றில் முக்கியமானவையாகும். எம்பக்கே என அழைக்கப்படும் அழகிய மரச்செதுக்கு வேலைப்பாடு கொண்ட ஆலயம் ஒன்றும் காணப்படுகின்றது. முதலாம் புவனேகபாகு யாப்பகூவா அரண்மனையை அமைத்தான். தென்னிந்தியா மரபில் கருக்கல்லினால் அமைக்கப்பட்ட அழகியபடிக்கட்டுக்களும், கற்பகிரகம் அந்தராளம், அர்த்த மண்டபம் என்பனவும் அமைந்து காணப்படுகின்றது. முன்மண்டப மேடையில் அழகிய புடைப்பு சிற்பங்களும் காணப்படுகின்றன. கண்டியிலுள்ள தலதா மாளிகை, நாக தேவாலயமும் முக்கியமானவை. அத்தியாயம் 5ல் இவை பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பௌத்த சிற்ப கட்டிடக்கலை



''தூபராம'' அனுராதபுரம்

இலங்கையின் பௌத்த சிற்ப கட்டிடக் கலை பற்றி அறியமுன் இலங்கையில் பௌத்தம் வேரூன்றியது பற்றிய வரலாறு மிகமுக்கியமான தொன்றாகும். இந்திய சக்கரவர்த்தி அசோக னால் அவர் மைந்தர்களான மகேந்திர சங்கமித் திரை என்பவர்களால் இலங்கைக்கு பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்டதும் அக்காலத்தில்இலங் கையை ஆட்சிபுரிந்த தேவநம்பியதீசன் பௌத்த கொள்கையை ஏற்றுக்கொண்டு பௌத்தம் இலங்கையில் நிலைபெறக் காரணமாயிருந்தான்.

புத்த தர்மத்தைப் போதிக்கும் நோக் கத்தோடு இலங்கை வந்த மகேந்திர, சங்கமித் திரையும் அனுராதபுரியிலுள்ள மகா மேகவன த்தில் ஒரு வெள்ளரசுக் கிளையை நட்டனர். இது இந்தியாவிலுள்ள ''புத்தகாயா'' என்னு மிடத்தில் - புத்த பெருமான் ஞானம் பெற்ற மூல விருட்சத்தின் பக்கத்திலிருந்து கொண்டுவரப் பட்டதெனக் கூறப்படுகின்றது. இதுவே இன்று அனுராதபுரியில் காணப்படும் ''மகாபோதி'' விருட்சமாகும். 2300ம் ஆண்டு கள் பழமை வாய்ந்த இந்த விருட்சமானது பௌத்த சமய மக்களின் புனித சின்னமாகக் கருதப்பட்டு அரசினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதனைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரணை ''போதிகர'' என அழைப்பர். அத்துடன் பர்மா அரசினால் நன் கொடையாக வழங்கப்பட்ட புத்தர் திருவுருவங்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளது குறிப் பிடத் தக்கதாகும். இலங்கையில் பௌத்த மதம் பரவிய வரலாற்றையும், பௌத்த சிற்ப கட்டிடக்கலைகளின் வளர்ச்சி பற்றியும் சிங்கள வரலாற்று நூலாகிய ''மகாவம்சம்'' கூறுகின்றது

இலங்கையில் பௌத்தம் நிலை பெற்றதனால் பிக்குகள் வசிப்பதற்கும் பௌத்த சமய அனுட்டானங்கள் ஒழுங்கு செய்வதற்குமான விகாரைகள், தூபிகள், தாகபைகள், இலை வீடுகள் (பிலிமகே), தியான மண்டபங்கள் போன்ற கட்டிடங்களும் வழிபாடு செய்வத ற்கான போதி விருட்சம், புத்த திருப்பாதம், தர்மசக்கரம், புத்த சிலைகள் போன்ற சின்னங்களும் அமைக்கப்படலாயின.

பௌத்த சமயத்தினூடாக வட இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர் பினால் பண்டைய இந்தியாவின் மௌரிய காந்தார ஆந்திர (அமராவதி) கலைத்திறன்களும், சிறப்பாக சரணாத், சாஞ்சி, பாருத் ஆகிய இடங்களில் காணப்படும் செதுக்கு வேலைப்பாடு கள், அலங்கார நோக்குருக்கள், சிற்பங்கள் ஆகியவையும் இலங்கையில் புராதன பௌத்த கட்டிடங்களிலும், தூபிகள், விகாரைகளிலும் இன்றும் பிரதிபலிப்பதைக் காணலாம். பௌத்த மதத்தின் வருகையால் கட்டிடசிற்பங்களும், ஓவியம் கைப்பணி, இலக்கியம், பௌத்த கலாச் சாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறந்த நாகரிகம் ஒன்று புராதன இலங் கையில் (அனுராதபுரியில்) வளர காரணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாது கோபுரம் (ஸ்தூபி)

இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னமாக கட்டப்பட்ட புதைகுழிகளின் தோற்றமே தூபிகளின் ஆரம்பவரலாறு ஆகும். இந்தியாவில் பெரியோர்களின் நினைவுச் சின்னமான தூபி முறையை பௌத்த மக்கள் தம்மதத்தின் பேரால் புத்த பெருமானுக்கு தாதுகோபுரத்தை அமைத்துக் கொண்டனர் எனலாம். தாதுகோபுர கட்டிட முறையானது தோன்றிய கால கட்டத்தினைக் குறிப்பாகக் கூறமுடியாதா யினும் கி. மு. 5ம் நூற்றாண்டில் இந்தியாவில் மௌரிய பேரரசுக்காலத்திலே தாது கோபுரம் அமைக்கும் முறை வளரத்தொடங்கியது என ஊகிக்கக்கூடியதாக உள்ளது.

பளிங்கு போன்ற பேளைகளில் புத்தரின் புனித சின்னங்களான அஸ்தி எச்சங்கள் போன்றவற்றை நடுவில் வைத்து அரைக்கோள வடிவினதாய் சிறுகுன்று போன்று உருவமாக அமைக்கப்பட்டு அதை சுற்றி வலம் வருவதற்கு வழியும் அமைக்கப்பட்டது. இதுவே ஆரம்ப கால தாது கோபுர அமைப்பாகும்.

புராதன காலத்தில் இருந்த தூபி அமைப்புமுறை பௌத்த கலைஞர்களினால் மேலும் மெருகூட்டப்பட்டு வளர்ச்சியடைந்தது. ஆரம்பகாலத்தில் இலங்கையில் கட்டப்பட்ட பல தூபிகள் சில பிற்காலத்தில் புனரமைப்பின் பின் பல மாற்றங்கள் அடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். முக்கியமாக அனுராதபுரத்தில் உள்ள தூபராம தாதுகோபுரத்தை குறிப்பிட்டாக வேண்டும். ஆரம்பத்தில் நெற்குவியல் (தானியகார) வடிவினதாய் இருந்து பின் மணி வடிவமானதாய் மாற்றம் அடைந்த ஒன்றாகும்.

தற்போது கட்டப்படும் தாது கோபுரங்கள் பாரம்பரிய மரபுமுறையில் அமைக்கப் படும் கட்டிடங்களாகும். இலங்கையில் தாதுகோபுர கட்டிட அமைப்பானது வட இந்தியாவில் அக்கால ஆரிய கட்டிட முறை அமைக்கப்பட்டது போன்றே அனுராதபுர, பொலநறுவ தூபிகளின் மேடைகள் வாசல்மனைக்கு செல்லும் படிக்கட்டுக்கள், கைப்பிடி வரிசை காவற் கற்கள், தூண்கள், பூரணகும்பம் போன்ற அமைப்புக்கள் செதுக்கு வேலைபாடுகள், இந்திய பண்டைய தூபிகளில் உள்ளவாறு காணப்படுகின்றன. ஆயின் இலங்கை இந்திய தாதுகோபுர கட்டிட அமைப்புகளில் சற்று வேறுபாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது. இந்திய சாஞ்சி தூபியின் சுற்றுப்புறம்நான்குதிசைகளிலும் அமைந்து அழகு செய்யும் வாயில் தோரண சிற்ப அமைப்பு முறை இலங்கையில் பண்டைய தூபிகள் எதிலும் காணப்படாத ஒன்றாக உள்ளது.

இலங்கைத் தூபிகளில் 'வாசல்கடை' என்னும் ஒரு அலங்கார வேலைப்பாடு கொண்ட அமைப்புமுறை பண்டைய தூபிகளில் காணக்கூடியதாக உள்ளது. இலங்கை சிற்பிகள் தமது சிற்பத்திறமையை வாசல்கடை என்னும் அலங்கார மேடையில் காட்டியுள்ளனர். ஆனால் இந்திய சிற்பிகளோ சாஞ்சி, பாரூத் முதலிய இடங்களில் தூபியின் நாற்புறங்களிலும் உள்ள வாயில் தோரணங்களில் தமதுதிறமையை காட்டியுள்ளனர்.


இந்திய சாஞ்சி தூபியில் காணப்படும் சிதைவுகளில் இருந்து அத்தூபியின் மேற் கோப்பில் (உச்சிப் பகுதியில்) ஒரு கற்குடை அடுக்கு முத்துக்குடை போன்ற (சத்திராவலி) அமைப்பில் இருந்தது இது மழைநீர் வளிந்தோடும் நோக்குடன் அமைக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறான அமைப்புகள் இலங்கை தூபிகளிலும் இருந்து அழிந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாது கோபுர வடிவ (உருவ) அமைப்புக்கள்

இன்று அனுராதபுரம், பொலநறுவை போன்ற பண்டைய நகரங்களில் உள்ள தூபிகளை ஆராய்ந்ததில் அவற்றின் உருவ அமைப்புகள் ஆறு வகையிலானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.


1)




2)



3)



4)



1. குட(ம்) (கடாகார)
2. நெற்போர் வடிவம் (தானியகார)
3. நீர்க்குமிழி வடிவம் (புபிலகார)
4. மணிவடிவம் (கண்டகார)
5. நெல்லிக்கனி வடிவம் (அமிலகார)
6. தாமரை வடிவம் (பத்மகார)

**குட (ம்) வடிவம்** (கடாகார):-

குடம் அல்லது பானையை கவிழ்த்து வைத்திருப்பது போன்று உருவமே குடவடிவம் எனப்படுகிறது. இவ்வித வடிவமான புராதன தாது கோபுரம் பொலறுவையில் உள்ள மிருசவெற்றிய தாது கோபுரமே ஆகும்.

இவற்றில் நாம் மேலே கூறியவாறு தாமரை (பத்மகார), நெல்லிக்கனி (அமிலகார) போன்ற வடிவங்கள் அமைத்த புரதான தாது கோபுரங்கள் இதுவரையில் இலங்கையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும் அழிந்து போன ரெடிகம என்னும் இடத்தில் உள்ள கொட்ட விகாரையில் ''தெமழசாய'' என்னும் தாது கோபுரமும் தாமரை மலர்வடிவில் அமைத்திருக்கலாம் என அத்தாது கோபுரங்களின் அழிந்த சிதைவுகளில் இருந்து அறியக் கூடியதாய் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெற்போர் வடிவம் (தானியகார):-**

அனுராதபுரத்தில் ஓட்டப்பூவ என்னும் இடத்தில் அமைந்து காணப்படும் ஒரு தாது கோபுரம் நெற்போர் வடிவினதாய் அமைந்துள்ளது. இது போன்று களனியில் நெற்போர் வடிவினதாய் இன்னொரு புராதன தாதுகோபுரம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**நீர்க்குமிழி வடிவம் (புபிலகார) :-**

அனுராதபுரத்தில் துட்டகைமுனு மன்னனால் கட்டப்பட்ட ருவான் வெலிசய என்னும் தாது கோபுரம் காணப்படுகிறது. இதனை மகாதூபி என்றும் அழைப்பர். இதன் வடிவம் நீர்க்குமிழி வடிவமேயாகும். இதன் உயரம் 66 மீற்றராகும். ருவான் வெலிசய மேடைசுவர்களில் சுற்றிலும் யானை துதிக்கையுடன் கூடிய முகம் முற்பக்க சுவர்களில் வரிசையாக அமைந்து காணப்படுகிறது. இப்படியான வடிவ அமைப்பு இலங்கையில் வேறு எந்த தூபிகளிலும் காணப்படவில்லை. இத்தாது கோபுரத்தினுள் புத்தரின் தாதுக்கள் வைத்துக் கட்டப்பட்டதாக கருதப்படுகின்றது.

பொலநறுவையில் 1ம் பராக்கிரம மன்னனால் கட்டப்பட்ட கிரிவிகாரையும் நிசங்க மன்னனால் கட்டப்பட்ட ரங்கூத் விகாரையும் நீர்க்குமிழி வடிவங்களாகும்.

**மணிவடிவம் (கண்டகார) :-**

இலங்கையில் காணப்பட்ட தூபியின் வடிவங்களில் பிரபல்யம் அடைந்ததும் வளர்ச்சியடைந்ததும் மணிவடிவமே ஆகும். இலங்கையில் முதன் முதலாக பூர்வீக தாது கோபுரம் துபராம என்பதாகும். இத் தூபியினுள் புத்தரின் காறை எலும்பு வைத்துக் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. தேவநம்பியதீச அரசனால் கட்டப்பட்ட இத்தாது கோபுரம் மணி வடிவில் காணப்படுகின்றது. இத்தாது கோபுரத்தின் உயரம் எவ்வாறானது என்பது நிச்சயிக்கப்படவில்லை. அனுராதபுரத்தில் காணப்படும் இலங்காராம தாது கோபுரமும் மகியங்கணையிலும் மணிவடிவிலான தாது கோபுரமும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பழமையான தாதுகோபுரங்கள்

**மிரிசவற்றி தாது கோபுரம்:-**

சதாஸ்தீசன் மன்னனால் உருவாக்கப்பட்ட இத் தாது கோபுரம் பல அரசர்களாலும் புனருத்தாரணம் செய்யப்பட்டதாகும். இதன் உயரம் 20 மீற்றர். இதனை சுற்றிவர அழகான தூண்கள் காணப்படுகின்றன. மிரிசவற்றி வாசல்கடை கலாச்சார முக்கோணத்திற்கு உட்படுத்தப்பட் ஒன்றாகும்.

**கந்தக சைதிய:-**

இலங்கையில் மிகப்பழமை வாய்ந்த தூபிகளில் மிகுந்தலையில் உள்ள ''கந்தகசைதிய' தாது கோபுரம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அழிந்த நிலையில் உள்ள இதனை வஞ்சதீசன் என்னும் அரசன் புனருத்தாரனம் செய்தான். என கருதப்படுகிறது. கி. மு. 50ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தாது கோபுரமாக இது கருதப்படுகிறது.

**ஜெதவனராம:-**

மிகப்பழமை வாய்ந்த தாது கோபுரமாகும். சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு மகாசேனன் என்னும் அரசனால் கட்டப்பட்ட இத்தூபி உறுதியான செங்கல்லினால் ஆனது. அனுராதபுரத்திலுள்ள இதன் உயரம் 133மீற்றராகும் இன்று சிதைந்த நிலையிலே காணப்படுகிறது.


**கிரிவிகாரை தாதுகோபுரம்:-**

உருக்குலையாத நிலையில் இன்று காணப்படும் புராதன தாதுகோபுரம் இதுவே 1ம் பராக்கிரமபாகு மன்னனால் உருவாக்கப்பட்டது. அமைந்துள்ள இடம் பொலனறுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதுகோபுரத்தின் அங்கங்கள்



1. சூடாமாணிக்கம் (சிலுமின)
2. சிகரம் (கொத்தரல்ல)
3. முனைச்சுருள் (கொத்தரல்ல)
4. தெவதா கொட்டுவ
5. சதுரக்கோட்டம் (ஹதரஸ்கொட்டுவ)
6. அண்டம் (கற்பய)
7. புஸ்பபீடம் (பேசாவலலு)
8. வாசல் கடம்
9. படிக்கட்டு
10. கல்முற்றம் (சலபதம லுவ)
11. காவற்சிலை (முரகல)
12. சந்திரவட்டக்கல்

**சிகரம் (கொத்ரல்ல)**

இவ் அமைப்பு பண்டைய தாது கோபுரத்தின் மேல் அமைந்து இருந்த கற்குடையின் (சத்ர) வேறுபாடடைந்த பகுதியாகும். பிற்காலத்தில் இது அலங்கார மடிப்புகள் உள்ள வளைவான (சிலின்டர்) வடிவமாகக் காணப்படுகிறது.

**அண்டம் (கற்பய)**

இதனுள் புத்தரின் புனித அஸ்தி எச்சங்கள் உள்ளே வைக்கப்பட்டு கட்டப்படும். அரைவட்ட கோள வடிவமைப்பு (கும்மட்டம்) உருவமாகும். தாது கோபுரம் எனத் தோற்ற மளிக்கும் பெரிய பகுதி இதுவே. சதுர மேடையில் இதன் அடித்தளம் அமைந்திருக்கும். இதன் நான்கு திசைகளிலும் "வாசல் கட" என்னும் அலங்கார மேடை (நுழை வாயில்) அதன் கீழே கைப்பிடி வரிசை (கொரக்கவல்ல) படிக்கட்டுக்கள், காவற்கல் (முரகல, சந்திரவட்டக்கல் போன்ற அமைப்புகள் கொண்டதாக இருக்கும்.

அனுராதபுரத்திலும் இலங்கையில் காணப்படும் பண்டைய சமயக் கட்டிடங்களிலும் மற்றைய கட்டிடங்களிலும் பொதுவாக இவ்வகையான அமைப்பே காணப்படுகின்றது.


**புஷ்பபீடம் (பேசாவலலு)**

அண்டம் அடிமட்டத்தினை சுற்றி வளைவாக பட்டி போன்று அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு பேசாவலலு என அழைக்கப்படுகின்றது. இதில் மலர்களையோ வாசனைப் பொருட்களையோ வைத்து வணங்கக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைப்பிடி வரிசை (கொறக் கல்ல)



விகாரை அல்லது தூபி போன்ற புராதன கட்டிட வாயில்களில் ஏறிச் செல்வதற்கான படிக்கட்டுக்களில் இரு பக்கமும் சுவர் போன்று அமைந்துள்ள பகுதியே கைப்பிடி வரிசை என அழைக்கப்படுகின்றது.

அனுராதபுர காலத்திலும், பொலநறுவைக் காலத்திலும் மிக அலங்கார அமைப்புடைய கைப்பிடி வரிசைகள் அமைக்கப்பட்டன. இது மகரதலை போன்றது இதன் வாயில் இருந்து பூங்கொடி போன்ற அமைப்பு வெளியே வந்தது போன்று காணப்படுகின்றது. கண்டிக் காலத்தில் அமைக்கப்பட்ட கைப்பிடி வரிசையில் கஜசிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. ஆயின் கண்டி தலதா மாளிகையின் வாசலில் அமைக்கப்பட்டிருக்கும் கைப்பிடி வரிசையில் மகரரூபமே காணப்படுகிறது. அனுராதபுர இராணி மாளிகையில் சிறந்த கைப்பிடி வரிசை காணப்படுகின்றது வேலுவனராம, கல்விகாரை, லங்காதிலக போன்றவற்றில் மகரரூப அலங்காரம் மிக அழகாக செதுக்கப்பட்டு காணப்படுகிறது. பொலநறுவை காலத்தில் சுண்ணக்கற்களினாலும் அனுராதபுரக் காலத்தில் கருங்கல்லினாலும் உருவாக்கப் பட்டவையாக காணப்படுகின்றது.

கைப்பிடி வரிசையின் முன்பகுதியில் காவற்சிலை(காவற்கல்) அமைந்து காணப்படுகிறது



நாகராஜ வடிவம் (காவற்சிலை)

## காவற்கல் (முரகல்)

பௌத்தகட்டிடக் கலைஞர்கள் தங்கள் கட்டிடங்களின் வாயில்களை சிறப்பு வய்ந்தவையாக அமைக்க அலங்காரப் படிக்கட்டுக்களின் இரு பக்கங்களிலும் கைப்பிடி வரிசையை (கொறவக்கல்) அமைத்தனர் என அறிந்தோம். இவ்வாறான கைப்பிடி வரிசையில் முன்னால் நீள் சதுரக் கல்லை செதுக்கியோ சாதாரணமாகவோ நிறுத்தினர். இவை சுபீட்சத்தையும், அதிஷ்டத்தையும் பாதுகாக்கும் ஒரு சின்னமாகவும் நம்பினர்.

இவ்வாறான காவற்கற்கள் இந்து ஆலய வாயில்களிலும் காணக்கூறியதாக உள்ளது. இவை காவல் தெய்வம் (துபாரபாலகர்) என அழைக்கப்படுகின்றது. இக்கற்கள் 19ம் நூற்றாண்டின் பின்பே இலங்கையர்களாலும் தொல் பொருள் ஆய்வாளர்களாலும் காவற்கற்கள் என அழைக்கப்படலாயின. இக் காவற்கற்கள் பற்றி இலக்கிய கதைகளும் உண்டு.

ஆரம்ப காலத்தில் இக் காவற்கற்கள் வெறும் நீள்சதுரக் கல்லாக எவ்வித உருவமும் இன்றி அமைக்கப்பட்டன. பூரணகலசம், நாகரூபம், பைரவ வாமண ரூபங்கள் பிற்காலத்திலே இவற்றில் செதுக்கப்படலாயின. அனுராதபுரத்தில் யானைத் தடாகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே எழு தலை கொண்ட நாகரூபம் பொறித்த காவற்கல் ஒன்று காணப்படுகின்றது. பூரணகும்ப வடிவங்கள் செதுக்கப்பட்ட காவற்சிலைகள் கதிர்காமத்திலும், வெலிகம விகாரையிலும் காணக்கூடியதாக உள்ளது.

கி. பி. 4ம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்திலேதான் மனித உருவங்கள் காவற்கற்களில் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. நாகராஜர் வடிவங்கள் இவற்றில் சிறப்பு வாய்ந்தவை. தலையில் முடியும். பூவும் உடல் முழுவதும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, உடலோடு ஒட்டிய துணியும் இடது கையில் பூரணகும்பம் ஏந்தியது போன்று வலது கையில் தென்னம்பூவை பிடித்த வண்ணம் அவற்றின் பாதத்தினருகே இரு வாமண ரூபங்கள் கொண்டதாக காணப்படுகின்றன.


இவ்விரு வடிவங்களும் சங்கநிதி, பதுமநிதி என கூறுப்படுகின்றது. தலையின் பிற்பகுதியில் நாக தலைகள் அமைந்து காணப்படுகின்றன. அனுராதபுர, பொலநறுவையில் காணப்படும் இவ்வாறான புராதன காவற்சிலைகள் காலத்தால் முற்பட்டதும் அழகும், சிறப்பும் வாய்ந்தவையாகும். கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட தாழ்வுடைப்புச் சிற்பமாக இவை விளங்குகின்றன. நாகராஜர் வடிவம் கொண்ட காவற்கற்கள் ஆசியாவிலே சிறந்ததொன்றாக மதிக்கப்படுகின்றது.

ஜெதவனராம விகாரையிலும் இவ்வாறான நாகராஜர் காவற்கற்கள் உள்ளன. அனுராதபுரத்தின் ரத்தினபிரசாதாவில் உள்ள காவற்கற்கள் மிகப் பழமையானதும் அழகும், சிறப்பும் வாய்ந்ததுமாகும். இது மூன்றாம் கனிஸ்ட தீசமன்னனால் ஏற்படுத்தப்பட்ட தொன்றாகும். அனுராதபுர கால காவற்கற்கள் உச்சிப்பகுதி பூ இதழ் அமைப்பிலும், பொலனறுவை காவற்கற்கள் உச்சி அரைவட்ட (வளைவு) வடிவத்திலும் உருவாக்கப்பட்டவையாக காணப்படுகின்றன.



## வைரப ரூபங்கள்

தடித்த கட்டையான வடிவமும் உடலில் பூ நூல் அணிந்து பணத்தில் நாட்டமுள்ள வியாபாரி போன்று காணப்படுகின்றது. மிகிந்தல, ராஜகிரியந்த போன்ற இடங்களில் சிறந்த பரைவ வடிவங்கள் காணப்படுகின்றன. பைரவ ரூபங்கள் கண ரூபங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.




## வாமன ரூபங்கள்

முன் தள்ளப்பட்ட வயிறு குட்டையான பருத்த கை, கால்கள், விகாரமான முகம் ஹர்சிமான முகமும் கொண்டவையாக இவை காணப்படுகின்றன. ஈசுருமுனியாவில் உள்ள வாமன ரூபங்கள் காந்தார வடிவங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை சங்கீதக் கருவிகளை மீட்டுவது போலும், கையில் முத்திரைகளைக் காட்டுவது போலும் அமைக்கப்பட்டுள்ளன. மிகிந்தல வாகல்கடம், பொலனறுவை வேலுவனராம, தூபாராம, இலங்காதிலக விகாரை போன்ற இடங்களில் எல்லாம் வாமணரூபங்களை காணக்கூடியதாகவுற்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரவட்டப் படிக்கல்



அனுராதபுரம், பொலனறுவை ஆகிய இடங்களில் புராதன பௌத்த கட்டிடங்களின் வாயில்களில் அரைவட்டமாக அமைந்த அலங்காரப் படிக்கற்கள் அமைத்து காணப்படுகின்றன. புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்ட இக் கற்கள் தேவநம்பியதீசன் காலம் தொட்டே இருந்து வந்துள்ளன இவை இந்திய குப்த சிற்பகுறையைச் சேர்ந்தவையாகவும் கருதப்படுகின்றது.

முதன்முதலாக இச்சந்திரவட்டப் படிக்கற்கள் ஏதோ ஒரு ஆழ்ந்த கருத்தினை வெளிப்படுத்வே உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இவ்வாறான படிக்கற்கள் அமைந்த கூடங்களிலோ, சந்திரங்களிலோ பௌத்த பிக்குகள் தங்கிச் செல்ல உரிமை பெற்றிருந்தனர் பௌத்த நிலையங்களிலும், சத்திரங்சளிலுப் சந்திரவட்டச்கல்லை அமைப்பது புரதான கட்டிடங்களில் விஷேட அம்சமாக காணப்படுகின்றது. சந்திரவட்டக்கல்லின். இரு மருங்கிலும் கைபிடி வரிசையில் முன்பாகக் காவற்கற்கள் நிறுவப்பட்டிருந்தன.

அனுராதபுர காலத்தின் பின்பே சந்திரவட்டக்கற்கள் அலங்காரப் படிக்கற்களாக விளங்கி வந்துள்ள அனுராதபுர இராணிமாளிகை வாயிலின் முன் காணப்படும் கல் மிகச் சிறப்பும் அழகும் வாய்ந்த ஒன்றாகவும் விளங்குகின்றது. பொலனறுவை வட்டதாகேயில் வடக்கு வாயிலில் காணப்படும் சந்திரவட்டக்கல் சிறந்த சந்திரவட்டக் கல்லுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இவை கலைநுட்பமும், அழகு வாய்ந்தவையாக விளங்குகின்றன. பொதுவாக சந்திரவட்டக் கற்களில் யானை, சிங்கம். எருது (பசு) போன்ற விலங்கு வடிவங்கள் வரிசையாக செல்வது போன்றும், வள்ளிக் கொடி (லியவெல) தாமரை இதழ் (பலாபெதி) என்பனவும் அன்னப் பறவைகள் பூங்கிளையினை அலகில் பிடித்த வண்ணம் அணிவகுத்துச் செல்வது போலவும் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளன.

ஆயின் பொலனறுவைக் காலத்தில் சோழர் செல்வாக்கு இலங்கையில் இருந்த காலத்தில் சந்திரவட்டக் கற்களில் செதுக்கப்பட்ட வடிவங்களில் மாற்றம் ஏற்படலாயிற்று சிவன் கோயிலில் தெய்வீக சின்னமாக எருது இருந்தமையால் எருதின் உருவம் மிதி வாசல்களில் இருப்பதை தவிர்க்க இக்கால சந்திரவட்டக் கற்களில் எருதின் உருவம் இல்லாது அமைக்கப்படலாயின. இதுவே பொலனறுவை அனுராதபுர கால சந்திரவட்டக்கல்லில் மிகப் பெரிய வேறுபாடாகும்.


மிகப் புராதன சந்திரவட்டக் கற்களில் சிற்பத்திறமை அவ்வளவாக காணப்படவில்லை. இவை கலை உணர்வோடு உருவாக்கப்பட்ட கற்களாக தெரியவில்லை. கொழும்பு அரும்பொருட் காட்சி சாலையில் இங்கிறாக் கட்டையில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழைய கல்லில் பூ வேலைப்பாடு மாத்திரமே காணக்கூடியதாகவுள்ளது. பொலநறுவைக்காலத்திற்கு பின் மேலும் பல மாற்றங்களுடைய சந்திரவட்டக்கற்களை காணக்கூடியதாக உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோண வடிவத்திலும், முழுவட்டமான வடிவத்திலும் சந்திரவட்டக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன கண்டி தலதாமாளிகையிகையில், வாயிலில் காணப்படும் கல் பூவிதழ் பூங்கொடி தீச்சுடர் போன்ற வடிவங்கள் சிறந்த முறையில் செதுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. விலங்குகளின் வடிவங்கள் காணப்படவில்லை, வெலிகம என்னும் இடத்தில் மயில் உருவம் செதுக்கப்பட்ட சந்திர வட்டக்கல் ஒன்று உண்டு.

கண்டிகாலத்து விகாரைகள் தேவாலய வாசல்களில் அமைக்கப்பட்டிருந்த சந்திரவட்டக் கல்லானது வடிவமைப்பில் மாற்றம் அடைந்திருப்பதைக் காணலாம். வட்டவடிவத்திற்கு சமமான தொடர்அலங்காரங்கள் வட்டமாக ஓரப்பகுதியில் செதுக்கப்பட்டு உள்ளன. உச்சியில் தொடங்கி இருபக்கமும் சமமான முறையில் பரவி இருந்தன. பூவிதழ்,பூங்கொடி போன்றவை முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன.



சந்திரவட்டக்கல் (கண்டி)



**வாசல் கடை**


அனுராதபுரத்திலும் மற்ற இடங்களிலும் தாது புகோரங்களின் நாற்றிசையிலும் உள்ள மேடை போன்ற அலங்கார பகுதியினை வாசல்க்கடை என்பர் அனுராதபுர மிரிசவற்றி, மகிந்தலை, கண்டகசைதிய போன்ற பண்டை தூபிகளின் அகழ்வாராய்வின் போது இவ் வாசல்கடைகள் தூபிகளின் முக்கிய உறுப்பாக தீர்மானிக்கப்பட்டன. இதனை முன்னம்கடை எனவும் கூறுவதுண்டு. இவ் அமைப்பினை அக்கால கட்டிட கலைஞர் தூபிகளின் ஒரு அம்சமாக ஏன் அமைத்தனர்? என்னும் நோக்கம் சரியாக புலப்படவில்லையாயினும் ஒரு வேளை தீபங்களையோ, மலர் களையோ வைக்கும் அலங்கார மேடையாக இதனை அமைந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

மிகிந்தலையில் உள்ள கண்டகசைத்தியத்தின் கிழக்கு வாசல்க் கடையில் உள்ள சிற்ப வேலைபாடுகள் மிகப்பழைமையும், சிறப்பு வாய்ந்தவையாகவும் விளங்குகின்றன. இவை இந்திய சாஞ்சி, பாரூத் சிற்பங்களை ஒத்ததாக விளங்குகின்றன. பறவை, விலங்கு பூங்கொடி (கற்பகதரு) ஆதிய உருவங்களும் வெவ்வேறு பாத்திகளில் தட்டையாக செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள யானையின் உருவங்கள் அசையும் தன்மையை வெளிப்படுத்துபவையாக தோன்றுகின்றன. ஒவ்வொரு உருவ அமைப்பும் நல்ல விகிதாசார அமைப்பு பெற்று அலங்காரப் பாணியில் தோன்றுவதில் இருந்து அக்கால சிற்பக் கலைஞரின் முதிர்ச்சியினை அறியக்கூடியதாய் உள்ளது.

அனுராதபுர வாசல்க் கடையில் யானைத் தலை மகர உருவம், வட்டதாமரை மலர், தாராக்கள் போன்ற அணி உருவங்கள் பட்டைச் (புடைப்பு) சிற்பங்களாக மிக அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன. இவை கி. மு. 2ம், 4ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக கருதப்படுகின்றன. இவ்வாறான வாசல் கடை அமைப்பு இந்திய தூபிகளில் காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூரணகலசம் (புங்கலஸ்)

இன்றும் சௌபாக்கியம், ஆரோக்கியம், ஐஸ்வரியம், நிறைவு என்பவற்றைக் குறிக்கும் வழக்கத்திற்கு நிறைகுடம் வைக்கும் முறை இந்து தமிழ் மக்களிடையேயும் சிங்கள மக்களிடையேயும் இருந்து வருகிறது.

பூரண கும்பங்கள் இந்திய, இலங்கை ஆகிய நாடுகளில் பண்டைய கட்டிடங்களின் அணி நோக்குருக்களாக காணப்படுகின்றன. கைபிடி வரிசை (கொறக்கவெல) இரு பக்கமும் ஸ்ஞானப் பொய்கை (குட்டம் பொகுன) அனுராதபுரம் போன்றவற்றில் இவ்வாறான வடிவமைப்புக்கள் முப்பரிமானத் தன்மையிலும் காணக்கூடியதாக உள்ளது.

தென்னங்குருத்தோலையிலும் இவ்வாறான வடிவங்கள் செய்யப்பட்டு அலங்கரிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. காவற் கற்களிலும் (முரகல்) புடைப்புச் சிற்பமாகவும் இவ்வித வடிவங்கள் அமைந்து காணப்படுகின்றன. தண்டு குடத்தினுள்ளேயும், மொட்டுக்கள் வெளியே தெரியும் வண்ணமும் விரிந்த மலரின்மேல் குடம் வைத்தது போன்று காணப் படுகிறது.



## கற்பக விருட்ஷம் (ஜீவன விருட்ஷ)

தாது கோபுரத்தின் நாற்புறத்திலும் வாசல்கட என்னும் அலங்கார மேடைகளில் காணப்பட்ட புடைப்புச் சிற்ப வேலைகளிலும் அலங்கார வடிவங்களிலும் கற்பதரு விருட்ஷம் சிறந்த தொன்றாகக் கணிக்கப்படுகின்றது. ஒரு குள்ள வடிவம், பூங்குடத்தினை தலையில் தாங்கிய வண்ணம் அதனுள் இருந்து பூங்கொடி போன்ற அமைப்பானது மேலெழுந்து அலங்காரப் பாணியில் சமச்சீர் தன்மையில் பூங்கினை மலர் விலங்குருக்கள் செதுக்கப்பட்டதே கற்பக விருட்ஷ வடிவமாகும்.

இது பூங்கலச வேலைகளுடன் மனதைக் கவரும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலை வேலைப்பாடாகும் ஒரு பூங்குடத்தினை அங்கங்கள் கட்டையான உருவம் தாங்கியவண்ணம் அமைந்துள்ளது. பூமரத்தைப் போன்று இரு பக்கங்களிலும் ஏறும் யானை, குதிரை சிங்கம், மாடு, மனித உருவங்களும் அமைந்து காணப்படுகின்றன. செல்வம் நிலை கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலே இவ் வடிவம் உருவாக்கப் பட்டதாகும். அனுராதபுர தெற்கு தாது கோபுரத்தில் உள்ளத்தைக் கவரும் கற்பக விருட்ஷம் ஒன்று காணப்படுகின்றது. மிருசவற்றி, மிகுந்தலை கந்தகசைதிய போன்ற பண்டைய தாது கோபுர வாசல் கடை அமைப்புக்களிலும் அழகிய கற்பக விருட்ஷ கற் செதுக்கு வடிவங்கள் காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டதாகே

தாது கோபுரம் அல்லது தூபியை வளைத்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டிடம் வட்டதாகே (சைதிகர) என அழைக்கப்பட்டது. கி. மு. 2ம் நூற்றாண்டில் இந்தியாவிலுள்ள நாகசுன கொண்டா என்ற இடத்திலுள்ள சைதியமே உலகில் முதலாவது வட்டதாகே என கருதப்படுகின்றது. அதனைப் பின்பற்றியே இலங்கையிலும் வட்டதாகே அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன.

இலங்கையின் மிகப் பழமையான வட்டதாகேக்கள் பழையதிரியாய இசுப்பத்தான போன்ற இடங்களில் உள்ள வட்டதாகேக்களாகும் இலங்கை வந்த தவசிகளும் வியாபரிகளும் புத்தருடைய கேசம் தாதுக்கள் போன்றவற்றை இவற்றுள் வைத்து கட்டியதாக கூறப்படுகின்றது இவை கி. பி. 8ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் கருதப்படுகிறது அனுராதபுர காலத்தின் பின் அடுத்து சட்டப்பட்ட வட்டதாகேக்கள் இங்கிராகொட மிதுநகிரிய போன்ற இடங்களிலுளள கல்மேடைகளில் அமைந்துள்ள வட்டதாகேக்களாகும். இவற்றில் படி வரிசை, கைப்பிடி வரிசை கதவுகளின் ஒலுவச அலங்காரங்களையும் பார்க்கக் கூடியதாக உள்ளது. ருவான் வெலிசய போன்ற பெரிய தூபிகளுக்கு இவ்வாறான வட்டதாகே அமைப்புகள் கட்டப்படவில்லை ஆயினும் தூபராம, லங்காராம போன்ற சிறிய தூபிகளுக்கே இவ்வாறான அமைப்புகள் இருந்ததாக அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தூபிகளை சுற்றி தூண் மூன்று வரிசையில் அமைக்கப்பட்டு வளைகள் (விண்டர்) மூலம் வட்டமான கூரை அமைக்கப்பட்டிருந்தன. தூபராம, மிதுருகிரிய, திரியாய போன்றவற்றில் இவ்வாறான அழிந்த வட்டதாகே தூண்கள் இன்றும் காணப்படுகின்றன. நான்கு திசையிலும் இருந்து வரக்கூடிய வாசல்கள் அமைந்திருந்தது. முசடுகள் பலகை, மரங்களால் இருந்திருக்கலாம். இவை காலப்போக்கில் அழிந்திருக்கக்கூடும் என கருதப்படுகின்றது.

12ம், 13ம் நூற்றாண்டுக்குரிய பொலநறுவ வட்டதாகே மிகப் பழமைவாய்ந்தது இதை தலதா மாளிகை என கூறுவதுண்டு இதன் பின் வட்டதாகே அமைப்புகள் இலங்கையில் அமைக்கப்பட்டதாக தெரியவில்லை. மிக அண்மைக்காலத்தில் அமைக்கப்பட்ட வட்டதாகே அத்தனகல விகாரையில் உள்ளது.



வட்டதாகே வாயில்

### பொலநறுவ வட்டதாகே

இந்த வட்டதாகே நிசங்க மல்ல அரசனால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இதன் அமைப்பு கண்டி தலதா மாளிகையின் கட்டிட அமைப்புடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. வட்டவடிவான அமைப்பில் சிறந்த கலைநுட்ப முறையில் இரு மண்டபங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. கீழ் மண்டபத்திற்கு ஒரே வாசலால் மாத்திரம் உட்செல்லலாம். மேல் மண்டபத்திற்கு நான்கு திசையிலும் நான்கு வாசல்கள் காணப்படுகின்றன. முதல் தளத்திற்கு செல்லும் நுழைவாசலில் மிக அலங்காரமான சந்திரவட்டக்கல், காவற்சிலை, படிவரிசை, அவற்றில் ஹஸ்திய பாவனையில் அமைந்த வாமண உருவங்கள் காணப்படுகின்றன.

மேல்மாடிக் கட்டிடத்திற்கு நான்கு நுழைவாசல்கள் காணப்படுகின்றன. சந்திர வட்டக் கல்லின் அலங்கார வேலைப்பாடுகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாக உள்ளன. காவற்சிலை, கைப்பிடி வரிசையும் உள்ளன. தளத்தைச் சுற்றி சிங்க வடிவ வரிசையில் அமைந்த அலங்காரம். உயிர்த்துடிப்பு நிறைந்து காணப்படுகின்றது. இது புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பழுதடைந்த நிலையில் ஒரு தாது கோபுரம் நடுவில் அமைந்துள்ளது. இதன் நான்கு வாயில் பக்கமும் தியான நிலையில் அமைந்த புத்த சிலைகள் காணப்படுகின்றன இச்சிலையின் தலையில் கேசம் சுருள் இல்லாது தட்டையானது போன்று ஏதோ ஒன்று அணிந்தது போன்றும் காணப்படுகிறது.

நான்கு சந்திரவட்டக் கற்கள், எட்டு காவற்சிலை அவற்றிற்கான கைப்பிடி வரிசைகள் சிறப்புடன் அமைந்து காணப்படுகின்றன. இவை பொலநறுவை காலத்தில் சிறந்த கலைப் படைப்பாக கருதப்படுகிறது.

அனுராதபுர காலத்தின் பின் சிறந்த சிற்ப அமைப்பாக இவற்றைக் கருதலாம். இக்காலச் சிலைகளில் ஆடை மென்மையானதாக ஆபரணங்களும் சிறந்து விளங்குகிறது. இந்திய மதுரா சிற்பத்துடன் இவை ஒப்பிடக்கூடியதாக உள்ளன. பொலநறுவை கலை வேலைப்பாடு இக் கைப்பிடி வரிசை மீன் வாயில் இருந்து வியபத அலங்காரம் கீழே வளைந்தது போன்று 'செதுக்கப்பட்டுள்ளது. மீன் உடம்பு, சிங்கபாதம், சிறப்பு வாய்ந்தவை.

வடக்கு வாசலில் உள்ள சந்திரவட்டக்கல் விசேஷமானது இது போன்று இலங்கையில் எவ்விடத்திலும் காணப்படவில்லை. மத்தியில் தாமரை, கத்திரிப்பூவில் தொடங்கிற வியவெல இருபக்கமும் செதுக்கப்பட்டுள்ளது.

குதிரை, யானை அன்னவரிசை என்பனவும் நாகதல்ல, வியவல, வியபொத்த, பலாபேதி என்பன அணி செய்கின்றன. மிருக வரிசை தெற்குப்பக்கமா செல்கிறது. இது சோழ (பல்லவ) சிற்பமுறையை சேர்ந்ததாக கருதப்படுகிறது.



## சிற்பத் தூண்கள்

இலங்கையில் புராதன கட்டிடங்களிலும், தாதுகோபுர சுற்று வீதிகளிலும், அழிந்து போன வட்டதாகே மேடைகளிலும் காணப்படும் சிற்பத் தூண்கள் முக்கியமானவை. இத்தூண்கள் துண்டுகளாக பொருத்தப்பட்டோ, முழுமையாக செதுக்கப் பட்டவையாகவோ காணப்படுகின்றன.

அனுராதபுரியில் உள்ள லோகமகாபாயக (ஆயிரங்கால் மண்டபம்) கற்தூண்கள் அணிவகுத்து நிற்கும் போர்வீரர்கள் போன்று காட்சியளிக்கின்றன. ரூபான்வெலிசய மிதுருகிரிய போன்ற புராதன சட்டிடங்களில் காணப்படும் தூண்கள் சிறப்பு வாய்ந்த அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தவையாகும்.

இத்தூண்களின் உச்சியில் (தலைப்பகுதியில்) பக்கங்களில் தாமரை, பலாபேதி, வாமணரூபங்கள் போன்ற வடிவங்கள் மிகச் சிறப்பாக செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன.


இத்தூண்கள் நான்கு பக்கம் அல்லது எட்டுப் பக்கம் (விளிம்பு) உடையவையாகும் கண்டி, கம்பளை, மகுலகட, எம்பக்கே தேவாலயங்களில் அழகிய வேலைப்பாடுடைய மரத்தூண்கள் காணப்படுகின்றன.

பொலநறுவை நிசங்கலதா மண்டபத்தில் காணப்படும் தூண்கள் தாமரைத் தண்டு மொட்டுப் போன்ற அழகிய அமைப்புடைய விஷேஷ தன்மை வாய்ந்தவையாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் சிலைகள்



புத்தர் சிலைகள் இலங்கையின்சிற்ப வடிவங்களில் மிக முக்கியமானவையாகும். புத்தருக்கு சிலை அமைக்கும் முறை எப்போது தோன்றியது என கூற முடியாவிட்டாலும் இலங்கையில் புத்தர் சிலை அமைக்கும்முறை கி. பி. 6ம், 7ம் நூற்றாண்டிலே அதாவது வசப மன்னன் காலத்திலே ஏற்பட்டது என மகாவம்சம் கூறுகின்றது. புத்தர் மறைந்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னரே புத்தர் வடிவங்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு முந்திய காலத்தில் புத்தரின் அடையாளச் சின்னங்களான தர்ம சக்கரம், அரசமரம், திருப்பாதம் (பாதச் சுவடு), தாமரைமலர் என்பவையே பௌத்தரின் வணக்கத்துக்குரிய சின்னங்களாக கொள்ளப்பட்டன.

சாரிபொத்த என்னும் புராதன நூலில் புத்தரின் வடிவங்கள் பற்றி கூறப்படுகிறது. அழகு, கருணை, சாந்தம், அறிவு, அளவுப் பொருத்தம் என்பன அதில் விபரிக்கப்பட்டுள்ளன. சிறந்த புத்தர் சிலை எனக் கொள்ளப்படுவது வடிவம் பூர்த்தியடைந்து உடல் இயல்பினூடாக வெளிப்படுத்தும் ஆத்மீக தன்மை கொண்டதாக அமைவதாகும்.


இலங்கையில் காணப்படும் புராதன புத்த சிற்ப வடிவங்கள் சிறிய அளவிலிருந்து பிரமாண்டமான அளவில் உள்ளன. இவற்றில் சிலவற்றை இன்றும் கொழும்பு அரும்பொருட் காட்சிச் சாலையில் காணலாம். அனேகமாக கருங்கல், மரம், களி என்பவற்றினால் இவை உருவாக்கப்பட்டாலும், உலோகத்திலான வடிவங்களையும் காணக்கூடியதாக உள்ளது.

குப்த காலம் இந்தியாவில் எழுச்சி பெற்றிருந்த போது இலங்கையில் அனுராதபுரத்தில் பௌத்த சிற்பங்களும், போதிசத்துவ வடிவங்களும் உருவாகத் தொடங்கின. எனவே இந்தியாவில் உள்ள காந்தார, ஆந்திர (அமராவதி) சரணாத் போன்ற இந்தியாவில் உள்ள இடங்களில் எல்லாம் புத்தர் சிலை அமைக்கும் முறை சிறப்புற்றுவிளங்கின. அரச அனுசரணையுடன் பாரிய கருங்கல் சிலைகளும், சிலைமனைகளும் (பிலிமகே) அனுராதபுரத்திலும் உருவாக்கப்பட்டன. இலங்கையில் காணப்படும் புராதன புத்தர் வடிவங்கள் கூட இந்தியாவில் காணப்பட்ட மரபுகளைக் கொண்டதாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான புத்தர் சிலைகள் இருத்தல், நிற்றல் சயனித்தல் போன்ற வடிவங்களிலேயே உருவாக்கப்பட்டவையாக விளங்குகின்றன. அவ்வாறான சிலைகளின் அவயங்களில் முக்கியமாக கரங்களில் காட்டப்படும் முத்திரை (அபிநயம்) ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் ஒன்றாக கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(1) (2) (3)

1. அபயமுத்திரை 2. கருணைமுத்திரை 3. பூமிதரிசன (பரிச) முத்திரை
4. விதர்க்க முத்திரை 5. வரதமுத்திரை. இவற்றில் சில

இலங்கையில் உருவாக்கப்பட்ட புராதன புத்தர் சிலைகளில் காலத்திற்கு காலம் ஆடை இலட்சணங்கள் மாற்றமடைந்து வந்துள்ளமையும் காணக்கூடியதாக உள்ளது. அனுராதபுரக் கால புத்தர் சிலைகளில் ஆடைகள் உடலோடு ஒட்டிய வண்ணம் மடிப்பு ஆடம்பரமற்ற இயற்கைத் தன்மை பொருந்தியதாகவும், கருங்கற்களினால் உருவாக்கப் பட்டவையாகவும் காணப்படுகின்றன. ஆயின் அனுராதபுர காலத்தை அடுத்துவந்த பொல னறுவை கண்டிக் காலங்களில் எல்லாம் புத்தர் வடிவங்களில் மாறுபட்ட தன்மையினை காணக்கூடியதாக உள்ளது.

பொலனறுவை கால புத்தர் சிலைகளின் அங்கிகளின் மடிப்புகள் ஒரு புதிய கலைப்பாணியை காணக்கூடியதாக உள்ளது. அங்கிகளின் சமாந்தரமான சோடிசோடியான மடிப்புகள் அமைக்கப்பட்டு இடத்தோள் வழியே அடர்ந்த மடிப்புக்களாக முடிவடைகின்றன பொலனறுவை காலத்தில் செங்கல், சுண்ணாம்புக்கல் போன்றவற்றால் புத்தர் சிலைகள் உருவாக்கப்பட்டதை காணக்கூடியதாக உள்ளன. இக்கால புத்தர் சிலைகளின் தலை மழுக் கப்பட்டது போன்று காணப்படுகிறது.

கண்டிக்கால புத்தர் சிலைகள் அனுராதபுர, பொலனறுவகைக்காலங்களில் காணப்படும் சில பாரம்பரிய அம்சங்கள் நீக்கப்பட்ட வகையில் காணப்படுகின்றன. கண்கள் திறந்த வண்ணமும் கண்டிக்கால ஆடையணிகள் சிலவற்றை அணிந்தது போன்று உருவாக்கப்பட் டுள்ளன. செங்கல் சுண்ணாம்பு சாந்தினால் மெருகூட்டப்பெற்று அங்கிகள் நீரலை போன்ற நெழிவு மடிப்புகள் கொண்டதாக விளங்குகின்றன. இச்சிலைகளின் பின்னனி தலை மேற் பகுதி மகர தோரனம் அமைந்து காணப்படுகிறது இது இக்கால சிலைகளின் முக்கிய அம்ச மாகும். கண்டி, கம்பளை, இலங்கா திலகா விகாரை, கடலாதேனிய புத்தர் சிலைகள் குறிப் பிடத்தக்கவை.

## நிற்றல் வடிவங்கள்



அவுக்கண புத்தர்

நின்ற வடிவத்திலான புத்தர் சிலைகளில் வடமத்திய மாகணத்தில் மகா இலுப்பள்ளமையில் கண்டெடுக்கப் பட்ட பளிங்கு (Mablɛ) கல்லிலான சிலையே முக்கிய மானதாகும், மிகப்பழமையானதும் காலத்தால் முற்பட்ட துமான இச்சிலை கி. பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த தாக கருதப்படுகிறது. 2மீற்றர் உயரமபன இச்சிலையின் வலது தோள்பட்டை அங்கியை தாங்கிய வண்ணம் உள்ளது. இந்திய அமராவதி (ஆந்திர) மரபில் உரு வாக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டு வந்திருக்கலாம் என கருதப்படுகின்றது. இது துண்டுதுண்டாக உருவாக்கப் பட்டு சேர்க்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

உயர்ந்த மலைப்பாறையைப் பயன்படுத்தி அனுராத புரத்தில் ஆக்கப்பட்ட புத்தர் சிற்பங்களுள் அவுக்கணை என்னும் இடத்திலுள்ள புத்தர் சிலையே முக்கியமான தொன்றாகும். கி. பி. 5ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படுகின்ற இச் சிலையின் உயரம் 14 மீற்றராகும். வலக்கரத்தில் அபயமுத்திரையுடன் அங்கியைத் தாங்கி நிற் கின்றது. அசையும் தன்மையை வெளிப்படுத்தும் அங்கியின் சுருள்கள் மிக அழகான கலைப்படைப்பாகும். தலை உச்சியில்உள்ள அமைப்பு பிற்காலத்திலே உருவாக்கப்பட்டதாகும். தாதுசேன மன்னனாலே ஏற்படுத்தப்பட்ட இச்சிலை அமராவதி சிற்ப மரபு எனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலனறுவை கல்விகாரையிலும் நின்ற வடிவில் கருணை முத்திரையுடன் ஒரு புத்தர் சிலை காணப்படுகிறது. புத்தரின் சீடர் ஆனந்தரின் வடிவம் என கூறப்படுகிறது. பொலனறுவை, தூபராமவில் நின்ற பாவனையில் உள்ள புத்தர் சிலை ஒன்று காணப படுகிறது. கைகால்கள் சிதைந்த நிலையிலும் மிக அமைதியும் ஆடைமடிப்புக்கள் நேர்க்கியாகவும் உள்ளன.

## இருத்தல் வடிவங்கள் (சமாதி நிலை)

இலங்கையில் இருத்தல் வடிவத்தில் பல புத்தர் சிலைகள் காணப்படினும். அனுராதபுர மகா மேவுனாவிலுள்ள புத்தர் சிலையே மிக உயர்ந்ததாக கருதப்படுகிறது. கி.பி.4ம்,5ம் நூற்றாண்டை சேர்ந்த இச்சிலை கருங்கல்லால் உருவாக்கப்பட்டது அரைவாசி மூடியவிழிகள், புன்முறுவல்,அமைதியான சுபாவம், கருணையை வெளிப்படுத்தும் தன்மை, பத்மாசன தியான நிலையிலுள்ள இச்சிலை புத்தபெருமானின் தனித்துவமான ஆளுமையும் மேன்மைத் தன்மையும் கொண்டது. உடலோடு ஒட்டிய மெல்லிய அலை போன்றுஆடையில் எளிய கோடு காட்டப்பட்டுள்ளது. இந்திய, குப்த மரபினை ஒத்ததாக சுருதப்படும் இச்சிலை இலங்கைக் கலைஞரின் சுதேசபடைப்பாக கூறப்படுகிறது



மகாமேவுனா புத்தர்


இவ்வாறான இருத்தல் நிலை புத்தர் சிலை ஏறத்தாழ கி. பி. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த அபயகிரி விகாரையில் உள்ள சமாதி நிலைப் புத்தர் சிலையாகும். அனுராதபுர தொலுவிலாவில் கண்டெடுக்கப்பட்ட தற்பொழுது கொழும்பு அரும் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளதுமான ஒரு சிலையும் அழகு வாய்ந்ததாகும். இச் சிலையின் கண்ணிமை, கழுத்து என்பன ஏனைய சிலைகளிலும் மிக இயல்பாக அமையப் பெற்றுள்ளன தலை அழகியல்பான தோற்றத்தையும் பெற்றுள்ளது

பொலனறுவை கல்விகாரையில் காணப்படும் புத்தர் சிலைகளும் சிறப்பு வாய்ந்தவை கி. பி 4ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கூறப்படும் சேருவெல என்னும் இடத்தில் காணப்படும் புத்தர் சிலையானது நாகபாம்பில் அமர்ந்தது போன்றும் தலையின் பின்னால் நாகத்தின் வடிவம் காணப்படுகிறது இதன் உயரம் 1½மீற்றராகும் இதன் ஆடை மெல்லியதும் உடலோடு ஒட்டியதுமாக இருக்கிறது. சுயகட்டுப்பாடு சமத்துவம் என்பவற்றை வெளிப்படுத்துவதாக இதுவிளங்குகிறது. தற்போது தங்க முலாம் பூசப்பட்டுள்ளது.

இருத்தல் நிலையில் உள்ள புத்தர் சிலைகளின் தலைக்குப் பின்னால் ஒளிவட்டத்தினையுடையதாக விளங்குகின்றன. நிற்கும் பாவனையில் உள்ள சிலைகளில் ஒளிவட்டங்கள் அமைக்கக்கூடிய வசதிகள் காணப்படவில்லை. பொலனறுவையில் உள்ள கல்விகாரையில் நான்கு சிலைகள் உள்ளன. இவற்றில் இருத்தல் வடிவத்தில் உள்ள புத்தர் சிலைகளில் தியான நிலையிலே காணப்படுகின்றன. அபயகிரி, தூபராம போன்ற இடங்களில் செங்கல்லிலான சிதைந்து அழிந்து போன சமாதிப் புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விகாரை புத்தர்

12ம் நூற்றாண்டுக்குரிய பொலனறுவை கல்விகாரையில் 15 மீற்றர் நீளமான சயனித்தல் வடிவில் புத்தர் சிலை ஒன்று உண்டு· தனித்துவமான பாதுகாப்பு வீடு இதற்கு அமைக்கப்பட்டுள்ளது. இதின் தலையணை அலங்கார வேலைப்பாடுகள் தலையணையில் பஞ்சு வைத்தது போன்றே இயற்கையோடு அமைந்து காணப்படுகிறது. அத்தறக்கொல்லாவ, டம்புள்ள, தந்திரிமலை, திரியாய, பிதுறுகால போன்ற இடங்களிலெல்லாம் பழைய சயனித்தல் புத்தர் வடிவங்களை காணக்கூடியதாக உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 4

# இலங்கையின் புராதன ஓவியக்கலை

இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட புராதன சித்திரங்கள் வரலாற்றுக்கு முற்பட்டவை எனக் கூறுவதற்கு ஏதுவாய் பூர்வீக ஓவியங்கள் ஒன்றுதானும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. வரலாற்றுக்கு முற்பட்டது எனக் கருதப்படும் தந்திரி மலை ஓவியங்கள் தானும் சில இந்திய ஓவியங்களுடன் தொடர்புடையனவாய் உள்ளன, என ஆய்வாளர் கருதுகின்றனர்.

எவ்வாறாயினும் இலங்கையின் கலை வரலாற்றில் எதிர்பாராத வகையில் ஓவியக் கலை வளர்ச்சியடைந்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது. பண்டைய சித்திரங்களையும் வரைபுகளையும் வைத்து ஆராய்ந்ததில் இலங்கைக் கலை வரலாற்றில் இரு வேறு ஓவியத் தன்மைகளை காணக்கூடியதாக உள்ளது அவற்றில் ஒன்று மக்கள் மரபு எனவும் மற்றது நூல் மரபு எனவும் கூறப்படுகின்றது. நாட்டு மக்கள் தம்முள் எழுந்த ஒரு சாதனை மூலம் நாட்டின் இயல்திறனை இலகுவழியில் வெளிப்படுத்தி உருவாக்கும் கலை மக்கள் மரபாகும் நாட்டின் பல துறைகளிலும் ஏற்பட்ட பொது விழிப்பினால் சூழ்நிலைக்கு ஏற்ப காலத் துக்குக் காலம் பிறக்கும் கலை நூல்மரபு எனப்படுகின்றது.

இலங்கை ஓவியக் கலையின் தன்மை பழமை பேணுவதாகவும் தொடர்ந்து வந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது. ஆனாலும் இலங்கையின் கலை இந்தியக் கலையின் செல்வாக்கினால் உருவாக்கப்பட்டது என்பதும், இலங்கையின் கலை கலாச்சார வளர்ச்சிக்கு பௌத்த மதம் முக்கியமானதென்பதும் குறிப்பிடத்தக்கது. பௌத்த சிந்தனையால் பௌத்த ஜாதகக் கதைகளையும் புத்தரின் வாழ்வில் இருந்து சில பல காட்சிகளையும் விகாரையில் சித்தரிக்கும் பழக்கம் பழமையானது. அது இன்று வரை தொடர்ந்து வந்துள்ளது.

இலங்கையின் மேற்பரப்பை கொண்டிருந்த புராதன நிலையங்கள், கட்டிடங்கள் யாவும் ஓவியங்களாலும் அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. அக்காலக் கலைஞர்கள் குகைப் பாறைகளை தேர்ந்தெடுத்து மேற்பரப்பில் மெல்லிய சுதை (கலவை) பூசி செப்பனிட்டு அதாவது சுண்ணாம்பு, மண், உமி கலந்த கலவையைப்பூசி அதன் பின்னே சித்திரம் வரைந்தனர். அவ்வாறு மேற் பூச்சு உலரமுன்னே வரையப்பட்ட ஓவியங்கள் ஈரச்சுதை ஓவியங்கள் என அழைக்கப்பட்டது. (Fresc‹ Buono) மேற் பூச்சானது நன்கு உலர்ந்த பின் வரையப்பட்ட சித்திரங்கள் உலர்ச்சுதை ஓவியம் (Fresco Secco) என அழைக்கப்பட்டது. இவ்வா ! வரையப்பட்ட ஓவியங்கள் குகை ஓவியங்கள் (Cave painting) சுவரோவியங்கள் (Wall painting), கூரைச்சித்திரங்கள் (Roof painting) என வகுக்கப்பட்டுள்ளது. இவ் ஓவியங்கள் தொன்மையும், சிறப்பும் வாய்ந்தவை.

அக்கால கலைஞர்கள் வர்ணங்களை உபயோகிப்பதிலும் ஒரு குறித்த மரபு முறையை கைக் கொண்டனர். உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தும் வகையில் வர்ணங்களை தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தி உள்ளார்கள். தேவ, மனிதர், ராட்சதர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி, பேதம் போன்ற வேறுபாட்டைக்காட்ட ஆடைகளை மாத்திரம் அன்றி வர்ணங்களிலும் காட்டியுள்ளனர். இராட்சதர் மிருகங்கள், இருண்ட வர்ணத்திலும் தேவர்கள் பொன் மஞ்சள் வர்ணத்திலும் பயம் சந்தோசம் என்பவற்றைக்கூட வர்ணங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

பௌத்த ஓவியங்களில் சிங்கள கலைஞர்கள் மஞ்சள், வெள்ளை, சிவப்பு, கறுப்பு நீலம் முதலானவற்றையும் அவற்றின் சாயலையுமே மிதமாகப் பயன்படுத்தி உள்ளனர், இவ் வர்ணங்கள் அனைத்தும் இயற்கை கனிப் பொருட்களில் இருந்தும் மரப்பட்டை, இலைச்சாறு போன்ற தாவரப் பொருட்களில் இருந்தும் பெற்றிருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. சிவப்பு வர்ணம் இரும்பு மூலகத்தில் இருந்தும் இரும்பு பொட்டாசியமாகவோ சாதிலிங்கமாகவோ இருந்திருக்கலாம். தாவரப் பொருட்களில் இருந்து பச்சை வர்ணம் உருவாக்கப்பட்டிருக்கலாம். நீலத்தையும் மஞ்சளையும் கலந்து பச்சை வர்ணத்தை உருவாக்கி இருக்கலாம். மஞ்சள் நிறத்தைப் பெற கொக்கட்டி மரச்சாறும் நீல வர்ணத்தை அவுரி பூண்டில் இருந்தும் வெள்ளை வர்ணத்தைமக்குளு என்னும் களிமண்ணில் இருந்து பெற்றிருக்கலாம் பலாப்பிசின், விளக்குக்கரி, கெகுனுபால் என்பவற்றில் இருந்த கறுப்பு வர்ணம் தயாரிக்கப்பட்டிருக்கலாம். விளாமரப்பிசினைக் கொண்டு 'தோரண' எனப்படும் ஒரு வகை எண்ணெய்யை தயாரித்து இச்சித்திரங்களின் மேல் பூசி பளபளப்பையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தினர் தூரிகைகளுக்கு (Brush) மரவிழுது வேர் போன்றவற்றையோ, பிராணிகளின் உரோமத்தையோ கொண்டு தூரிகைகளை தயாரித்து உபயோகித்தனர் என நம்பப்படுகின்றது.

## விகாரைச் சித்திரங்கள்

விகாரையில் சித்திரம் வரைவதிலும் ஒரு குறித்த மரபு முறை கடைப்பிடிக்கப்பட்டது. துணிகட்டி அல்லது வெள்ளைக்களி (மக்குளு) பூசி விகாரை சுவர்களை சீர்படுத்திய பின்னர் கூர்மையான முள் (தெழிக்கூர்) கொண்டு புற உருவத்தை வரைந்து வேர்களினால் செய்யப்பட்ட தூரிகைகளினால் வர்ணம் தீட்டினர். ஜாதகக் கதைகளையும் புத்தரின் வரலாற்று சம்பவங்களையும் வரைந்து விகாரைகளை அழகு படுத்தினர். பின்னணி சிவப்பு வர்ணத்திலும் புற உருவங்கள் (Outline) வடிவங்கள் கறுப்பு ரேகையில் வரையப்பட்டன. கதைகள் தொடர்ச்சியாக பாமரமக்கள் விளங்கும் வகையில் சம்பவங்களை வரைந்தனர். 'தோரண' எனப்படும் எண்ணெய்யினை வர்ணத்துடன் கலந்து பூசினர். குங்குலியம் (தும்மல்) லாக்கட போன்றவற்றை உபயோகித்து இந்த எண்ணெய்யை தயாரித்தனர். இந்த எண்ணெய் வர்ணங்கள் பழுதடையாமலும், பளபளப்புத் தன்மை கெடாமலும் சித்திரங்கள் நெடுநாள் சிதையாமலும் பாதுகாக்கவும் உதவின

## புராதன ஓவியங்கள்

தென்னிலங்கையில் 'நிதிகம' என்னும் கிராமத்தில் ஓர் பழைய குகையில் போதிசத்துவரின் தலையும் அதன் மீது விண்ணுலக மங்கையொருத்தி பூக்கள் தூவுவது போன்று ஒரு காட்சியும் வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியம் மிக மென்மையான கபில நிறமுள்ள சாந்துப் பரப்பின் மேல் செஞ்கண்ணத்தால் வரையப்பட்டுள்ளது. இதுவே இலங்கையில் காணப்படும் மிகப்பழைய ஓவியமாகும். கி. பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படுகின்றது.

கண்டியிலுள்ள 'கின்ரகலா' என்னும் இடத்தில் புத்தரின் முகவடிவம் ஒன்று வரைந்து காணப்படுகின்றது. புத்தர் ஞானம் பெற்ற முதல் ஏழுவாரத்தில் இது வரையப்பட்டதாகக் கூறப்படுகின்றது. டக்சா, பாலூக்சா என்னும் இரு வணிகர்களால் வரையப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதுல் பௌவ்வா

இது திசைமாறாவிலிருந்து வடகிழக்கே ஐந்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. கி. மு. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த புராதன ஓவியங்கள் இங்கு காணப்படுகின்றன 'கரம்பல்ல' ஓவியங்கள் என இவை அழைக்கப்படுகின்றன. இவ் ஓவியங்கள் பற்றி விளக்கமாக ஒன்றும் ஆராயப்படவில்லை என மஞ்சுசிறி கூறியுள்ளார்.

### மிகுந்தலை



இலங்கையின் பௌத்த புனித தலங்களில் சிறிபாதமலைக்கு (சிவனொளிபாத) அடுத்ததாக முதன்மை பெறுவது மிகுந்தலையாகும். தேவநம்பியதீசன் பௌத்த தூதுவர் மகேந்திரனை முதன்முதலாக இவ்விடத்திலே சந்தித்ததாக கூறப்படுகிறது. இங்கு பழமை வாய்ந்த தாது கோபுரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றை அகழ்ந்த போது சிதைந்த சுவர்களில் பழமை வாய்ந்த ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் ஓவியத்தின் உருவங்கள் அரையின் கீழ் மறைந்து காணப்படுகின்றன. இச்சித்திரங்களை ஆராய்ந்த கலாநிதி பர்ணபிதான அவர்கள் முகில்களிடையே மறைந்து காணப்படும் தேவர்கள் எனக் கூறியுள்ளார். 28 உருவங்கள் காணப்பட்ட இச் சித்திரங்களில் சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கிந்தகல

பேராதனைக்கு அருகில் உள்ள கிந்தகல என்னும் இடத்தில் ஆதிகாலத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை மிகவும் பழுதடைந்த நிலையில் வர்ணப் பகுதிகள் மாத்திரம் பார்ப்போருக்கு ஒரு கருத்தும் விளங்காத நிலையில் உள்ளன. இதன் வலது பக்கத்தில் புத்தபெருமான் ஞானம் பெற்றது அசல்ஆள் மரத்தில் வீற்றிருப்பது போன்று ஒரு சித்திரம் காணப்படுகின்றது புத்தரின் வலப்பக்சத்தில் தர்மத்தை உபதேசிக்கும் வகையில் பிரமன் இருக்கின்றார். ஒளிவட்ட முகம் கொண்ட தலையுடன் இருப்பது புத்தரின் உருவம் என அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. பொன்மஞ்சள், சிவப்பு ஆகிய வர்ணங்கள் காணப்படும் இச்சித்திரம் சிறந்ததாக கருதப்படுகின்றது.

## தந்திரிமலை ஓவியங்கள்

அனுராதபுரத்தில் மகாவலுச்சிப் பாதையின் நான்குமீற்றர் தொலைவில் தந்திரிமலை அமைந்துள்ளது. கடல்மட்டத்திலிருந்து 94 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள ஒரு போதிகை அமைந்துள்ளது. இவ்விடத்திலிருந்து பார்க்கும் போது அனுராதபுரத்திலுள்ள ஜெதவனராம, அபயகிரி, மிகிந்தலை போன்ற விகாரைத் தலங்களைக் காணக்கூடிதாகவுள்ளது. போதி மண்டபத்தின் கீழ் வலதுபக்கமாக உள்ள கற்குகையில் புத்தரின் சமாதி வடிவம் ஒன்று காணப்படுகிறது. பௌத்தம் இலங்கைக்கு வர முற்பட்ட காலத்தில் வரையப்பட்டதென கூறப்படும் இரேகைச் சித்திரங்கள் இங்கு காணப்படுகின்றன. நான்கு பிராமிய எழுத்துவடிவங்களும் இங்கு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திம்புலா கலை

திம்புலாகலை என்பது சரித்திர வரலாறு தெரியாத ஒரு மலையடுக்காகும். மகாவலி கங்கைக்கு அண்மையில் அமைந்து காணப்படும் இவ்விடம் கி.மு. 300 ஆண்டில் இருந்து கி.பி. 1200 வரையுள்ள காலப்பகுதிக்குள் உட்பட்டதாக இருக்கலாமென நம்பப்படுகிறது ஒரு காலத்தில் இங்கு தீட்டப்பட்ட சுவரோவியங்கள் இன்று அழிந்த நிலையில் புற உருவங்கள் மாத்திரமே காணப்படுகின்றன. திரு. H. E. C. பெல் என்பவர் 1895ஆம் ஆண்டில் இதை ஆராய்ந்தார். இப்போது நிலைத்து நிற்பவை கருமை வர்ணத்திலுள்ள சித்திரங்களே. எஞ்சிய வர்ணங்கள் மங்கிய நிலையில் காணப்படுகின்றன. இங்குள்ள ஓவியங்கள் இன்னும் தெளிவாக ஆராயப்படவில்லை.

## புல்லிக் கொட

திம்புலாகலையில் இருந்து ½ கிலோமீற்றர் தொலைவில் புல்லிக்கொட என்னும் குகை அமைந்துள்ளது. அங்கு ஐந்து ஆணின் உருவங்கள் தலை அணியுடன் கழுத்தில் மாலை அணிந்தது போன்றும் தலையைச்சுற்றி பின்பக்கமாக வட்டமான அமைப்புக்கள் கொண்டதாக வரையப்பட்டுள்ளன. இவற்றில் 4 உருவங்கள் வணங்குவது போலவும் நடுவில் அமைந்துள்ள உருவம் வேறுபட்ட தன்மையுடன் காணப்படுகிறது. இவ்வுருவங்கள் பற்றி பலவித கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இச்சித்திரங்கள் மெல்லிய பச்சை, சிவப்பு வர்ணம் தீட்டப்பட்டு பின்னணி வெள்ளை வர்ணத்தால் மறைக்கப்பட்டுள்ளது. புற உருவங்கள் மிக நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன. இச்சித்திரங்கள் கி. பி. 900 ஆண்டு காலத்தை சேர்ந்ததாக கருதப்படுகின்றது.

## மகியங்கனை

கி.பி. 1000 நூற்றாண்டில் 1ம் விஜயபாகு மன்னனால் புதுப்பிக்கப்பட்ட தாது கோபுர ஓவியங்களில் இரண்டு அடையாளம் காணப்பட்டுள்ளன 1,புத்தர் ஞானம் பெறல் 2. விஷ்ணு உருவம். சிவப்பு, செம்மஞ்சள், கறுப்பு, வெள்ளை போன்ற வர்ணங்கள் இவ் ஓவியங்களில் பாவிக்கப்பட்டுள்ளன. உட்சுவரில் புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் வரையப்பட்டுள்ளன. மரம் ஒரு தனித்தன்மையான முறையில் வரையப்பட்டுள்ளது. 1957ம் ஆண்டில் மகியங்கனை தாது கோபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் 11ம் நூற்றாண்டுக்குரிய வண்ண ஓவியங்களாகும்.

பழமை வாய்ந்து ஓவியங்கள் காணப்படும் அனுராதபுரம், ருவான்வெலிசாய தாது கோபுரத்தின் வாயில் கடையில் இலை, மொட்டு, பூக்கள் கொண்ட ஒரு பூங்கொடி வடிவிலான ஓவியம் ஒன்று காணப்படுகிறது. இப்பூவின் இதழ்களின் நடுவே கின்னரப் பறவை ஒன்று வரையப்பட்டுள்ளது. சிவப்பு, மஞ்சள், நீலம் போன்ற வர்ணங்கள் இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளன. புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், ஜாதகக் கதைகளையும் துட்டகைமுனு மன்னன் ருவான் வெலிசாயாவில் சித்திரங்களை தீட்டுவித்தான்.




## சிகிரியா சுவரோவியங்கள்

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் கொழும்பில் இருந்து கபறணைக்கு செல்லும் பெருந்தெருவில் 96ம், 97ம். கிலோமீற்றர்களுக்கிடையே இனமாலு வாவாவுக்கு திரும்பும் வளைவில் வடகிழக்காய் நோக்கும் போது உள்ள பாறையே சிகிரியாக் குன்றாகும்

இலங்கையின் பழமை மிகு கலையினையும் வரலாற்றுத் தடயங்களையும் உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் சிகிரியா விளங்குகின்றது. சிகிரியா ஓவியங்கள் விகாரை ஓவியங்களிலும் வித்தியாசமானவை. அளவிலும் அமைப்பிலும் வேறுபட்டவை. சிகிரிமலையில் சுமார் 160 மீற்றர் உயரத்தில் செங்குத்தான பாறையில் இவ்வழகுச் சித்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணப்படுகின்றன. அவ்வோவியங்களில் மேகங்களிடையே தோன்றும் பெண் உருவங்கள் தனித்தனியாகவும், சோடியாகவும் காணப்படுகின்றன. இவ்வுருவங்களின் அரையின் கீழ்ப்பகுதி மறைந்தது போன்று காணப்படுகின்றது. ஐந்து வயதுக் குழந்தையின் அளவிலான இவ்வுருவங்கள் சிறியவையாகவும் பெரியனவாகவும் வரையப்பட்டுள்ளன.

கிபி 5ம் நூற்றாண்டு காலத்தை சேர்ந்த இவ் ஓவியங்களில் நல்ல நிலையில் இருப்பவை 22 உருவங்களே, இந்திய அஜந்தா ஓவியங்களிடையேயும், சிகிரியா ஓவியங்களிடையேயும். மிகுந்த ஒற்றுமை காணப்படுவதால் ஒரே கலை மரபிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் இவ் ஓவியங்களை தீட்டி இருக்க வேண்டும் என எண்ண வேண்டியதாய் உள்ளது. கபிலம், வெள்ளை, மஞ்சள், நீலம் இவ் ஓவியங்களை அழகு படுத்துகின்றன. நீல வர்ணம் குறைவாக பயன்டுத்தப்பட்டுள்ளது. கறுப்பு வர்ணம் பயன்படுத்தப்படாதது போலவே தோன்றுகிறது.

இந்திய அஜந்தா ஓவ்யங்களிலும் சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய வர்ணங்களும் கறுப்பும் வெள்ளையும் மிக அருமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அஜந்தாவில் 11வது குகையில் காணப்படும் பூ ஏந்திய மங்கையின் உருவம் போன்று சிகிரியாவிலும் காணப்படுகின்றது. சிகிரியா, அஜந்தா ஓவியங்களுடன் ஒப்பிடப்படினும் சிகிரியா சித்திர முறையானது சுயாதீன தேசிய முறையைச் சேர்ந்த ஈரச்சுதை ஓவியமாகும் (பிறஸ்கோ புவனோ) Fresco-Buono) இவ்விரு ஓவியங்களிலும் கையாளப்பட்ட வர்ண முறை பற்றியும் சிகிரியின் வர்ணம் ஒரே முறையில் தீட்டப்பட்டுள்ளது போலவும் முழு வேலையும் பொதுவாக வர்ணங்கள் கனத்தவையாகவும் சில ஒளியுடையதாகவும் விளங்குகின்றன. பின்னணி மெல்லிய வர்ணமாக அமைந்துள்ளது. வர்ணங்கள் சுதை பரப்போடு இரசாயனமும் இணைந்து ஒன்றிப் போயுள்ளன ஆயின் அஜந்தா ஓவியங்கள் உலர் சுதை ஓவியங்களாகும் (ரெம்பிறா) Tempera அஜந்தா ஓவியங்களில் முழு அளவிலான ஆண், பெண் உருவங்கள் எண்ணற்று காணப்படுகின்றன சிகிரியாவின் ஓவியங்களில் அவ்வாறான தன்மையினை காணமுடியவில்லை. சிகிரியில் காணப்படும் பெண் உருவங்கள் வடக்குத் திசையை நோக்கி செல்பவர்களாக அதாவது ஒரே திசையை நோக்கிச் செல்பவர்களாக காணப்படுகின்றனர். சில மகளிர் பொன் வர்ணத்திலும் சிலர் நீல வர்ணத்திலும் காணப்படுகின்றனர். பொன் வர்ணத்தில் உள்ளோர் அரசகுமாரிகள் எனவும் நீல வர்ணத்தில் உள்ளோர் தோழியர் எனக் கருதுவோரும் உளர் சிகிரியா ஓவியக் கலையானது ஒரு லௌவீக வாழ்வினைப் பிரதிபலிப்பவையாகும் எனக் கூறப்படுகிறது. அஜந்தா ஓவியங்களோ ஆத்மீகத்தன்மையை வெளிப்படுத்தும் மத ஓவியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை, அல்லி, அலறி, சூரியகாந்தி போன்ற மலர் கொண்ட பூந்தட்டினை பெண்கள் ஏந்தியது போன்றும் சாம்பினைப் கையில் பிடித்து பூவினை வைத்திருப்பது போன்றும் இவ் ஓவியங்கள் அமைந்து காணப்படுகின்றன. கன்னியரின் அங்க அமைப்பும் உடல் மிக கவர்ச்சியளிக்கும் வகையில் வரையப்பட்டுள்ளன. கண்கள், நாசி, இதழ் மார்பு, தனம் ஒத்த விகிதாசார முறையில் அழகு மிளிர வரையப்பட்டுள்ள. நீண்ட விழிகள், புருவங்கள், விரல்கள் பெண்மையின் மென்மையை வெளிப்படுத்துகின்றன. தலையணிகள், அட்டியல், தோடு, காப்பு போன்ற அணிகலன்களை அணிந்த கன்னியர் இளமைத் துடிப்போடு ஏதோ ஒன்றினை எதிர்பார்த்திருப்பது போன்று காணப்படுகின்றனர். இலாவண்ணியமான உறுதியான கோடுகள் அசைவையும், திரட்சியையும் காட்டுகின்றன.

கலாநிதி ஆனந்தா குமாரசுவாமி அவர்கள் இவை தேவ கன்னியர் என கூறியுள்ளார் (அப்பறஸ்) மற்றொரு தொல் பொருள் ஆய்வாளரான பரணவிதான என்பவர் முகிலழகிகள் (மேகலதா), மின்னல் அழகிகள் (விஜிலதா) என கூறியுள்ளார்.

இன்றுவரை சிகிரியின் அழகு குன்றவில்லை அதன் அமைதியான சூழல் வரலாறுநிறைந்த தொன்றாகும். காசியப்பமன்னன் தன் சகோதரர்களுக்கு அஞ்சி சிகிரியின் உச்சியில் தன் ராஜதானியை அமைத்தான் எனவும் அறியக்கூடியதாய் உள்ளது. அக்காலத்தில் உருவாக்கப்பட்ட கோட்டை அழிவுகள், தூண்கள், நீர்த்தொட்டிகள், பூந்தோட்டம் என்பவற்றை இன்றும் காணக்கூடியதாய் உள்ளது. காசியப்ப மன்னனாலே இவ் ஓவியங்கள் ஏற்படுத்தப்பட்டது எனக்கூறினாலும் இவ் ஓவியங்களை தீட்டிய கலைஞர் யார் என்பது இன்னும் அறியப்படாத ஒன்றாகவே உள்ளது.

விஷேசமாக இங்கு காணப்படும் கண்ணாடிச் சுவர் (கெடபத்பவுர) பளபளப்பான தன்மையினால் இச்சுவருக்கு பெயர் சூட்டப்பட்டது. சிகிரிய ஓவியங்களை பார்க்க வந்தோர் குறிப்புகளையும், விமர்சனங்களையும், கவிதைகளையும் எழுதி இதன் அழகை மாசுபடுத்தியுள்ளனர். இதில் உள்ள குறிப்புகளைக் கொண்டு சிகிரியாவில் 500 ஓவியங்கள் இருந்ததாக அறியக் கூடியதாக உள்ளது.


நாகபட என்னும் நாககுகை ஒன்று இங்குள்ளது. இதில் அமைந்து காணப்படும் சித்திரங்கள் பலவாண்டு காற்றும், மழையும், வெயிலும் அடித்தும் சேதம் ஏற்பட்டுள்ளன. அனுராதபுரகாலத்து பெண்களின் ஆபரணங்களை பற்றி அறிவதற்கு சிகிரியா ஓவியங்களை பார்த்தால் போதுமானது 1500 ஆண்டுகளுக்கு முன்னே மக்களிடையே வழக்கத்தில் இருந்த ஆபரணங்களையும் அலங்கார நுட்பமாக செய்யப்பட்ட ஒப்பனைகளையும் சிகிரியா ஓவியத்திலே அறியலாம்.

19ம் நூற்றாண்டு இறுதிவரை புதர்களாலும், செடிகளாலும் மறைந்து கிடந்த சிகிரிய ஓவியங்களை தொல்பொருள் ஆய்வாளர் திரு H. C. P. பெல் அவர்களே முதன் முதலாக கண்டு வியப்படைந்தார். இதன் பின்னரே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1968ம் ஆண்டில் சில விஷமிகள் இவ் அழகு சித்திரங்களில் பச்சை தீந்தை பூசியினராயினும் இத்தாலிய கலை நிபுணர்கள் லூலன் சியறேமாறன்சி என்போரின் உதவியுடன் மீண்டும் பழைய நிலைக்கு இவ் ஓவியங்கள் தோற்றுவிக்கப்பட்டன. என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டம்புள்ள குகை ஓவியங்கள்



இது பூமாதேவி (பொளோயமகிகாந்தாவ) எனவும் கிளையை கொண்டுவரல் சங்கமித்திரை வெள்ளரசு எனவும் கருதப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் சுமார் 160 மீற்றர் உயரமான மலைப்பகுதியில் டம்புள்ள குகைகள் காணப்படுகின்றன. சுமார் 600 மீற்றர் நீளமான தூரத்திற்கு அமைந்துள்ள இம் மலைத் தொடரின் ஐந்து குகைகள், அழகிய ஓவியங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் மிகப்பெரிய மலைக் குகைகள் இவைகளே.

டம்புள்ள குகைக் கோயில்கள் கி. மு. 1ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கருதப்படுகின்றன. இது பலமன்னர்களாலும் காலத்திற்கு காலம் புனர்நிர்மாணம் செய்யப் பட்டமையால் இங்குள்ள ஓவியங்கள் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியாதிருக்கின்றது

சில பழைய சித்திரங்களின் மேல் புதிய சித்திரங்களும், சில சித்திரங்களில் திருத் தங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் இச் சித்திரங்களின் தொன்மையை ஆராய்ந்து அறிவது சிரமமாகவே இருந்து வருகிறது

நிசங்கமல்லன், கீர்த்திசிறி இராஜசிங்கன் போன்ற மன்னர்களாலே இவை திருத்தம் செய்யப்பட்டவை என நம்பப்படுகின்றது.

டம்புள்ள பழைய ஓவியங்களில் காணப்படும் உருவ அமைப்புக்கள் தம்பதேனியா காலத்தைப் போன்று காணப்படுகின்றன 2ம் பராக்கிரமபாகு காலத்து கலைப் படைப்பினை யும் இங்கு காணக்கூடியதாகவுள்ளது.

குகை முகடுகளில் (Cave Roof), கூரையில் வரைந்து காணப்படும் விபிஷனர், வினா யகர் அனுமான் போன்ற வடிவங்கள் இந்துமதசெல்வாக்கினை பிரதிபலிப்பவையாக விளங்கு கின்றன.

தேவநம்பியதீசன் காலத்தில் மகிந்தன், சங்கமித்திரை வெள்ளரசு மரக்கிளை கொண்டு வரல், துட்டகைமுனு, எல்லாளன் போர் போன்ற வரலாற்று நிகழ்வுகளும், புத்தர் பரிநிர் வாணம் அடையும் வரையிலுள்ள போதி சத்துவர் வாழ்க்கை நிகழ்வுகள், ஏழு வாரங்களில் புத்தர் தியானம், யமன் புத்தருக்கு விடுத்த அழைப்பு புத்தர் இறுதித் தானத்தை ஏற்று குவினாபாலில் உள்ள மன்னர்களுக்கு செய்த போதனை செம்புகளை பகிர்ந்தளித்தல் என்பன இங்கு அழகாக வரையப்பட்ட பௌத்த ஓவியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுர, மிகுந்தலை ஆகியவற்றிலுள்ள புனித சின்னங்களும் இசுப்பத்தான, ஜேதவனராம, வேலுவன, திவங்க ஆலயம் ஆகிய இடங்கள் பற்றிய ஓவியங்களும் இங்கு வரையப்பட்டு காணப்படுகின்றன.

சம்பிரதாய முறைப்படி டம்புள்ள ஓவியங்களை நான்கு வகைப்படுத்தலாம்.

1. மேலே குறிப்பிட்ட சித்திரங்கள்
2. கண்டிக்கால திருத்த வேலைக்குட்பட்ட சித்திரங்கள்
3. மேற்குறிப்பிட்ட இரு பிரிவுகளுக்கும் இடைப்பட்ட சித்திரங்கள்
4. கண்டிக்காலத்திற்கு பின்பு வரையப்பட்ட சித்திரங்கள்

முதலாம் பகுதிக்குரிய சித்திரங்கள் பொலநறுவை, வேலுவனராம சித்திரங்கள் போன்று பழமை வாய்ந்தவையல்ல. இவ் ஓவியங்கள் பொலநறுவை, கண்டி காலத்திற்கு இடைப்பட்ட ஓவியங்களாகக் கொள்ளலாம். வர்ணப் பொருத்தப்பாடு என்பவற்றை நோக்கும் போது இவ்வுண்மை புலப்படும். இவ் ஓவியங்கள் சிகிரி, பொலநறுவை ஓவியங்கள் போன்று அவ்வளவு உயர்ந்தவையாக இல்லையாயினும் இந்திய அஜந்தா ஓவியங்களைப் போன்று வரைய முயன்ற தன்மையை காணக்கூடியதாக உள்ளது.

இதற்குக் காரணமாய் இருப்பவை சித்திரங்கள் வரையப்பட்டுள்ள நோக்கம் பற்றி ஆராயும்போது அஜந்தா, டம்புள்ள ஓவியங்களிடையே ஒற்றுமை காணக்கூடியதாக இருப்பதுவே.

புத்தரின் வாழ்க்கை சம்பவங்களும், அரச பெருமக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளும் டம்புள்ளயில் காணப்படுகின்றன. ஓவியத்துவம் முழுமையாக வெற்றிகரமாக அமையவில்லையாயினும் அவை அமைந்துள்ள விதத்தினைப் பார்க்கும்போது டம்புள்ள இலங்கையின் குட்டி அஜந்தா என கூறத்தோன்றுகிறது. அக்காலத்து மாத்தளை நிலமே ஓவியர்களே இச்சித்திரங்களை வரைந்திருக்கலாம் என கூறப்படுகின்றது.

இங்குள்ள இரண்டாவது குகையே மிகவும் பெரியளவினதாகும். இதனுள் பல நிலையிலுள்ள புத்தர் சிலைகளும், கூரைச்சித்திரங்களும், பத்ம அலங்காரங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

புத்த உருவங்கள் கல்லாலும், மரங்களாலும் செதுக்கப்பட்டவையாகும். மில்ல புருத, சந்தண போன்ற வகை மரங்களே இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

நின்றுகொண்டும், அமர்ந்துகொண்டும் இருக்கும் மக்கள் கூட்டச் சித்திரமும், புத்தர் சிலைகள் நிரம்பியதாகவும் காணப்படுகின்றது இவை எக்காலத்தில் யாரால் உருவாக்கப்பட்டதென அறிய முடியாதுள்ளது.

இக்குகையின் முகட்டின் நடுப்பாகத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி துவாரத்தினூடாக நீர் கசிந்து துளிகளாக விழுந்தவண்ணம் இருப்பது விசித்திரமான ஒன்றாகும். இந்நீர் பரிசுத்தமானது என கருதப்பட்டு ஒரு பாத்திரத்தில் பாதுகாக்கப்படுகிறது.

மற்றொரு குகைவாசலில் சுண்ணாம்புக் கல்லாலான மகர தோரணம் ஒன்று அமைந்து காணப்படுகின்றது. இந்த மகர தோரணம் சிங்க முகத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஸஸ ஜாதகக் கதை

இங்கு வரையப்பட்டுள்ள ஸஸ ஜாதகக்கதை சம்பவங்கள் புராதன பண்புகளைக் கொண்டதாக அழகாக வரையப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் அலங்காரப் பட்டியுடன் சால்வை அணிந்து அமர்ந்து இருப்பது போன்றும் பலர் வணங்கிய வண்ணமும், சிலர் தாமரை மலர்களை கையில் தாங்கிய வண்ணமும் இருக்கின்றனர்.

இவை சிகிரியா போன்று இல்லையாயினும் அதன் உருவத்தை ஒத்ததாக இருக்கிறது. பின்னணி இருண்ட மேகங்களால் இருண்ட வர்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.

## அரசமரத்தை வணங்குதல்

இச் சித்திரம் கண்டிக் கலையினை பிரதிபலிக்கிறது. பின்னணி சிவப்பு வர்ணத்திலும், மேகங்களுடன் கூடியதாகவுள்ளது.

மேகங்களுடன் வட்டத்தை தலைப் பின்னணியாக கொண்டு பிக்குகள் காணப்படுகின்றனர். இவ்வுருவங்களின் கீழே தேவநம்பியதீசன் தலைக்குமேல் அரசமரத்தை தாங்கி நடுகிறார். பெரகரா மக்கள் கூட்டம் சாதுக்கள் வணங்கி நிற்கின்றனர்.

கோடுகள் கொண்ட ஒரேவகை ஆடையினை அனைவரும் அணிந்துள்ளனர். ஒருவர் முத்துக்குடை பிடித்து நிற்கின்றார் அரசனின் ஆடையணிகள் வித்தியாசமாகவுள்ளன. வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு நிறங்கள் தீட்டப்பட்டுள்ளன.

## புத்தர் பரிநிர்வாணம்

இதுவும் கண்டிக்கால ஓவிய பாணியில் அமைந்து காணப்படுகிறது. அனந்ததேரோவும், கோவிததேரோவும் புத்தரின் இரு பக்கங்களிலும் காணப்படுகின்றனர்; புத்தரின் பாதங்கள் அருகே தேவகூட்டம் காணப்படுகின்றது. நாகலிங்க பூமரங்களின் இரு கிளைகள் வளைந்து நிழல் தருவதாகவுள்ளன.

## பொலநறுவைக் கால ஓவியங்கள்

12ம் நூற்றாண்டில் இலங்கையில் சோழர் ஆட்சிக்காலத்தில் பல்லவ சித்தன்ன வாச ஓவியங்கள் பொலநறுவையில் செல்வாக்கு பெற்று விளங்கின. பொலநறுவை வடகோயிலில் அக்காலத்து ஜாதகக் கதைகள் தேவர் ஊர்வலம் செல்வது போன்ற சித்திரங்கள் வரையப்பட்டு காணப்படுகின்றன. 16 வகையான ஜாதகக் கதைகள் இருப்பதாக கூறப்படுகின்றன. வெசந்தர, விதுறுபந்த, குந்தில, கூகிர, மகாயும,பபரா போன்றவை முக்கியமானவை.

கல்விகாரையில் நுழைவாயிலில் இறங்கிவரும் புத்தர் உருவமும் தாடியுள்ள பிராமணர் பக்தியுடன் வணங்குவது போன்ற சித்திரங்கள் இன்று எஞ்சியவையாக காணப்படுகின்றன தற்போது கோணாகொள என்னும் இடத்தில் நின்று கொண்டு வணங்கும் பெண் உருவம் பொலநறுவை காலத்தை சேர்ந்த ஓவியமாகும்.

## பொலநறுவை வடகோயில்

பொலநறுவ வடகோயிலில் பழமை வாய்ந்த சித்திரங்கள் காணப்படுகின்றன. ஒரு சோடிக் குதிரைகள் தேரை இழுத்துச் செல்வது போன்றும் ஒரு அரசிளங்குமரன் தேரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனத்தினூடாகச் செலுத்துவது போன்றும் ஒரு காட்சி அமைந்துள்ளது. தேரினுள் அரசிளங்குமரன் ஒருவர் சோர்ந்து கிடப்பது போன்றும் காணப்படுகிறது. அரசிளங்குமரனின் பூதவுடலை புதைகுழிக்கு எடுத்துச் செல்வதாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. இன்னும் பல புத்தரின் வாழ்வின் நிகழ்வுகளும் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.

### திவங்க பிலிமகே

திவங்க பிலிமகே என்பது மூன்று வளைவுகள் கொண்ட சிலை வீடு என பொருள்படும். பாரம்பரிய தேசிய கலை முறையில் ஜாதகக் கதைகள் இங்கு சித்திரங்களாக காணப்படுகின்றன. இதன் மத்தியில் வரைந்து காணப்படும் உருவம் புத்தரின் வடிவமாகும். தேசிய பாரம்பரிய சித்திர முறையில் இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன. சிகிரியா சுவரோவியங்களைவிட இச் சித்திரங்களே தேசியத்தன்மை கூடுதலாக காணப்படுகிறது ரேகை மூலம் புற உருவங்களை வரைந்து வர்ணங்களைத் தீட்டியுள்ளனர். உலர்ந்த ரெம்பிரா முறையில் இச்சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

### முக பக்த ஜாதக

போதி சத்துவ உருவம் இதில் மிக அழகாக வரையப்பட்டுள்ளது. வர்ணங்கள் சோபை இழந்தாலும் இளஞ்சிவப்பு, இளம்பச்சை நிறங்கள் தற்போது அழகாக காணப்படுகிறது. இதில் வனம், மரங்கள் அழகாக காணப்படுகின்றன.

### சூல் பதும ஜாதக

வர்ணங்கள் தேசிய தன்மையில் காணப்படுகின்றன. வலது பக்கத்தில் ஒருவர் ஒரு பலகையில் உட்கார்ந்து இருப்பது போலவும், அதே பக்கத்தில் வாழ் வைத்திருப்பது போன்ற உருவமும் குற்றம்புரிந்த பெண்ணை நிறுத்தியது போன்ற ஒரு காட்சியும் வரையப்பட்டுள்ளது.

### மைத்திறி பலஜாதக

இரண்டு அரக்கர் சண்டையிடுவது போன்று அரசர் மத்தியில் இருப்பது போலவும் அரக்கனின் உருவத்தைவிட அரச உருவம் மிக அழகாகவுள்ளது.

### இந்திர லோக

புத்த பிரான் மேலோகத்தில் இருந்து (சங்கிரபுர) இறங்கிவரும் காட்சி வடபக்க தலைவாயிலில் வரையப்பட்டுள்ளது. அழிந்த நிலையில் புத்தரின் வடிவம் காணப்படுகிறது. தலையைச்சுற்றி ஒளிவட்டம் (சிரஸ்பொத்த) அமைப்பு காணப்படுகிறது. சங்கரன் முயலின் வடிவத்தை சந்திரனில் வரையும் காட்சி முயல், வந்துரா, (குரங்கு), நரி போன்ற மிருக உருவங்களும் காணப்படுகின்றன. வாசற்படிகளில் வாமண உருவங்களும் அமைந்து காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ சுவர் சித்திரம்



தேவர் ஊர்வலம் (தேவராதனய)


வடபக்கத்தில் மிகப்பெரிய இடத்தில் இச்சுவரோவியம் வரையப்பட்டுள்ளது. தேவரின் ஊர்வலம் (தேவாராதனய) தேவமனித கூட்டம் தொடர்ந்து அணிவகுத்து நிற்பது போன்ற காட்சி, வர்ணங்கள் அழிந்து போனாலும் உருவங்கள் தெளிவாக உள்ளன. தேவர் களின் முகங்களைச் சூழவுள்ள ஒளிவட்டங்கள் சாந்தியையும் பக்தியையும், ஏற்படுத்துபவை யாக விளங்குகின்றன. இதில் நடுவில் உள்ள உருவத்தைப் பார்ப்பது போலவும், வணங்கு வது போலவும் காணப்படுகிறது. உருவங்களின் கீழே பூ அலங்காரம் கொண்ட ஆடைகள் தலையில் கேது அலங்காரம் கொண்ட முடியும் (கிரீடம்) கைகளில் வளையல் கழுத்தில் நூல் அணிந்த புத்தரின் சாயலைக் காட்டுவதாக உள்ளது. எதிரில் நிற்கும் உருவத்தை முன்னால் கூட்டமாக நின்று வணங்குவது போன்ற கருத்து விளக்கும் வகையில் சித்திரங்கள் அழகாக வரையப்பட்டுள்ளன. பச்ச நிறம் தீட்டப்பெற்ற போதிசத்துவ உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வோவியங்களில் சிகிரியாவின் தன்மை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 05

# கண்டிக் கலை



தலதாமாளிகை - கண்டி

கண்டிக்கலை என இங்கு குறிப்பிடப்படுவது மத்திய பிரதேசத்தில் கண்டி இராசதானியில் சிறப்புடன் வளர்க்கப்பட்ட கலைகளாகும். கண்டியின் புராதன பெயர் செங்கடலபுரம் என்பதாகும். 14ம் நூற்றாண்டிலிருந்து 18ம் நூற்றாண்டு வரை கண்டி இலங்கையின் முக்கிய இராசதானியாக இருந்து வந்துள்ளது. எதிரிகள் தாக்க முடியாத இயற்கை அரண் கொண்டதாக விளங்கியது. கண்டி இராச்சியத்தின் காலப்பகுதி தேசிய கலையின் மேம்பாட்டின் பொருட்டு பல கலைகள் வளர்க்கப்பட்ட ஒரு காலமாகும். கலைகளின் வளர்ச்சிக்கு அரசனின் ஆதரவும் இக்காலப்பகுதியில் இருந்தது. சித்திரக் கலை தனித்துவமான முறையில் இக்காலத்தில் வளர்க்கப்பட்ட ஒரு கலையாகும். குறிப்பாக பௌத்த யாதகக் கதைகள், புத்தர் வாழ்க்கை வரலாறு, புத்தர் போதனை போன்றவை சித்திரமாக வரைதல் இக்காலத்தில் பிரபல்யம் வாய்ந்த ஒன்றாக இருந்தது.

அக்காலத்து கலை, கைப்பணிப் பொருட்களும் முக்கியமானவை. மரம், கல், உலோகம், யானைத்தந்தம் போன்றவற்றில் உருவாக்கப்பட்ட கலைப் பொருட்கள் இன்று வரை பாதுகாக்கப்பட்டுள்ளன. சீப்புகள், ஆபரணங்கள், நகைப்பெட்டிகள், அலங்காரப் பொருட்கள், மரச் செதுக்கு வேலைப்பாடுகள் சிறப்பு வாய்ந்தவையாகும்.

மக்களின் ஆடையணிகள் பதவி அந்தஸ்து என்பவற்றைக் கொண்டவையாக விளங்கின. நாலு மூலை தலைப்பாகை, உட்சட்டை, மேற்சட்டை, பட்டி என்பவை இவற்றில் முக்கியமானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்டிக்கால படைப்புகள் இலங்கையின் மற்றைய காலப்பகுதியில் செய்யப்பட்டதை விட தனித்துவம் கொண்டவையாக விளங்குகின்றன. புத்தர் சிலைகள், சந்திரவட்ட கற்கள், சுவரோவியங்கள், விகாரைகள், கட்டிடம், கூரை, தளபாடங்கள் என்பவை இவற்றுக்கு உதாரணங்களாகும். தலதாமாளிகை, எம்பக்கே தேவாலயம், யாப்பகூவா, கடலாதேனிய, இலங்காதிலக போன்ற கட்டிடங்கள் இக்காலத்துக்குரியவைகளே. சிங்கள கட்டிடக் கலையுடன் தென்னிந்திய கலைப்பண்புகள் இவற்றில் கலந்து காணப்படுகின்றன.

இக்கட்டிட அமைப்புக்களில் மற்றைய காலங்களில் அனேகமாக பயன்படுத்தப்பட்டு வந்த மகர அலங்கார வடிவங்கள் மறைந்து கற்பனை விலங்குருவான கஜசிங்க வடிவங்கள் அலங்கார வேலைப்பாடுகளில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

அக்காலப்பகுதியில் விகாரைகள் அமைப்பதிலும் இரண்டு வகை இருந்து வந்துள்ளது. ஒன்று குகை விகாரை மற்றையது தூண்களை நிறுவி அதன் மேல் அமைக்கப்பட்டவை. இவ்வாறான விகாரையில் தம்பிட விகாரை முக்கியமான ஒன்றாகும்.

கண்டிக்கால கலை வேலைப்பாடுகள்







1. கூரைச் சாய்வு ஓடு (களிமண்)   2. சீப்பு (யானைத்தந்தம்)   3. கைப்பிடி (உலோகம்)

## சுவரோவியங்கள்

18ம் நூற்றாண்டில் கண்டிய ஓவிய முறை ஆரம்பமான புதிய வித்தியாசமான பாணியில் ஓவியங்கள் காணப்படுகின்றன. கீர்த்திசிறி இராஜசிங்கன் காலத்தில் விகாரை ஓவியங்கள் புதுப்பிக்கப்பட்டன. கண்டிய ஓவியம் உருவாகி இலங்கை முழுவதிலும் பரவியது கண்டி, தெகல்தொறுவ, தெலவத்தை புராதன விகாரை, குருநாகல் ரிட்டிவிகாரை டம்புள்ள இக்காலத்துக்குரிய ஓவியங்களுக்கு உதாரணங்களாகும். பௌத்த யாதகக்கதைகளை கட்டம் கட்டமாக வரைவது இக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இது 'சித்திராவலி' என அழைக்கப்பட்டது. சூரியன், சந்திரன் போன்ற அலங்கார வடிவங்களினால் சித்திரங்கள் கட்டம் கட்டமாக பிரிக்கப்பட்டன. பின்னணி இருண்ட சிவப்பிலும் உருவங்களும், வடிவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தட்டையான வடிவத்தினால் திரட்சி, கனம் நீங்கிய தன்மையாக வன்மையான இரேகைகளால் புற உருவங்கள் வரையப்பட்டு தூரத்தன்மை, ஒளிநிழல் போன்ற இயற்கைத் தன்மை காட்டாது அலங்காரத் தன்மையில் இவை வரையப்பட்டன. இதிகாச பாத்திரங்களை கொண்டதாகவும் இவ் ஓவியங்கள் விளங்கின. கண்டிக் காலத்து ஓவியங்களிலும் கலை வடிவங்களிலும் அக்காலத்தில் அணியப்பட்ட ஆடையணிகள் சம்பந்தப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துபவையாகவும் விளங்குகின்றன.



கண்டி காலத்து மாதிரி சுவரோவியம்

மனித பாதங்கள் ஒரே திசையில் அமைந்து தலை, மார்பு, சாய்வு பக்கமாகவும் முகம் பக்கச்சார்பிலும் விழிகள் நேராகவே வரையப்பட்டுள்ளன. பின்னணி சிவப்பு மாத்திரமன்று மஞ்சள், கறுப்பு, பச்சை வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது. குறியீட்டுத்தன்மை இவ் ஓவியங்களில் முக்கிய இடத்தை வகிக்கிறது. மரத்தைக் காட்ட இலைகளை ஒன்றிணைத்தே இரேகை மூலம் அலங்காரப்பாணியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கூரைச்சித்திரங்கள் கூரையின் மேல் பகுதியில் வரையப்படவில்லை. இச்சித்திரங்கள் நிலத்தில் வைத்து துணியில் வரையப்பட்டு பின்னரே கூரையில் ஒட்டப்பட்டுள்ளன. ஆனால் டம்புள்ள ஓவியங்கள் அவ்வாறன்றி முகட்டில் (கூரை) நேராகவே வரையப்பட்டவையாகும்.


## தெகள் தொறுவ விகாரை ஓவியங்கள்

மகாவலி கங்கையை அடுத்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் இவ்விகாரைக் கோயில் காணப்படுகிறது. இக்கோயிலின் உட்பகுதி ஒரு சுவரினால் பிரிக்கப்பட்டு வாசல் நிலையில் மரத்திலான மகர தோரணம் ஒன்று அமைந்து காணப்படுகின்றது. எண்கோண விளிம்புடைய பன்னிரெண்டு அழகிய தூண்கள் கோயில் முகட்டை தாங்கி நிற்கின்றன கூரை பலகையில் ஒட்டப்பட்ட துணியிலும், சுவர்களிலும் பௌத்த ஜாதகக் கதைகள் ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெகல் தொறுவ விகாரை சுவரோவியம்(வெசந்தர)யானையை தானஞ் செய்தல்




மாத்தளை நிலகம்யரை சிப்பிகளே இங்கு தம்படைப்புகளைத் தீட்டியுள்ளார்களென நம்பப்படுகிறது. ஜாதகக் கதைகள் எனப்படுவது புத்தரின் முந்திய பிறப்பொன்றிலே நிறைவேற்றியதாக கருதப்படும் இலட்சியம், ஒழுக்கம், ஈகை என்னும் போதனைகளை வெளிப்படுத்துபவையாகும். கண்டிக் காலத்தில் ஜாதகக் கதைகளை வரைந்ததன் நோக்கம் பாமரமக்களுக்கும் பௌத்த மத போதனையை புகட்டுவதும், அவர்களை நல்வழியில் இட்டுச் செல்வதுமேயாகும். தெகள்தொறுவையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் வெசந்தர, சுத்தசோம, சத்துபத்த, மகாசீலாவ எனப்படும் ஜாதகக்கதைகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. வெசந்தர ஜாதக சித்திரங்கள் - கொசுவத்தநைதே என்பவராலும், கூரைச் சித்திரங்கள் - செவகரம் பொல செல்வரெட்ணஉனான்சே - கிரியாலநைதே (தேவேந்திர மூலாச்சாரியார்) என்பவர்களால் வரையப்பட்டவையாகும். இங்குள்ள ஓவியங்கள் தென்னிந்திய ஓவியங்களுடன் ஒப்பிடக்கூடியவை என ஆனந்த குமாரசாமி அவர்கள் கூறியுள்ளார்கள். எகிப்திய ஓவியங்களுக்கும் இவ்வோவியங்களுக்கும் ஒருமைப்பாடு இருப்பதாக கூறுவோரும் உளர்.

ஒவ்வொரு ஜாதகக் கதைகளும் கதை நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப கட்டங் கட்டங்களாக பிரித்து பார்ப்போர் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் 'சித்திராவலி' என்னும் முறையில் வரையப்பட்டுள்ளன. வெசந்தெர ஜாதக 26 கட்டங்களாகவும், சுத்தசோம 18 கட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு காணப்படுகின்றன. இவ் ஓவியங்களுளின் மூலம் கண்டிக்கால ஆடை அணிகள் அலங்காரங்களையும் காணக்கூடியதாகவுள்ளது. கறுப்பு, வெள்ளை, கடும்மஞ்சள் சிவப்பு ஆகிய வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

விகாரை மண்டபத்தின் அருகே தனிக்கல்லினாலான புத்தர் சிலை ஒன்று உள்ளது. உள்வாயிலில் விஷ்ணு, சமன் போன்ற தேவ சிலைகளும் காணப்படுகின்றன. துப்பாக்கியை ஏந்திய வண்ணம் மாறனின் வடிவங்களும் வரையப்பட்டுள்ளன.

## தலதா மாளிகை


கண்டி நகரை அலங்கரிக்கும் புராதன கட்டிடங்களில் தலதா முக்கியமானதாகும். தந்த தாதுவை உள்ளவர்களே இராச்சியத்தை உடையவர்கள் என்னும் நம்பிக்கை அக்கால மன்னர்களிடையே இருந்தது புனித தந்த தாதுவை வைத்து பூஜிப்பதற்காக கட்டப்பட்ட பல கோயில்கள் அக்காலத்தே நாட்டில் பல இடங்களில் இருந்தன கண்டியில் உள்ள புத்த தந்த கோயில் (தலதா மாளிகை) அமைப்பானது ஆதிகாலம் தொடக்கம் வழங்கிவந்த அரண்மனை




கண்டி ஓவியம் (தலதா மாளிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவரோவியம் இலங்காதிலக (கம்பளை)

அமைப்பைத் தழுவியே கட்டப்பட்டதாகும். பட்டிருப்பு (paddiruppu) என அழைக்கப்படும் எண்கோண மண்டப அமைப்பு கட்டிடத்தின் வெளியே பின்னரே அமைக்கப்பட்ட பகுதியாகும். நாட்டின் பல இடங்களிலும் பட்டிருப்பு என அழைக்கப்படும் எண்கோண மண்டபங்கள் கட்டப்பட்டதாக அறியக்கூடியதாய் உள்ளது. அரசனும், பிரதானிகளும் காலத்துக்குக் காலம் இம் மண்டபங்களில் கூடிப் பொதுமக்களை சந்தித்து வந்தனர்.

இன்றும் மட்டக்களப்பிற்கு தெற்கே சுமார் 14 கி.மீற்றர் தொலைவில் பட்டிருப்பு என்னும் பெயரால் ஒரு கிராமம் அழைக்கப்படுகின்றது. இங்கும் இவ்வாறான ஒரு மண்டபம் இருந்ததாக அறியக்கூடியதாய் உள்ளது.

17ம் நூற்றாண்டிலே தலதா மாளிகை 2ம் விமலதர்மசூரிய மன்னனால் இரு மாடிக்கட்டிடமாக திருத்தியமைக்கப்பட்டதாகும். கீர்த்தி சிறி ராஜசிங்கன் மன்னனே பட்டிருப்பு மண்டபத்தையும் கட்டி, கண்டி வாவியையும் ஏற்படுத்தினான்.

தலதா மாளிகையின் கூரை தற்காலத்தில் அரசினரால் தங்கமுலாம் பூசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இங்குள்ளமண்டப தூண்கள் வெளிப்புறத்தே காணப்படும் கலைச்செதுக்கு வேலைப்பாடுகள் யாவும் அக்காலத்தே பிரபல்யம் பெற்றிருந்த தேவேந்திர மூலாச்சாரியார் என்னும் கலைஞனின் படைப்பாகும். செங்கல்லினாலும், மரத்தினாலும் உருவாக்கப்பட்ட தந்தம் உள்ள அறையில் ஜாதகக் கதைகள் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. தாமரை மலர், பூங்கொடி, போன்ற செதுக்கு வேலைப்பாடுகள் இங்கு காணப்படுகின்றன. வாசலின் முன் பகுதியில் முழுவட்டமான சந்திரவட்டக்கல் அதின் இரு மருங்கிலும் காவற்சிலைகள், மலர்களுடனான மனித உருவங்கள், கஜசிங்கம் என்பனவும், கூரை முகட்டில் தாமரை, பூங்கொடி போன்ற அலங்காரங்களும் காணப்படுகின்றன.

தலதா மாளிகையின் பிரதான கட்டிட அம்சங்கள்

1. அரசமாளிகை (ரஜகெதர)

2. பத்தினி தேவாலயம்

3. அரசமண்டபம்

4. நாக தேவாலயம் போன்றவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்பக்கே ஆலய செதுக்கு வேலைப்பாடுகள்

இலங்கையில் 14ம் நூற்றாண்டுப் பகுதியில் தமிழ் தெய்வங்களுக்கு ஆலயம் நிர்மானிக்கும் முறை முக்கியத்துவம் பெற்றிருந்தது. கம்பளையில் 3ஆம் விக்கிரமபாகுவால் கதிர்காம தெய்வத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்பட்டு மகாசேன மன்னனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. இதுவே எம்பக்கே தேவாலயமாகும். ஆலயம் அமைக்கப்பட்ட கிராமம் எம்பக்கே என்பதால் இவ் ஆலயத்திற்கு இப்பெயர் வழக்கப்படலாயிற்று. இவ்வாலயத்தைப் பற்றிய ஐதிக கதைகள் பல உண்டு.



நடன மாது



ரபானம் அடிப்பவர்

இவ் ஆலயக் கூரை அமைப்பு, தூண்கள், வளைகள், நிலைகள் அக்காலத் தச்சரின் திறமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. நுழைவாசலின் நிலையில் அமைந்து காணப்படும் பாரமான கதவு அழகுவாய்ந்த வெண்கலத்தினாலான குமிழ் சிறப்பு வாய்ந்தவையாகும். ஒரே மரத்திலான மயில் வடிவம் ஒன்று இங்கு உண்டு. கதிர்காம முருகனின் வாகனமாக இது கருதப்படுகின்றது. இவ் ஆலய கூரை அமைப்பு சிவப்பு ஓடுகள் கண்டிக்கால சலைச் சாயலை வெளிப்படுத்துகின்றன, இவ் அழகிய கூரையின் 29 வளைகளும் ஒரே ஆணியில் பொருத்தப்பட்டிருப்பது விசித்திரமானதொன்றாகும். இவ்வாறு ஒரே ஆணியில் வளைகள் பொருத்தப்பட்ட முறை 'மடோல்குறுபாவ' என அழைக்கப்படுகிறது.

இவ் ஆலய மண்டப அமைப்பு மூன்று கட்டங்களாக அமைந்து காணப்படுகின்றன. மண்டப தூண்களில் 32 நிரல்களிலும் சிறப்பு வாய்ந்த செதுக்கு வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. எண்கோண வடிவிலான தூண்பக்கங்களில் சதுரமான கட்டங்கள் அமைத்து உருவங்கள் மிக நேர்த்தியாகவும் கற்பிதமாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. சட்ட ஓரங்களில் அரும்பு, கற்கட்டு, குந்திரிக்கா அலங்காரங்கள் அழகு படுத்தப்பட்டுள்ளன. நடமாடும் மங்கை, மல்யுத்தம் செய்யும் இருவர், போர்வீரர், பிணைத்த அன்னங்கள் (உறம்ஸபூட்டுவ) றபானம் அடிப்பவர், கின்னரப் பெண், மகரம், சிங்கம் போன்றவை இங்குள்ள செதுக்கு வேலைப்பாடுகளுள் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கின்னரப் பெண்



மல்யுத்தம் (மல்போர)

பெண்களின் வடிவம், கூந்தல் வகிடு, கண்புருவம், தோடு போன்ற ஆபரணங்களும் ஆடை மடிப்புகளும் மரத்தில் மிக நுட்பமாக பார்ப்போர் மனதை ஈர்க்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நடமாடும் மங்கையின் வடிவம் அக்கால கண்டியர் கலாசாரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. கின்னரப் பெண்ணின் வடிவம் மேல் பகுதி அழகிய பெண்ணாகவும் இடுப்பின் கீழ் பகுதி பறவையின் சாயலாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கரத்தில் இசைக்கருவி ஒன்றும் காணப்படுகின்றது.

இவ்வித மென்மையான நுண்ணிய கலைவேலைப்பாடுகளை செய்வதற்கு கைமாலு, சிம்பலா போன்றவகையான மரங்கள் பாவிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இக்கலைப் படைப்புக்களைப் பார்க்கும் போது அக்கால மக்களின் அன்றாட நிகழ்வுகள் என எண்ணத் தோன்றுகிறது. இப்படைப்புகள் யாவும் தேமல்மடமூலாச்சாரியார் என்னும் அக்கால பாரம்பரிய கலைஞரினால் உருவாக்கப்பட்டவை. இவ் வேலைப்பாடுகள் கண்டி தலதா மாளிகையுடன் ஒப்பிடக்கூடியவையாக உள்ளன. பட்டிருப்பு எண்கோண மண்டபம் கூரை, யன்னல் போன்றவை 18ம் நூற்றாண்டிற்குரிய கண்டிக்கலைக்குரியவையாக விளங்குகின்றன.

## இலங்காதிலக விகாரை

கம்பளைக் காலத்தில் ஏற்பட்ட கட்டிடக்கலை வளர்ச்சியை இலங்காதிலக, கடலாதேனிய போன்ற கட்டிடங்கள் காட்டுகின்றன, மத்திய பிரதேசத்திலுள்ள பன்கல என்னும் குன்றின் மேல் இந்த விகாரை அமைந்துள்ளது. கம்பளையை அரசு புரிந்த 4ம் புவனேக பாகு அவனது அமைச்சர் சேனாதிலங்கார என்னும் அமைச்சரால் இது நிர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அடித்தளம், வெட்டிய கருங்கல்லாலும் சுவர் செங்கல்லாலும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அடித்தளம், பொலநறுவைக்கால கட்டிடக்கலையை ஒத்ததாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கா திலக ஆலயத்தின் புறச்சுவர் அமைப்பில் சில தென்னிந்திய திராவிட அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. கூரையமைப்பு கண்டிக்கால சிங்கள கட்டிடத்தன்மையிலும் காணப்படு கின்றது. அரச இலை வடிவான கூரை சாய்வு ஓடுகளில் சிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. பிரதான முன்வாசலில் தாமரை மலர்கள் செதுக்கப்பட்ட சந்திரவட்டக்கல் வெளிப்புறச் சுவரில் விசாலமான மகரதோரண அமைப்பு இரு சிங்க வடிவங்களும் காணப்படுகின்றன. லியவல (பூங்கொடி) அலங்காரம் அருமையாக அமைந்துள்ளது. அர்த்தராளம், அர்த்த மண்டபம் வாசலில் இரு மருங்கிலும் தொரட்டுப்பால, துவாரபால உருவங்கள் உள்ளன. சிலையறையில் (பிலிமகே) புத்த திருவடிவமொன்று காணப்படுகின்றது. கண்டிக்கால புத்த சிலைக்கு இது எடுத்துக்காட்டாகும். செங்கல்லினால் உருவாக்கப்பட்டு அலை போன்ற நெளிவினால் ஆடை (அங்கி) காட்டப்பட்டுள்ளது. தங்கமுலாம் பூசப்பட்டுள்ள இதன் தலைக்கு மேலாக மகர தோரண அமைப்பு ஒன்று உள்ளது.

## கடலாதேனிய விகாரை

கொழும்பு, கண்டி வீதியில் பிலிமெத்தலாவையைத் தாண்டி 80 கி. மீ. தொலை வில் தெற்கே இந்த விகாரை அமைந்துள்ளது. இலங்கையில் எஞ்சிய புராதன கட்டிடங் களில் இதுவே மிகப்பெரியது. இதில் காணப்படும் கல்வெட்டின்படி நாலாம் புவனேகபாகு மன்னன் இதனை கட்டியதாக அறியக்கூடியதாகவுள்ளது. கல்வெட்டின்படி 3 தட்டுக்கள் இருந்திருக்கலாம். அடித்தளம், மண்டபம், இடைத்தட்டாகிய மண்டம், கற்பக்கிரகம் என் பவையே அவை. இந்து கட்டிட மரபில் கட்டப்பட்ட இந்த விகாரைக்கு பௌத்த தூபி போன்ற வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கற்பக்கிரகத்துடன் கோபுரம் அமைந்துள்ள தன்மை இந்திய கோவில்களில் இல்லாததொன்று. இது கடலாதெனிய விகாரைக்கே உரித் தானது. கற்பக்கிரகத்தின் கூரை உட்புறத்தே முறையே சிறிதாகிக்கொண்டு உச்சி வரை செல்கிறது. இக்கட்டிடம் தென்னிந்திய விஜயநகர சிற்ப முறைக்கு ஒத்ததாகும் என்பர். இவ்விகாரை இந்து, பௌத்த கட்டிடமரபு கலந்து உருவாக்கப்பட்டது என்றால் மிகையாகாது.

கல்வெட்டின் படி சிலை அறையில் மூன்று புத்தர் சிலைகள் இருந்திருக்கலாம் கற்பக்கிரகத்தில் ஒரு புத்தர் சிலை இருந்திருக்கலாம், அவ்வாறு இருந்த புத்தர் சிலை தற்போது இல்லாதபோதும் அதன் பீடம் (ஆசனம்) காணப்படுகிறது. விகாரையின் பின்புறத்தே வைக்கப்பட்டுள்ள ½ மீற்றர் உயரமான பத்மாசனத்தில் புத்தர் வடிவம் இந்திய நாலந்தா சிற்ப மரபினை சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. இங்குள்ள சுவர் ஓவியங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது பல சிதைவுகள் ஏற்பட்டு வர்ணங்கள் சிதைந்து காணப்படுகின்றன. ஆயினும் சிகரத்தின் கற்பக்கிரகத்தில் காணப்படும் சித்திரங்கள் ஆரம்ப காலத்தில் வரை யப்பட்ட சித்திரங்கள் எனக் கூறலாம். வெஸந்தர ஜாதகக் கதைகள் இங்கு சித்திரங்களாக காணப்படுகின்றன. அதில் மஞ்சள், வெள்ளை, சிவப்பு போன்ற வர்ணங்கள் பாவிக்கப்பட் டுள்ளன.

மண்டப இருபுறங்களிலும் செதுக்கப்பட்ட கற்றூண்கள் நான்கு, எட்டு விளிம்பு அமைப்புக்களைக் கொண்டதாகவுள்ளன. தூண்களின் உச்சியில் சிங்க உருவங்களும், மண்டப மூலைகளில் நடராசர், விஷ்ணு போன்ற சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. வெளிப்புறத்து சந்திரவட்டக்கல்லில் இருந்து தொடங்குகின்ற கைப்பிடி இருபுறத்திலும் கஜசிங்க படிச்சுவர் கள் இரண்டு காணப்படுகின்றன. புத்தர் சிலையின் கண் திறந்தவண்ணம் காணப்படுகின்றது. இதனை இந்திய சிற்பிகளே உருவாக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவ் விகாரை கட்டிட அமைப்பினை கணேஸ்வர ஆச்சாரியர் என்னும் கலைஞரே உருவாக்கினார் என அறியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பகூவா அரண்மனை

1ம் புவனேகபாகு மன்னன் யாப்பகூவாவை முதன் முதலாக இராசதானியாக்கினான். கி.மு. 3ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று இங்கு காணப்படுகிறது. இப்போது காணப்படும் இடிபாடுகள் மத்தியில் உள் வெளி குட்டைச் சுவர்கள் வெளியே அமைந்துள்ள கருங்கல்லான சுவர் 6 மீற்றர் உயரமாகும். உள்நகர் பாஞ்சாலை கண்டி அரசுக்காலத்தை சேர்ந்தனவாக உள்ளன. புராதன அரண்மனையில் 5×3 மீற்றர் அளவிலான கதவு நிலை உட்பக்க நிலைகளில் வெப்புறத்தே இருபக்கங்களிலும் தாமரை மலர் செதுக்கப்பட்ட தூண்களின் உச்சியிலும் கீழ்பகுதியிலும் சாமரை வீசும் பெண் வடிவங்கள் காணப்படுகின்றன.




யாப்பகூவா செதுக்கு வேலைப்பாடுகளுக்கு சுண்ணாம்பு, சாந்து ஏராளமாகப் பாவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக பார்க்கும் போது பாண்டிய சிற்ப முறையாக இருந்த போதிலும் இவை விஜயநகர காலத்திற்குரிய படைப்பாக கருதப்படுகிறது. அழகிய படி வரிசை துலா மண்டபத்துடன் கட்டப்பட்டுள்ளது. படிக்கட்டின் இரு பக்கமும் கைப்பிடி வரிசை அதன் இரு பக்கங்களிலும் சிங்க, கஜசிங்க உருவங்கும் இயக்கர்களின் தலைகளும் காணப்படுகின்றன. கல்லினாலான மான் வடிவங்களும் சிறப்பு வாய்ந்தனவாக உள்ளன. வட்டமான யன்னல் அமைக்கப்பட்டு அவற்றிலும் அழகிய செதுக்கு வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. திறந்த வெளி மண்டபத்தில் அடித்தளக் கட்டிடத்தில் அதோடு சுற்றியுள்ள படிக்கட்டுக்களைச் சுற்றிவர நடமாடும் கன்னியர், வாத்தியம் வாசிக்கும், குழல் ஊதும் பாவனையில் கால்களை மேலே தூக்கியும், கரங்களை நிலத்தில் ஊன்றியும் காணப்படும் நடனமாதரின் வடிவங்கள் பார்ப்பதற்குச் சிறப்பானவை. நடன மங்கையரின் உருவங்கள் கல்லில் உருவாக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. நளினம் உயிர்த்தன்மை, பூரித்த மார்புகள் கொண்டவையாக தென்னிந்திய ஆலய சிற்பங்கள் போன்று விளங்குகின்றன. பரதநாட்டிய அறிவும், சிற்ப அனுபவமும் பெற்றவரே இதை உருவாக்கியிருக்கின்றனர். ஆயினும் இவற்றின் ஆடை அமைப்பு சிங்கள கலாச்சாரத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 06

# இலங்கையில் திராவிடக்கலை



2ம் சிவதேவாலயம் (பொலநறுவை)

இலங்கையில் திராவிடக் கலை பற்றி ஆராயுமுன் திராவிடர் யார்? என்பதை விரிவாக இவ்விடத்தில் கூற முடியாவிட்டாலும் சுருக்கமாக விளக்குவோம். தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றவர்களான திராவிடர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளைப் பேசுகின்றவர்களாவர். அவர்கள் தென்னிந்திய பழங்குடி மக்களா? அல்லது பலர் கூறியிருப்பது போன்று பிற நாட்டிலிருந்து குடியேறியவர்களா? குடியேறியவர்களாயின் எங்கிருந்து வந்தார்கள்? எக்காலத்தில் வந்தார்கள்? என்பவை நீண்டகாலமாக அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றார்கள். ஆயினும் இதுவரை திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரவில்லை.

ஆதி மக்களினம் தோன்றிய இடங்களில் தென்னிந்தியாவும் ஒன்றென ஆய்வாளர் கருதுகின்றனர். ஆகையால் தொன்மை வாய்ந்த, தமிழ் மொழியை உருவாக்கிய திராவிடர் தென்னிந்திய மரபு வழியே வாழ்ந்து வந்த ஆதி மக்கள் ஆவார். இலங்கைத் தமிழர்களும் இவர்களின் வழித்தோன்றல்களே. மரபு வரலாற்றில் இங்கு கிடைத்துள்ள புராதன திராவிட நாகரிகத்தின் சார்பான கற்பண்பாட்டுச் சின்னங்களும், நூல்களும், கட்டிடங்களும், சாசனங்களும், சிற்பங்களும், நாணயங்களும் இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் தமிழர் ஆற்றியுள்ள பெரும் தொண்டுகளைப் பல வகையில் வெளிபடுத்துபவையாக விளங்குகின்றன.

இலங்கைத் திராவிட (தமிழ்) கலைத்தோற்ற வளர்ச்சியை அறிவதற்கு முன் இந்தியாவில் ஆதித் திராவிட குடிகள் உருவாக்கி வளர்த்த இந்து ஆலயக் கட்டடக்கலை சிற்பங்கள் பலவகை நிலைப்பாடு கொண்டவை என்பதை நாம் அறியவேண்டியதாய் உள்ளது. ஆதித் திராவீடக் கலைகள், வழிபாட்டு முறைகள் என்பவற்றை இந்திய புராதன நகரங்களான மொகஞ்ஞதாரோ, ஹரப்பா நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தெய்வ வடிவங்கள், விலங்குருக்கள் மிக முக்கியமானவையாகும். ஆதித் திராவிட வழிபாட்டுச் சின்னம் ஹரப்பா வழிபாட்டின் சின்னங்களே, தொன்மைவாய்ந்த தென்னிந்திய பல்லவ, சோழ, பாண்டிய மரபு எனக் கருதப்படும் சிற்ப கட்டிடக் கலைகள் செல்வாக்கு பெற்றிருந்த கால கட்டங்களிலெல்லாம் இலங்கையில் அவை பரவின. அவற்றின் செல்வாக்கு கடைசிவரை வளர்ந்து கண்டிக்காலத்திலும் நிலைத்திருந்தது எனலாம்.

பல்லவ மன்னர்களைத் தொடர்ந்து வந்த சோழ மன்னர்கள் காலத்துக் கட்டடத்தினை கருங்கல்லினாலும், செங்கல்லினாலும் - கோயில்களை அமைத்ததோடு மண்டபங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானம் ஆகியவை அமைக்கும் முறையும் ஏற்பட்டன. கோயிற் தூண்களிலும், சுவர்களிலும் சிற்பங்களைச் செதுக்கியும், ஓவியங்களை வரைந்தும் அழகுபடுத்தினர்.

இலங்கையில் ஆரம்ப காலத்தில் முக்கியமாக கி. பி. 6ம், 7ம் நூற்றாண்டில் தோன்றிய பல்லவ கலைகளின் நேரடித் தொடர்பினை இலங்கையிலும் காணக்கூடியதாக உள்ளது. தென்னிந்திய அழகிய மாமல்லபுர கருங்கற் சிற்பம் போன்று அனுராதபுர, ஈசுறு முனிய சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆயினும் இவை பௌத்த சமய தொடர்புடையவையாக விளங்குகின்றன. பல்லவ கட்டிட முறையில் இலங்கையில் அமைந்த மிகப்பழைய கட்டிடம் 'நாலாந்த கெடிகே' என்னும் ஆலயமாகும்.


10ம், 11ம் நூற்றாண்டுகளில் இரண்டாவது கட்டமாக திராவிடக் கட்டிடக்கலை வளர்ச்சியடைந்ததெனலாம். சோழர்கள் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த காலத்திலிருந்து பல இந்துக் கோயில்கள் திராவிட கட்டிடச் சாயலில் எழலாயின. திருக்கோணேஸவரம், திருக்கேதீஸ்வரம் (மாதோட்டம்) என்பவை குறிப்பிடத்தக்கவை. திருகோணமலை, கந்தளாய், பதவியா போன்ற இடங்களிலெல்லாம் இந்து ஆலயங்கள் அமைக்கப்படலாயின. இக்காலத்தில் இந்து கலாசாரமே பேணப்பட்டது. இதற்கு அக்காலத்துக்குரிய இந்து சமயசார்பான உயர் வெண்கலச் சிலைகளும், உபகரணங்களுமே சான்றாகும்.

முன்பு குறிப்பிட்டது போல சோழர் கட்டிட பாணியில் கட்டப்பப்பட்ட இரண்டாம் சிவ தேவாலயமே இலங்கையில் சோழர் கட்டிடங்களுள் உன்னதமாக விளங்குகிறது. இதுவே பழமைவாய்ந்த சோழர் கட்டடங்களுள் சிறந்தது. கருங்கல்லும், சுண்ணாம்புக்கல்லும் கலந்து கட்டப்பட்ட இக்கட்டிடமே தென்னிந்திய சோழர் கட்டட சிறப்பினைக் கொண்டதாக விளங்குகின்றது.



சிதைந்த இந்து ஆலய சுவரோவியம்

சோழர் இலங்கையில் பொலநறுவையில் கட்டிய பல ஆலயங்களில் கருங்கல், செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களில் சிறப்பான சிற்பங்களை வடித்தனர். சிலைகள், தூண்கள் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கோயில் ஆலயத் தூண்களில் தலைப்பாகையில் அமைந்த தாமரை மொட்டுப் போன்ற சிற்பங்கள் மிக முக்கியமானவை. பொலநறுவையில் இன்னும் நின்ற பாவனையில் இருக்கும் தாடியுடைய ஏட்டினைத் தாங்கிய முனி போன்று காட்சியளிக்கும் சிலையானது 1ம் பராக்கிரமபாகு எனக் கூறப்பட்டாலும் இதுஒரு இந்துப் பெரியாரின் உருவம். அதாவது அகத்தியர் என கூறுவோரும் உளர்.



தாமரை மொட்டமைந்த தூண்

13ம், 14ம் நூற்றாண்டில் வட இலங்கையில் எழுந்த தனி அரசுகள் மூலம் திராவிடக் கலை வளர்ச்சி பெற வாய்ப்பிருந்தது. யாழ்ப்பாணக் கோட்டையில் இருக்கும் கருங்கல்லினால் செய்யப்பட்ட தாமரைப்பூ சிற்பங்கள் கலையழகு நிறைந்த வினாயகர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வானை, தட்சணாமூர்த்தி, கஜலெட்சுமி சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. மேலும் நல்லூர் பழைய சட்டநாதர் கோயிலைச் சேர்ந்ததாகக் கூறப்படும் ஏழு சிலைகள் யாழ்ப்பாணத்தில் அரும் பொருட்சாலையில் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மத்திய காலப்பகுதியிலிருந்து கிடைக்கப் பெற்ற கண்ணகி சிலை என அழைக்கப்படும் தெய்வச்சிலையும், அனுமான் சிலையும் கலைச்சிறப்பு வாய்ந்தவை

பொலநறுவை, திருகோணமலையில் கிடைக்கப்பெற்ற நடராஜர், சந்திரசேகர மூர்த்தி, ஐயப்பெருமான் அர்த்தநாரீஸ்வரர், சோமஷ்கந்த மூர்த்தி, விநாயகர், பார்வதி முதலிய தெய்வச் சிலைகளும், சுந்தரர் காரைக்கால் அம்மையார் போன்ற சிவனடியார் சிலைகளையும் குறிப்பிடலாம்

16ம், 17ம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோரப் பகுதிகள் ஐரோப்பியரின் ஆட்சிக்குட்பட்டு பூசல்களினால் பல அழகிய ஆலயங்களும், சிற்பங்களும் அழிய நேர்ந்தன. இதனால் சிறப்பு மிகு சிற்பங்கள் பார்க்க முடியாமல் போயின.

கிழக்கிலங்கையில் திருக்கோயில் கிராமத்தில் உள்ள திருமுருகன் ஆலயமும், கொக்சட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் தென்னிந்திய திராவிட கட்டிடக் கலையைச் சேர்ந்தவையாக உள்ளன. இன்னும் இலங்கையில் காணப்படும் சைவ ஆலயங்கள் சோழர் கட்டிடக் கலையை எமக்கு தெளிவாக வெளிப்படுத்துகின்றன. ஆலய மண்டபம், தூண்கள், கற்பக்கிரகம் அதன் மேலமைந்த விமானப் பகுதியும் சோழர் கட்டிடக் கலையின் முக்கிய அம்சமாகும். சோழர் மரபைத் தொடர்ந்து வந்த பாண்டிய கலை மரபில் ஆலய வாயில், கோபுரம் தனி அம்சமாக வளர்ச்சியடைந்தது. 12ம் நூற்றாண்டில் 1ம் சுந்தர பாண்டியன் என்பவனால் திருக்கேதீஸ்வரர் ஆலயம் பாண்டிய சிற்ப முறையில் திருத்தியமைக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது. இவருடைய காலத்தில் திராவிடக் கட்டடக் கலை பூரணத்துவம் பெற்றதுடன் சுதந்திரமான முறையில் வளர்ச்சியும் பெற்றது. பாண்டிய முறையில் ஆலயவாயில் தோரணம் ஒரு தனியம்சமாக வளர்ச்சியடைந்தது. தூணின் மேற் பகுதிகள் சிறப்பாக பலகை கபோதம் சிறந்த வேலைப்பாடுடைய அம்சமாகக் காணப்பட்டன.

இனி தென்னிந்திய விஜயநகர பாணியில் அமைந்த இந்துக் கோயில்களைப் பார்ப்போம். சிலாபம் முனீஸ்வரர் ஆலயம் முக்கியமான ஒன்றாகும். இலங்கையின் மத்திய பகுதியில் விஜயநகரப் பாணியில் அமைந்த பௌத்த கட்டிடங்கள் கம்பளை இலங்காதிலக கண்டி நாகதேவாலயம், கம்பளை எம்பக்கே யாப்பகூவா படிக்கட்டுக்கள், கேகாலை அலவத்துவ விகாரை என்பவை குறிப்பிடத்தக்கவை.

பொலநறுவை காலத்தின் பின் சிங்கள இராச்சியத்தின் பண்பாடு மிகத் தளர்ந்ததாகவே காணப்படுகிறது. பழைய சிங்களக் கலைகள் பேணப்படாது. வீழ்ச்சியடைந்தன. இந்த வகையில் கட்டிடக் கலையே மிகப் பாதிப்புற்றது. தென்னிந்திய திராவிடக் கலை மேலோங்கி வளர்ந்தது. கண்டி அரசியல் வரலாற்றில் 18ம் நூற்றாண்டில் தென்னிந்திய நாயக்க வம்சத்தாரின் ஆதிக்கமே எனலாம். இவ்வாறு மேற்குறிப்பிட்ட தென்னிந்திய கலையானது அந்நிய நாட்டினரின் தலையீட்டால் அழிவுற்றாலும் இன்றும் திராவிடப்பாணியில் அமைந்த பௌத்த ஆலயங்கள் கட்டிடங்கள் பேணப்பட்டு வருகின்றன. இலங்காதிலக தூபராம, திவங்க விகாரை என்பவை இவற்றில் சிலவாகும். இவ்வாறான ஆலய திருப்பணி வேலைகளை அமைக்க தென்னிந்திய சிற்பிகளே வரவழைக்கப்பட்டனர் என அறியப்படுகின்றது. அக்கால ஆலயம் நிர்மாணிக்கும் கலைஞர்களை 'ஸ்தபதி - ஆசாரி' என அழைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கோயில் கட்டிட சிற்ப வேலைகளைச் செய்வோர் ஆச்சாரியார் என அழைக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது கண்டிக்காலத்தில் கணேஷ்வராச்சாரியார், தெய்வேந்திர மூலாச்சாரியார் என்போர் சிறந்த கலைஞர்களாக விளங்கினர்.


இலங்கையின் மத்தியில் இயற்கைப் பாதுகாப்பான யாப்பகூவா, கேகாலை, கம்பளை முதலிய இடங்களில் சிங்கள மன்னர் ஆதரவிலே வளர்ந்த திராவிட சிற்பக் கலையின் சிறப்புக்களை இன்றும் காணலாம். யாப்பகூவா அரண்மனைப் படிக்கட்டுக்கள் தலதா மாளிகையின் தூண் சிற்பங்கள் கேகாலை அலவதுவர ஆலயத்திலுள்ள குமுதமலர், மயில் தோரணம், அழகிய திருவாசி, கடலாதேனிய ஆலயத்தில் அமைந்த நடன மாதர் வடிவங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

கடலாதேனிய ஆலயம் மேற்கூறிய தென்னிந்திய சிற்பியான கணேஷ்வராச்சாரியாரினால் உருவாக்கப்பட்டதாகும். இப்படியாக கண்டிக் காலத்தில் வளர்க்கப்பட்ட திராவிடக் கலையானது தற்காலத்தில் அதன் சாயலை கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட புகையிரத நிலையங்களிலும், அரசாங்க அலுவலகத் தூண்களிலும் பிற அம்சங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. கண்டிக்காலத்திலே வளர்க்கப்பட்ட திராவிட அம்சங்கள் கட்டிடக்கலை, சிற்பக்கலை மாத்திரமன்று நாடக இசைக்கலையும் குறிப்பிடத்தக்கன. 20ம் நூற்றாண்டின் பின் முற்பகுதியில் கட்டப்பட்ட இந்து ஆலயங்களான கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர், சித்திரவேலாயுதர் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவை.

## இந்து ஆலய அமைப்பு



ராஜகோபுரம்



விமானம்

பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மனித நாகரிக வளர்ச்சியை, பண்பாட்டை கற்களின் மூலமே சிற்பிகள் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம். இறைவன் உறைகின்ற ஆலயங்களும் காலத்தை வென்று நிற்கும் அதி அற்புதமான கருங்கற் படைப்புகளால் உருவாக்கப்பட்டன. எனவே சிற்பக் கலைஞர்கள் வழிபாட்டிற்குரிய ஆலயங்களையும், விக்கிரகங்களையும் கற்களினாலே செதுக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தினையும், மரபினையும் பேணிப் பாதுகாக்கின்ற மக்கள் வாழ்கின்ற இடங்களிலெல்லாம் இவ்வாறான ஆலயங்கள் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டன. திராவிடர் மரபைக் கொண்ட கோயில்கள் மண்டபம், கோபுரங்கள் கொண்டவையாகக் காணப்படு கின்றன. இலங்கையிலுள்ள சைவக் கோயில்களெல்லாம் இக் கலைப்பாணியைத் தழுவியவை எனக் கூற முடியாவிட்டாலும் ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களாகவே காணப்படு கின்றன. ஆலயங்கள் எனப்படும் திருக்கோயில்கள் மனித உடலைப்போலவே அமைக்கப் படுவதாகக் கூறுவர். கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபா மண்டபம், அலங்கார மண்டபம், ஸ்னான மண்டபம் என ஆறு மண்டபங்கள் இவற்றில் அடங்கி யிருக்கின்றன.

ஆரம்பகாலத்தில் இவ் ஆலயங்கள் கல்விச் சாலையாகவும், வழக்காடும் மன்றமாகவும், இசை, நடனம் வளர்க்கும் கலைக் கூடமாகவும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் சமூகநலனுக்கு உறைவிடமாகவும் விளங்கி வந்துள்ளன.

ஆலயத்தைச் சுற்றி மதில் கட்டி ஒரு புறம் பெரிய வாயில் அமைத்து உயரமான ஒரு கோபுரம் நிர்மானித்தனர். இக்கோபுரம் ராஜகோபுரம் என அழைக்கப்பட்டது. இக் கோபுரத்தில் உலகில் காணும் எல்லாப் பொருள்களும் இறைவனின் திருவிளையாடச் செயல் களையும், தீரச் செயல்களையும் அழகிய சிற்பங்களாக அமைத்தனர். இறைவனைத் தொழு கின்ற திருமால் முதலிய தேவர்களையும் மிக அழகாக அமைத்தனர். கோபுரத்தைக் காணும் போதெல்லாம் எமக்குத் தெய்வத்தின்பால் அன்பு செலுத்தும் நோக்குடன் இவை அமைக் கப்பட்டது என கூறப்படுகின்றது. இலங்கையில் பண்டைய இந்து ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி, மாவிட்டபுரம் கந்தசுவாமி, நயினைதீவு நாகபூசணி யம்மன் கோயில், சிலாபம் முனீஸ்வரனாலயம் முதலியன குறிப்பிடத்தக்கவை.

## புராதன இந்து ஆலயங்கள்

### திருக்கோணேஸ்வரர் கோயில் (திருகோணமலை)

1624ம் ஆண்டில் குளக்கோட்டன் என்னும் மன்னனால் இவ்வாலயம் உருவாக்கப் பட்டது. ஐரோப்பியரினால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தின் இடிபாடுகளில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சோமஸ்கந்தர், சந்திரசேகர், தேவியருடனான விஷ்ணு ஆகிய மூர்த்தங்களும் காணப்பட்டன. பழமை வாய்ந்த இந்த ஸ்த்தலத்தைப் பற்றி திருஞான சம்பந்தர் திருப்பதிகம் பாடியுள்ளார்.

### திருக்கேதீஸ்வரம் (மன்னார்)

இலங்கையின் வடபகுதியிலுள்ள திருக்கேதீஸ்வரம் சிறப்புவாய்ந்ததொன்றாகும். 11ம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனால் புனருத்தாரணம் செய்யப்பட்டது. ஏறத்தாழ 400 ஆண்டுகள் சேர, சோழ, பாண்டியர் காலம் சிறப்புக்கள் வாய்ந்து விளங்கியது. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த அழகு சோமஸ்கந்தமூர்த்தி என அழைக்கப்படும் விக்கிரகம் இங்கு உண்டு. சைவ உலகிலே மிகப்பெரிய சோமஸ்கந்த மூர்த்தியின் உருவம் இதுவாகும். ஐரோப்பிய ஆதிக்கத்தின் காலகட்டத்தில் சீரும் சிறப்பும் அற்று அழிவுற்றது. 1948இல் திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண சபை சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு 1976ம் ஆண்டில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முனீஸ்வர ஆலய கோபுரம்

## முனீஸ்வரம் (சிலாபம்)

சிலாபத்தின் பூர்வீக ஆலயம் அமைதியான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இது ராமசீதா கர்ணபரம்பரைக் கதையைக் கொண்டதாக விளங்குகின்றது. குளக்கோட்டமன்னன், 6ம் பராக்கிரமபாகு, கீர்த்திசிறி இராஜசிங்கன் போன்ற மன்னர்களால் புனருத்தாரணம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதன் உச்சி கலசம், கோபுரவேலை தென்னிந்திய திராவிட சிற்பச் சிறப்பினை வெளிப்படுத்துகிறது பழம் பெருமை வாய்ந்த இக் கோயிலில் முழுவதும் கருங்கல்லினாலான அழகிய குத்துவிளக்கு ஒன்றும் காணப்படுகின்றது.

## கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரர் ஆலயம்

மட்டக்களப்பு நகரத்தின் தெற்கில் மண்முனைப் பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலை என்னும் இயற்கை அழகு நிறைந்த கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. தானாகவே ஏற்பட்ட இலிங்கம் (சுயம்புலிங்கம்) இவ்வாலயத்தில் உள்ளதாகக் கூறப்படுகின்றது. குளக்கோட்ட மன்னனால் தென்னிந்திய சிற்ப முறையில் அமைந்த இவ்வாலயத்தில் சிறப்பான சிற்ப வேலைப்பாடுடைய இரு தேர்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

## நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மேற்கேயுள்ள நயினாதீவு ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும் இங்கு அமையப்பெற்ற நாகபூசணியம்மன் ஆலயம் பாண்டிய சிற்ப முறையில் அமைந்து காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகம், விமானம், மண்டபம், வாயில் கோபுரம், சிற்பத் தூண்கள், சிறப்பு வாய்ந்து விளங்குகின்றன. இவ்வாலய சிற்பங்களை அமைத்தவர் காரைக்குடி செல்லக்கண்ணு என்னும் சிற்பியாவார். அழகிய மரச்செதுக்கு வேலைப்பாடு கொண்ட தேரும் இங்கு உண்டு.

## நல்லூர் கந்தசுவாமி ஆலயம்

செண்பகப் பெருமான் என்னும் மன்னன் யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த காலத்தில் இவ்வாலயத்தைக் கட்டுவித்தான். இந்த ஆலயம் போர்த்துக்கீசர் காலத்தில் இடிக்கப்பட்டதனால் இதிலுள்ள அழகிய கருங்கற் சிற்பங்களைப் பற்றி அறியக்கூடியதாக இல்லை தற்போதைய சிற்பங்கள் யாவும் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும். இங்குள்ள உலோகத்திலான முருகனின் திருவடிவம் அழகான சிற்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

தென்னகத்தின் பண்டைத் தமிழர்களால் எழுப்பப்பட்ட பெருங் கோயில்களைப் போல கருங்கல்லால் ஆன இந்துக் கோயிலாகும். அழகிய கருங்கல் சிற்பம் நிறைந்த தூண்கள் உட்பிரகாரம், மூலஸ்தானம் கருங்கல்லினால் தளம்போடப்பட்டுள்ளது. சேர, சோழ, பாண்டிய, பல்லவ கட்டிட பாணியை பின்பற்றி முழுக்க முழுக்க கருங்கல்லினாலே உருவாக்கப்பட்டுள்ளது. தூண் இராசகோபுர சிற்பங்கள் தென்னிந்திய மாமல்லபுர சிற்பக் கலைஞர் களின் படைப்புகளுடன் ஒப்பிடத்தக்கது. 1912ம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்ட இவ்வாலயத்தை பொன்னம்பலம் இராமநாதன் என்பவரே உருவாக்கினார்.

## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்

சிறப்பு வாய்ந்த பல சிற்பங்களைக் கொண்டு விளங்கும் இவ்வாலயம் 125 ஆண்டுகள் பழமை வாய்ந்து, அழகிய ராஜ கோபுரத்துடன் மலயகப்பகுதியில் சிறந்து விளங்குகின்றது.

## சித்தி வேலாயுதர் கோயில் (திருக்கோயில்)



சித்தி வேலாயுதர் ஆலய சிற்ப விமானம்

மட்டக்களப்பிற்குத் தெற்கே திருக்கோயில் என்னும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. கி. பி. 1315ம் ஆண்டு பாண்டிய நாட்டிற்கும் மட்டக்களப்பிற்கும் தொடர்பு இருந்தமைக்குச் சான்றாக இவ்வாலயம் விளங்குகின்றது. தென்னிந்திய கலைஞர் களே இவ்வாலய திருப்பணி வேலைகளைச் செய்தனர். கற்பக்கிரகத்தின் மேலுள்ள விமானம் சிறப்பான ஒன்றாக விளங்குகிறது. வரலாறு கூறும் கல்வெட்டுச் சாசனம் இங்கு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நடராஜர் வடிவம்

1906ம் ஆண்டு பொலநறுவை அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட சிவன் வடிவம் தென்னிந்திய, திராவிட சிற்பகலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நடனமாடும் இச் சிவனின் வடிவத்தில் அழகிய வட்டமான திருவாசி அதில் தீச்சுடர் போன்ற அலங்கார வேலைப்பாடு பாதம் அடிப்பாகம், பத்மாசனத்தில் தாங்கி நிற்கிறது. உயரமான இவ்வழகுச் சிலையின் வலது கரத்தில் அபய முத்திரையும், முகத்தில் ஆத்மீக உணர்வும், புன்முறுவலும், ஜீவகளையும் லயத்துடிப்பான அசைவுத் தன்மையும், என்றும் இளமை ததும்பும் தோற்றத்தையும் கொண்ட இவ் அழகு சிவன் சிலைபோன்று வேறெங்கும் இல்லை.

இதன் பாதத்தில் சிக்கியிருக்கும் குள்ள வடிவம் (முயலகன்) பொலநறுவை வட்டதாகேயில் உள்ள வாமண ரூபத்தை ஒத்ததாக இருக்கிறது. சிவ வடிவம் என அழைக்கப்படும் நடராஜ மூர்த்தி பிரபஞ்சத்தின் தன்மையை வெளிப்படுத்தும் சிறப்பு மிகு ஆக்கமாக சைவ மதம் கூறுகின்றது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் 'Dance of Siva' என்னும் நூலில் இவ் வடிவத்தைக் குறிப்பிட்டு எழுதியிருக்கின்றார்.

## திருகோணமலை சோமஸ்கந்த மூர்த்தி

உலோகத்திலான விக்கிரகங்களில் 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்கால விக்கிரகங்களிடையே திருகோணமலையில் காணப்பட்ட சோமஸ்கந்த மூர்த்தி பிரபல்யமானது.

மானையும் மழுவையும் இரு கரங்களில் தூக்கி வலக்கரத்தில் அபயமுத்திரையுடன் ஞானப் புன்னகையுடன் காணப்படும் இவ்வுலோகச் சிலை அழகு வாய்ந்ததாகும்.



சோமஸ்கந்த மூர்த்தி (திருகோணமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பத்தினி (கண்ணகி) சிலை



திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் இடைப் பட்ட பிரதேசத்தில் 1835ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. 6ம், 7ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இச்சிலை பொல நறுவைக்கால வெண்கலச் சிலைகளுடன் ஒத்ததாகக் காணப்படு கின்றது.

இவ் அழகு வெண்கலச் சிலை சுமார் இரண்டு மீற்றர் உயர முடையது. ஐரோப்பிய, கிரேக்க 'வீனஸ்' சிலையுடன் ஒப்பிடக் கூடியதொன்றாகும். தற்போது பிரித்தானிய அரும்பொருட்காட் சிச் சாயலையில் வைக்கப்பட்டுள்ளது. இது போன்ற ஒரு பிரதிச் சிலை கொழும்பில் அரும்பொருட் காட்சிச் சாலையில் உள்ளது. ஆபரணங்கள் அணிந்து ஆடை உடலுடன் ஒட்டிய விதமாக எழிமையான அம்சங்களுடன் பெண்மையின் மென்மையையும், எழிலையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. இரு கரங்களிலும் காட்டப்படும் வரதமுத்திரை பதிவிரதத்தையும் பெண் குணா திசயங்களையும் வெளிப்படுத்துவதாக விளங்குகின்றது.

பத்தினித் தெய்வம் பற்றிய கதைகள் பல உண்டு. இலங்கை யில் கண்ணகி வணக்கமுறை கி. பி. 1ம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனால் ஏற்பட்டதொன்றாகும். முல்லைத்தீவு, வற்றாப்பளை, மட்டக்களப்பு, காரைதீவு கண்ணகி கோயில்கள் முக்கியமானவை யாகும்.



### விநாயகர் சிலை

பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட கமலாசனத்தில் வீற் றிருப்பது போன்ற கணேசமூர்த்தியின் சிலை புராணங்களில் கூறப்படுவது போல இவர் கரத்தில் மாங்கனி காணப்படுகின்றது. சர்வ உலகங்களையும் தன்னகத்தே அடக்கியுள்ள இந்து சமய தத்துவத்தை வெளிக்காட்டுவதான தொந்தி வயிற்றினையும், யானை முகத்தையும் கொண்டதாக இச் சிலை வடிவம் விளங்கு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புராதன அலங்கார வடிவங்கள்

இலங்கையில் இன்று காணப்படும் புராதன அலங்கார வடிவங்கள், புராதன ஓவியர் களாலும், கைவினைஞர்களாலும் (Graftmen) சிற்பிகளாலும் திறமையுடன் உருவாக்கப்பட்டு பரம்பரை வழியாகவும் மரபு வழியாகவும் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்தவையாகும். இன்று இவை அழிந்து போன சுவரோவியங்களிலும் உபகரணப் பொருட்களிலும், விகாரைகள், குகைக்கோயில்கள், நிலைகள், கூரைகள், தேர் போன்ற மரச் செதுக்கு வேலைப்பாடுகள் சிற்பத் தூண்கள், தோரணங்கள், ஈட்டி, கேடயம் போன்ற போர்க் கருவிகள் ஆலவட்டம், மட்பாண்டங்கள், ஆடை அணிகள் போன்ற உபகரணப் பொருட்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

பொலநறுவை, அனுராதபுரி, சிகிரியா போன்ற இடங்களில் காணப்படும் பழைய கலை வேலைப்பாடுகளைப் பார்க்கும் போது இவை புராதன காலந்தொட்டு ஒரு மரபுவழி வளர்ச்சியடைந்த தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது சிகிரியா நாகர் கோயிலும் அனுராதபுர அபயகிரி, தூபராம பொலநறுவை நிசங்கலதா மண்டபம் போன்றவற்றில் சுதந்திரமான அலங்கார வடிவங்களைக் காணக்கூடியதாக உள்ளது. கல்பிந்து பனாவ, அரும்பு அதிகமாக இருப்பதை இங்கு காணலாம். இவை சுவர்களின் சித்திரமாகவோ, புடைப்பு வடிவினதாகவோ உருவாக்கப்பட்டுள்ளன.

கண்டிக் காலத்தில் லங்காதிலக, டம்புள்ள, தெகள்தொறுவ, எம்பககே கலை வேலைப்பாடுகளிலும் வெள்ளி, செம்பு, பித்தளை ஆகிய உலோக கைப்பணி வேலைகளிலும் இவ்வலங்கார வடிவங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்த அலங்கார வடிவங்களில் கூட இந்திய திராவிட செல்வாக்கினைக் காணக்கூடியதாகவுள்ளது. முதல் அத்தியாயத்தில் கூறியபடி இலங்கையின் கலை வெளிப்பாடுகளில் இந்தியக் கலைஞர்களின் பங்களிப்பினை நாம் மறக்கலாகாது. எனினும் இவ்வலங்கார வடிவங்களின் ஆரம்ப வரலாற்றின் வளர்ச்சி யினைப்பற்றிக் கூறுவது சிரமமாகவே உள்ளது. இலங்கையின் புராதன அலங்கார வடிவங் களைப் பற்றியும், கலைபற்றியும் கூறும் பழைய நூல் ரூபாவளி (Rupavaliya) சாரிபுத்திர என்னும் சிங்கள நூல்களாகும். அவ்வாறே தமிழ்க் கலைகளைக் கூறும் நூல் விஷ்ணுமோத்திரம் என்பதாகும்.

புராதன அலங்கார அடிப்படை வடிவங்கள் அனேகமாக ஒழுங்கு, அமைப்பு (Shape) ஒத்திசைவு (Harmony) லயம் (Rythmn) சமநிலை (Balance) என்பவற்றின் அடிப் படையில் கற்பனைத் தேவையின் பொருட்டு வரையப்பட்டு விளங்குகின்றன. இவற்றில் பயன்படுத்தப்பட்ட வர்ணங்களும் ஒரு மரபுவழி வந்தவையாகக் காணக்கூடியதாக உள்ளது. மஞ்சள், இரத்தச் சிவப்பு, நீலம் என்பவை இவற்றில் முக்கியமானவையாகும்.

ரூபாவெளி என்னும் அலங்கார நூல் வாயிலாக புராதன ஓவியனையும், அவன் சித்திரம் கற்கும் ஆசான் பற்றியும் அறியக்கூடியதாக உள்ளது. அக்காலத்தில் சித்திரம் கற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் வெற்றிலையைக் காணிக்கையாகச் செலுத்தி தனது குருவிடம் சித்திரம் கற்கும் முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது. 'யற்றிபொருவ' என்னும் வரைதற் பலகை (Drawing Board) இங்கிரி கட்டுவ என்னும் எழுதுகோலால் வரைந்து பழகுவர். முதன் முதலில் இரட்டை வளைவு (வகதெக) என்னும் அலங்கார வடிவமே தன் சீடருக்கு வரைந்து, பயிற்சியளிப்பதாகக் கூறப்படுகின்றது. இவ்வலங்காரத்தின் அபிவிருத்தியே பல அலங்கார வடிவங்கள் உருவாக்க உதவின. லியபத கதிரிமல் போன்ற வடிவங்கள் லலித நெளிவுகளின் அபிவிருத்தி எனலாம். இறுதியாக திருங்குதல அலங்காரமே சீடனின் இறுதிப் பயிற்சியாகும். நான்கு லியபத இணைவதால் திருங்குதல வடிவம் உண்டாகியது.

உறுதியான சுதந்திர வளைவுகள் அலங்கார காட்டுருக்கள் வரைவதற்கு மாத்திரமன்றி செதுக்கு வேலைகள் புடைப்பு வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. இவை அக்கால கலைஞரின் விஷேட திறமையாகும். புராதன அலங்கார வடிவ அம்சங்கள் மற்றைய ஓவியத்துடனோ, இயற்கையின் வடிவத்துடனோ தொடர்புடையதன்று இயற்கையில் இருந்து மாறுபட்ட வடிவங்களாகும் (Asasamatical) இத்துறையில் பழமை பேணும் முறை, இயல்பு, புதுமாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ கடைப்பிடிப்பதற்கோ இடமளிக்கவில்லை. இப்பண்பினை நாம் மறக்கலாகாது. ஏனெனில் பல நூற்றாண்டு காலத்தில் புதிய கருத்துக்களாலும் நவீன நோக்குருக்களாலும் நலிவடையாது பழைய நோக்குருக்களை பின் சந்ததியினர் பேணிப் பாதுகாக்க இப்பணி உதவியது எனலாம்.

இவ்வலங்கார வடிவமைப்பினை விலங்கு (சத்துவ) வடிவங்கள், தாவர (விருட்ச) வடிவங்கள், கேத்திர (நிர்விய) வடிவங்கள், தெய்வீக (திவ்விய) வடிவங்கள், பஞ்ச பூதங்கள் என பெரும் பிரிவாக வகைப்படுத்தலாம். அலங்கார வடிவங்களை கிரமப்படி விளக்கம் பண்ணும் முன்னர் அவ்வலங்கார அமைப்பில் பிரயோகம் செய்யப்பட்ட நுட்பமான பதங்களை ஆராய்தல் அவசியமாகும். 18ம் நூற்றாண்டில் கண்டி சிங்கள அலங்கார அமைப்பினையும் அவற்றின் சோடனை பற்றியும் அறிதல் அவசியமாகும். கலைஞர்களால் பாவிக்கப்பட்ட பதங்களைக் கொண்டே சிங்கள அலங்கார காட்டுருக்களைக் கவனிப்போம்.

## மலர் அலங்காரங்கள்

பண்டைய கலைஞர்கள் இரேகை அமைப்புக்கு விசேட கவனம் செலுத்தினார்கள்; திருங்குதல, லியபத போன்ற லலிதமான சுதந்திர அலங்கார காட்டுருக்கள் மாத்திரமன்று தாமரை, அன்னாசி, பினறமல், தாழம்பூ, கதிரிமல், கதுறுமல், சப்புமல், எசலமல், கடுப்புல்மல், சீனமல், பிச்சுமல், சுவஸ்திகாமல், நாகதல, என்பன அக்கால கலைஞர்களின் கை வண்ணத்தில் சிறப்பு வாய்ந்த மலர் வடிவங்களாக விளங்கி வந்துள்ளன.


## தாமரை மலர் (நெலுமல்)

தாமரை பத்மம் எனவும் சிங்களத்தில் நெலுமல் எனவும் அழைக்கப்படுகின்றது. இலட்சுமிகரம் (செல்வம்), பரிசுத்த தன்மை (புனிதம்), விசுவாசம் (பக்தி) என்பவற்றிற்கு அடையாளமாகத் தாமரை எடுத்தாளப்படுகின்றது. இந்து, பௌத்த கலைகளிலெல்லாம் தாமரை மலர் முக்கிய இடம் வகிக்கிறது. தாமரை இதழ்களை அடிப்படையாகக் கொண்ட ஆயிரக்கணக்கான காட்டுருக்கள் வரையப்பட்டு விளங்குகின்றன; இவை பலாபேதி என அழைக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்ம அலங்காரங்கள்



## பலாபேதி அலங்காரங்கள்



இலங்கையில் சிங்கள பாரம்பரிய சித்திரக் கலையில் தாமரைக்கு உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டுள்ளது. புத்தரின் பூசைக்கு கட்டப்ப்ட்ட எல்லா இடங்களிலும் சந்திர, சூரியர் போன்று பிரகாசிக்கின்ற தாமரைச் செதுக்கு வேலைப்பாடுகள் அரச கட்டளைப்படி அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இயற்கையின் மாறுபட்ட தன்மையிலும் வட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட மலர்ந்த தாமரை அலங்காரங்கள் பல வரையப்பட்டு விளங்குகின்றன. கூரான இதழ் அமைப்பைக் கொண்டதாகவும் வட்டமான இதழ் அமைப்பினைக் கொண்டதாகவும் நாக தலை அமைப்பினைப் போன்ற வடிவங்கொண்ட அலங்காரங்கள் அனேகம் காணப்படுகின்றன.

இந்திய (திராவிட) சிற்ப சித்திர வேலைகளில் காணப்படும் தாமரை அலங்கார வடிவங்கள் வித்தியாசமான தன்மையில் காணப்படுகின்றன. சிங்களக் கலையில் காணப்படும் 'பலாபேதி' அலங்காரம் இதழ் அமைப்பு கூர்மையற்றதாகவும் ஆனால் திராவிட அலங்காரங்களில் இதழ் கூர்மையானதாகவும் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தபெருமான் அமர்ந்திருக்கும் பத்மாசனத்தில் இருந்தே பலாபேதி அலங்காரம் உருவாகியிருக்கலாமெனக் கருதப்படுகிறது. ஓவியர் ரவிவர்மா இலட்சுமி, சரஸ்வதி போன்ற தேவியர் பத்மாசனங்களில் அமர்ந்திருப்பது போன்று அழகாக வரைந்துள்ளார். கற்செதுக்கு வேலை (சந்திரவட்டக்கல்) டம்புள்ள கூரைச்சித்திரம், இலங்காதிலக, தெகல்தொறுவ சுவர் ஓவியம் கல்விகாரை போன்ற ஓவியங்களிலும் செதுக்கு வேலைப்பாடுகளிலும் பத்ம அலங்காரம் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. யாப்பகூவா சுவரோவியத்தில் ஒற்றை வரிசையில் அமைந்த தாமரை இதழ் அலங்காரம் காணப்படுகின்றது.


தாமரை அலங்காரத்தின் நடுப்பகுதியில் அநேகமாக மஞ்சள் நிறம் தீட்டப்பட்டுள்ளது. இது பூரணமடைந்த தன்மையை காட்டுவதாக கூறப்படுகிறது. தாமரை அலங்காரங்களில் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆரம்பத்தில் இளவணர்த்தை பூசி பின் சிவப்பையும், கறுப்பையும் தேவையான இடங்களில் பாவித்து மெருகூட்டப்பட்ட தாமரை அரங்காரங்கள் புராதன சுவரோவியங்களில் மிதமாக காணப்படுகிறன.

## அன்னாசிப்பூ (அன்னாசி மல்)



அன்னாசிப் பூ என அழைக்கப்படும் அலங்காரம் அன்னாசிப் பூவுடன் எதுவித சம்பந்தமும் இல்லையாயினும் இதன் நடுப்பகுதியில் காணப்படும் அமைப்பினைக் கொண்டே இது அன்னாசிமலர் என அழைக்கப்படுகின்றது

பர்மா தேசத்தைச் சேர்ந்த பக்தன் ஒருவன் கண்டி தலதா மாளிகைக்கு வெள்ளித் தட்டொன்றினை வழங்கினான் என்றும், அதிலிருந்த அலங்கார வடிவமே அன்னாசிமல் என கூறப்படுகின்றது. பெரும்பாலும் கண்டிக் காலத்தில் அன்னாசிமல் பிரசித்தி பெற்று விளங்கியது. கம்பளைக் காலத்தில் இவ்வாறான அலங்கார வடிவம் இருந்ததாகத் தெரியவில்லை. இலங்காதிலக, தலதாமாளிகை ஆகியவற்றில் கேத்திர கணித வடிவமைப்பில் இவ்வாறான அலங்கார வடிவங்கள் காணப்படுகின்றன.



## பினறமல்

இது ஒரு காட்டுப் புஸ்பம், பன்னிரெண்டு மாதத்திற்கு ஒரு முறை மலரும் மலராக கருதப்படுகின்றது. நான்கு இதழ்களுடன் வரையப்பட்ட இம்மலர் கொடியுடன் வரையப்பட்டுள்ளதை பல அலங்காரங்களில் காணக் கூடியதாகவுள்ளது. எம்பக்கே மரச் செதுக்கு வேலைகளிலும் காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாழம்பூ (வட்டக்கொயா)

சரமான கோடுகளினால் வரையப்பட்ட இம்மலர் இதழ்கள் பதுறு போன்று அமைந்துள்ளது. புராதன கண்டி சுவர் ஓவியங்களில் இடைவெளிகளை நிரப்புவதற்கு அனேகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

### கத்திரிமல்

இரண்டு இலைகளின் மத்தியில் அன்னாசிப் பூவில் காணப்படும் கர்ணிகா அமைப்பு வரையப்பட்டு காணப்படுவது கத்திரிமல் எனப்படும்.

### சப்புமல்

சப்புமல் இயற்கையான தன்மை அலங்காரம், இது கொடியாக களனிவிகாரை சுவரோவியங்களில் காணப்படுகிறது. கம்பளை, இலங்கா திலக விகாரை ஆகிய இடங்களில் அலங்காரமாக வரையப்பட்டுள்ளது.

### எசலமல்

லியபெத, வட்டகொயா போன்று களனியில் சிறந்த எசலமல் அலங்காரங்கள் காணப்படுகிறது. எசல என்பது ஒரு மாதத்தின் பெயரைக் குறிக்கும் பெயராகவும் கூறப்படுகின்றது.

### கடுப்புல் மல்

களனி, அம்பலாங்கொட, பூர்வராமய போன்ற இடங்களில் கலை வேலைப்பாடுகளில் இடை வெளிகளை நிரப்புவதற்கும் இவ்வலங்காரங்கள் பயன்பாடுத்தப்பட்டுள்ளன. மலை நாட்டின் வேறுபட்ட தன்மையில் இது வரையப்பட்டுக் காணப்படுகிறது. தெகல்தொறுவ, கடலதெனிய, எம்பக்கே போன்ற இடங்களில் விசித்திர அமைப்புகளில் இது வரையப்பட்டுக்காணப்படுகிறது.


### சீனமல்

சீன்மலர் வகதெக அலங்கார வகுதிக்குள் அமைக்கப்பட்ட மலர் அலங்காரமர்கும்டம்புள்ள விகாரையின் வித்தியாசமான முறையில் அலங்கார வேலைகளில் அதிகம் காணப்படுகிறது. நீளமான தன்மை நாலு மூலை ஆரம்ப உருவம் மாறுபட்டதாக யானைத் தந்த செதுக்கு வேலை, சுவரோவியம் போன்றவற்றிலும் செரபேந்திய பட்சியின் அலகில் கௌவிய வண்ணமும் மகர தோரண அலங்கார வேலையிலும் சீன மலர் அலங்காரம் வரையப்பட்டுக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலர் வடிவங்கள்




சப்பு மலர்



கத்தரி மலர்




தாழம்பூ




கடுப்புல் மலர்




சீன மலர்



நாகதல்ல



செங்கழுநீர் மலர்



பிச்சி மலர்

## விலங்கு வடிவங்கள்

புராதன கைப்பணி வேலைகளிலும் வீட்டு உபகரணப் பொருட்களிலும், போர்க் கருவிகளிலும், மிருகம், பறவை போன்ற விலங்கு வடிவங்கள் மிக கச்சிதமாக உருவாக் கப்பட்டு விளங்குகின்றன. ரூபாவெளி, மத்தியகால சிங்களக்கலை போன்ற நூல்களிலும் இவை பற்றிய தகவல்களை காணக்கூடியதாக உள்ளது. கம்பளை, தம்பதேனியா கண்டி போன்ற காலப்பகுதிகளில் காணப்படும் புராதன கலைப்படைப்புகளில் இவை பிரசித்தி பெற்று விளங்குகின்றன. மிருகம் பறவை உருவங்கள் அலங்காரமாகவோ, குறியீட்டு வடிவ மாகவோ காணக்கூடியதாக உள்ளது.

விலங்கு வடிவங்கள் மாத்திரமன்றி மனித, தேவ, இராட்சத வடிவங்களும் வரை யப்பட்டுள்ளன. விலங்கு வடிவங்களை வரையும் போதோ, உருவகிக்கும்போதோ அவற்றின் குணாதிசயங்களையும் வெளிப்படுத்தும் வகையில் அனேக கீழைத்தேய கலைப்படைப்புகளில் காணக்கூடியதாக உள்ளது.

நவரத்தின பட்ட பேதி என்னும் அக்கால குடும்பத்திற்குச் சொந்தமான கைநூல் ஒன்றில் விலங்கு வடிவங்களைப்பற்றிய தகவல்களை விரிவாகக் காணக்கூடியதாக உள்ளது' சிங்கம், அன்னம், மயில், மகரம் போன்றவை இவற்றில் முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்க உருவங்கள்

புராதன இதிகாசங்களில் இருந்து முக்கியமான ஒரு சின்னமாக சிங்கம் இருந்து வந்துள்ளது. வீரம், மகத்துவம், கீர்த்தி என்பவற்றை விளக்கும் வகையில் சிங்கம் முக்கியம் வாய்ந்தது. அக்காலத்தில் அரசர் அமர்ந்திருக்கும் ஆசனம் அரியாசனம், சிங்காசனம் எனவும் அழைக்கப்பட்டது.

சிங்கள கலைஞர்களால் பதினாறு வகையான அங்கலட்சணம் கொண்ட சிங்கவடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கஜசிங்கம், கேசரி, நரசிங்கம், போன்றவை இவற்றில் அடங்கும். கலாநிதி ஆனந்த குமாரசாமி மூன்று வகையான சிங்க வடிவங்களைப்பற்றி கூறியுள்ளார். யாழி எனப்படுவது அவற்றில் ஒன்று. நம் நாட்டின் தேசியக் கொடியிலும் வாள் ஏந்திய சிங்கம் இலட்சினையாய் இருப்பது நாம் அறிந்த ஒன்று.



### கஜசிங்கம்

யானையின் முகமும்' சிங்க உடலமைப்பும் கொண்ட உருவமே கஜசிங்கமாகும். கண்டிய கலையில் மரம், கல் செதுக்கு வேலைகளிலும் ஆடை அலங்காரங்களிலும் கஜசிங்க வடிவத்தினைக் காணக்கூடியதாக உள்ளது. எம்பக்கே செதுக்கு வேலைப்பாடு இலங்காதிலக, அவலத்துவர, பெரதேனியா, தெகிபாகொட போன்ற விகாரைப் படிக்கட்டு அலங்கார வேலைகளிலும் கைப்பிடி வரிசை இருமருங்கிலும் கஜசிங்க வடிவினை காணக்கூடியதாக உள்ளது.

### கேசரி

பூங்கொடியை (சீனமலர்) முன் காலில் பிடித்தவண்ணம் முன் மறுகாலை துக்கிய வண்ணம் புராதன கட்டிடப் படிக்கட்டில் இருபக்கங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

### நரசிங்கம்

ரூபாவெளியில் நரசிங்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் முழங்காலுக்குக் கீழே சிவப்பு நிறமும், நகங்கள் வெள்ளையாகவும் பிடரிப் பக்கத்திலிருந்து உரோமம் கீழ் இறங்கிய வண்ணம் தாமரை இதழைப் போன்ற கண்களும் நெருப்பு சுவாலையை உண்டாக்கக்கூடிய வல்லமையும், தலையில் சடையும், நல்லது செய்யும் சுபாவமும் உடயதாகக் கூறப்பட்டுள்ளது.

### சாட்டை பிடித்த சிங்கம்

இலங்காதிலக கூரைச் சாய்வு ஓடுகளில் இவ்வாறான செதுக்கு உருவங்கள் காணப்படுகின்றன. இதனுடன் தாமரைப்பூ, அன்னச்சோடி செதுக்கப்பட்டுள்ளது. இதன் மூக்கின் அருகே பாம்பின் படம் போன்ற உருவம் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழி

யாழி எனக் கூறப்படும் வடிவம் சிங்கத்தின் தலை முகத்தில் சற்று வேறுபட்ட வடிவமாகும். இந்திய திராவிட சிற்பச் செதுக்கு வேலைப்பாடுகளில் அனேகமாக காணக்கூடியதாக உள்ளது. இந்து ஆலய தேர் செதுக்கு வேலைகளிலும் கற்சிற்ப வேலைகளிலும் யாழி முன்னங்கால்களைத் தூக்கிய வண்ணம் பின்னங்கால்களால் நிற்பது போன்று மிக நேர்த்தியாக கம்பீரம், வீரம் செறிந்ததாக காணப்படுகின்றது.



### தேசியக் கொடியில் சிங்கம்

இலங்கைத் தேசியக் கொடி பற்றி வரலாறு பலவாறு கூறப்படுகிறது. இந்தியாவில் உள்ள சாஞ்சி தாதுகோபுர சிற்பங்களில் இலங்கை வந்தடைந்த விஜயனின் சிலையருகே காணப்படும் சிங்கத்தின் உருவமே தேசியக் கொடியின் சின்னமாக பொறிக்கப்பட்டுள்ளது. என்னும் ஒரு கருத்தும் உண்டு. ஆயினும் இலங்கை கோட்டை இராச்சியத்திலும், அதன் பின் கண்டி இராச்சியத்திலும் சிங்கக் கொடியினையே அரசர் பாவித்தமையால் தொடர்ந்து இலங்கையில் சிங்கக் கொடியே தேசியக் கொடியாகத் திகழ்கின்றது எனலாம்.

இலங்கை தேசியக் கொடியினைப் பற்றி விபரிக்கையில் மரபு வழி வரலாற்றில் கூறப்பட்டுள்ளவாறு சிங்கம் ஒன்றிலிருந்தே சிங்கள இனம் தோன்றியது என்ற புராதன வரலாற்றை சிங்கம் காட்டுகிறது. கொடியின் நான்கு மூலைகளிலும் உள்ள அரச இலை பூ அணி வேலை பெரும்பான்மையினரின் மதமாகிய பௌத்த மதத்தைக் குறிக்கின்றது எனலாம்.

பச்சை, மஞ்சள் நிறம் சிறுபான்மை சமூகத்தினரை பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் இறைமையின் சின்னத்திற்கு அதிக பலத்தை அளிக்கிறது. செந்நிறப் பின்னணியில் மஞ்சள் நிறச் சிங்கம் வாளை ஏந்திய வண்ணமாக சிங்கத்தின் வாயின் அமைப்பு, தலை மட்டத்தோடு வாழ் அமைந்த நிலையும் நாட்டை ஆளும் போது எல்லா மக்களையும் ஆட்சி செய்பவர் ஒரே வித சமநிலையாக ஆள்வதைக் குறிக்கிறது. கொடியின் நான்கு மூலையிலும் உள்ள போதி மர இலைகளும் முறையே அன்பு (மெத்தா), கருணை (கருணா), அனுதாபம் (முதிர்ச்சா), சமத்துவம் (உபக்சா) என்னும் பௌத்த போதனைகளை வெளிப்படுத்துகின்றது எனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னம்





இந்துக்கள் சொர்க்கத்துக்குரிய பறவையாக அன்னத்தைக் கருதுகின்றனர். தமிழ், சிங்கள இலக்கியங்களிலெல்லாம் அன்னம் தூதுவிடும் பட்சியாக நீதி வழங்கும் சின்னமாக அன்னம் கருதப்படுகின்றது.

அனுராதபுர, பொலநறுவை சந்திர வட்டக்கல் கட்டிட செதுக்கு வேலைகளைப் பார்க்கும் போது அன்னத்தின் வடிவம் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். தாமரைப் பூவினைக் கௌவியது போன்று வரிசையாகச் செல்லும் வண்ணமும் கழுத்துக்கள் ஒன்றுடனொன்று பிணைந்த அன்ன அலங்காரம் (ஹம்சபூட்டுவ) பிரபல்யமானவை. கம்பளை, செங்கடகலை காலங்களில் அன்ன அலங்காரங்கள் பிரபல்யம் பெற்றுள்ளன. கூரைச் சாய்வு ஓடுகள் சீப்பு போன்ற உபகரணப் பொருட்களில் எல்லாம் அன்ன உருவங்களைக் காணக் கூடியதாக உள்ளது.

கண்டி தலதா மாளிகையின் கூரையில் நான்கு அன்னங்கள் கழுத்துக்கள் பிணைந்தது போன்ற வடிவம் உண்டு. மரவேலை கட்டிடம் போன்ற வேலைகளில் அன்னத்தின் வடிவத்தினைக் காணக்கூடியதாக உள்ளது.

## மயில் (மொனறா)

இவ்வடிவம் அனேகமாக கண்டியக் கலையில் காணப்படுகின்றது. நீண்ட அழகான தோகையினைக் கொண்டு இதனை அறியலாம் முன்பக்க பார்வையில் விசிறி போன்று காட்சியளிக்கும். திராவிட சிற்ப வேலைகளில் தேர் போன்ற அலங்கார வேலைப்பாடுகளிலும் குத்து விளக்கு போன்ற உலோக வேலைப்பாடுகளிலும் இவ்வடிவம் அநேகமாக உருவகிக்கப்பட்டுள்ளது. திருமுருகனின் வாகனமாக மயிலை இந்துக்கள் கருதுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசித்திர ரூபங்கள்

மனிதன், நான்குகால் பிராணிகள், பறவை, மீன் போன்றவை ஒன்றுடனொன்று இணைந்தது போன்று கற்பனையில் வரையப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட விசித்திர ரூபங்களும் புராதன அலங்காரங்களில் காணப்படுகின்றது. மகரம், பேருண்ட பக்ஷய, சேரபேந்து, அந்தலிகினியா இவற்றில் சிலவாகும்.



### பேருண்ட பக்ஷய

இருதலைப்பட்சி, இராயாளி உருவம், மூன்று கோறளைப் பகுதியில் இவ்வுருவம் பிரபல்யம் அடைந்திருந்தது. ஒஸ்திரியா, ரஷ்யா நாட்டுக் கொடிகளிலும் இவ்வுருவம் காணக்கூடியதாக உள்ளது. சமச்சீரான இவ்வடிவம் ஆபரண வேலைகளிலும் பயன்படுத்தப்பட்டது. மாணிக்க கல் பதிந்த பதக்கம் பழமை வாய்ந்து விளங்கின. திரிபுல மெதகல விகாரைகளிலும் இவ் வடிவம் வரையப்பட்டுள்ளது. சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், கறுப்பு வர்ணங்கள் இவ்வடிவத்தில் வரையப்பட்டுக் காணப்படுகின்றன. தலதா மாளிகை கற்தூண்களிலும் யானைத்தந்த செதுக்கு வேலைகளிலும் பேருண்ட பக்ஷய வடிவம் காணக்கூடியதாக உள்ளது.

### மகரம்

யானையின் தும்பிக்கை போன்ற சிறிய மூக்கும், முதலையின் வாயும், பற்களும், சிங்கத்தின் பாதங்களும், பன்றியின் செவிகளும், மீனின் கண்களும், பறவையின் வாலும் கொண்டதாக இவ்வடிவம் அமைந்துள்ளது. 'ரூபாவெளியில்' எட்டு விலங்குகளின் அங்க அமைப்பு சேர்ந்ததாக மகரத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

இந்திய மகரம், மீனை ஒத்த வாலையுடையதாகக் காணப்படுகின்றது. இவ் வடிவம் கிரக நிலையைக் குறிக்கும் சின்னமாகவும் கணிக்கப்படுகின்றது. காதல் தெய்வத்தின் மன்மதக் கொடியாகவும் மகர மாலையாகவும் இது பயன்படுத்தப்படுகின்றது.




இலங்கையின் 18ம் நூற்றாண்டில் சிங்கள கட்டிட வில் வளைவுகளில் கதவுவாயில் முகப்புகளிலும் சாதாரணமாக பாவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பழைய குகைக்கோயில்களில் இருந்தே இவ்வடிவம் இலங்கை வந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. தமிழர் பாரம்பரிய இசைக் கருவிகளில் மகர யாழ் ஒன்று வழக்கிலிருந்ததாக அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகர தோரணம்



மகரம் பக்கப்பார்வையில் ஒன்றையொன்று பார்த்த வண்ணம் அமைக்கப்பட்டு அவற்றின் வாயில் இருந்து பூங்கொடி போன்ற ஒரு அலங்காரம் மேலே கிளம்பி தோரணம் போன்று அலங்கரிக்கப்பட்டிருக்கும். உச்சியில் இராட்சத முகம் (கிபினுமூண) இரு பக்கங்களிலும் சூரிய, சந்திர தெய்வீக காட்டுருக்கள் அமைந்து காணப்படும். அனுரதபுரக் காலத்தில் இருந்து மகர தோரண அலங்கார முறையைக் காணக்கூடியதாக உள்ளது. ஈசுறுமுனிய விகாரை, பொலநறுவைக் கல்விகாரை போன்ற விகாரைகளின் பின் பக்கத்திலும் மகர தோரண அமைப்பு உண்டு. தம்புள்ள, தலதா மாளிகை, இலங்காதிலக விகாரை கண்டி விஷ்ணு தேவாலயம் களனி ஒட்டப் பூவ ஆலயம் போன்ற இடங்களில் எல்லாம் மகர தோரண வேலைப்பாடுகளைக் காணலாம். தெகள் தொறுவையில் பலகையினால் செய்யப்பட்ட மகர தோரணம் ஒன்று உண்டு. இந்து ஆலய வாயில்களிலும் இவ்வாறான தோரண அமைப்புகளைக் காணலாம்.

## சேரப்பேந்து



கண்டியக் கலையில் இவ்வடிவம் அனேகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிங்கத்தின் தலையும், பறவை போன்ற உடலமைப்பும், மீனின் செதில் போன்ற அமைப்பும் கொண்டதாக அமைந்து உள்ளது. சில அலங்காரங்களில் சீன மலரை வாயில் கெளவியது போன்றும் காணப்படுகின்றது ரிதிவிகாரை, பாம்பரககல்ல விகாரை, எம்பக்கே செதுக்கு வேலைப்பாடு அங்குராகொட விஷ்ணு தேவாலயம், புராதன பல்லக்கு பித்தளை வேலைகளிலும் காணக்கூடியதாவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குஞ்சரப்பறவை (அந்தஹந்த லிகினியா)

சக்தி, பலம் என்பவற்றை காட்டுவதற்காக யானை, கழுகு இவ்விரண்டினையும் இணைத்ததாக இவ்வுருவம் காணப்படுகிறது. கால்களில் இரு யானைகளைத் தூக்கிய வண்ணம் சித்தரிக்கப்பட்டுள்ளது. எம்பக்கே செதுக்கு வேலைப்பாடுகளிலும் புராதன உலோக வேலைகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

## மகரமும் தாமரையும்


கி. பி. 2ம் நூற்றாண்டிற்குரிய இவ்வடிவம் இந்தியாவில் அனேகமாக காணப்படுகிறது. கதிரையின் மேற்பகுதி, மரவேலைகளிலும் துணி அலங்கார வேலைகளிலும் அனேகமாக இவ்வடிவம் காணப்படுகின்றது.



## இராட்சத முகம் (கிம்பினு மூண)

மகர தோரணத்தின் உச்சியில் கொடிகள் இதன் அடிப்பகுதியில் இருந்து பிரிந்து செல்வது போன்று அமைந்துள்ளது சிங்க முகத்தின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டதாகும்.

## நாகக் குறியீடுகள்



நீருக்கு அதிபதி நாகம் என்னும் நம்பிக்கை பண்டைய மக்களிடையே நிலவி வந்துள்ளது. வாவி, மதகு, வாய்க்கால் போன்ற நீர்நிலை இடங்களில் எல்லாம் நாக உருவங்கள் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டன. நாக வடிவங்கள் செல்வங்களைப் பாதுகாக்கும் சின்னமாக சித்தரிக்கப்பட்டுள்ளன. தனியாகவோ, சோடியாகவோ மரச்செதுக்கு வேலைப்பாடுகளிலும் கட்டிட நுழை வாயில்களிலும் பித்தளை, துணி அலங்கார வடிவங்களிலும் இவ்வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இது ஆசிய நாடுகளின் கலைசார்ந்த ஒரு குறியீடாகவும் வழிபாட்டு வடிவமாகவும் அற்புதங்கள் நிகழ்த்தக்கூடிய ஒரு சக்தியாகவும் கருதப்படுகிறது. அனுரதபுரத்தில் ஐந்து தலை நாக உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஏழுதலை கொண்ட நாக உருவங்கள் காவற்கற்களில் செதுக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. நாக உருவங்கள் செதுக்கப்பட்ட காவற்சிலைகள் 'தொறட்டுபால' என சிங்களத்தில் அழைக்கப்பட்டன. மிகிந்தலையில் உள்ள நாகபொக்குண (குளம்) கல்லிலும் செதுக்கப்பட்டுள்ளது. தூபராமைக்கு அண்மையில் நாக வடிவம் ஒன்று உண்டு. இந்து மக்களிடையும் நாக வணக்கம் இருந்து வந்துள்ளது. அவர்கள் இதனை நாகதம்பிரான் என அழைக்கின்றனர். தற்போது ஐந்து தலை நாகவடிவினை மகாவலி அபிவிருத்திச் சபையின் சின்னமாக அரசினர் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரிங்குதல

வகதெக அலங்கார வடிவத்தின் அபிவிருத்தியே திரிங்குதல வடிவமாகும். பொறுமை கெட்டித்தனம், நிபுணத்துவம் இவற்றைக் காட்டுவதற்கு புராதன சித்திர மாணவர் இதனை இறுதியாக வரைந்தனர். பதுறு, வியவெல, சீனமல் இவற்றை ஒன்றுடன் சேர்ந்த படைப்பே திரிங்குதல வடிவமாகும். மகரம், அன்னப்பூட்டு தோகைகளில் திரிங்குதல அமைப்பு வரையப்படுகிறது.

### தோட்டலங்காரம் (கர்ணிகா)

கர்ணிகா அல்லது தோட்டலங்காரம் என அழைக்கப்படும் ஒரு வடிவம் தேன் வதை போன்ற இழைவடிவானது இது புராதன மலர் அலங்காரங்களான நாகதல, கத்தரிப்பூ அன்னாசிமல் போன்ற வடிவங்களின் மத்தியில் (நடுப்பகுதி) இவ்வாறான அமைப்பு காணப் படுகின்றது.

### சுவஸ்திகா

சுவஸ்திகா என அழைக்கப்படும் வடிவம் முற்றிலும் நேர் கோட்டு அமைப்பைக் கொண்டே கேத்திரகணித வடிவமைப்பாகும். இதை இந்துக்கள் சிவசின்னமாகவும் கொள் கின்றனர். எந்த நிலையில் திருப்பினாலும் ஒரே வடிவினதாய் தோன்றும் இவ்வடிவம் 2ம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மனியில் நாஸிக் கட்சியினர் தமது கட்சியின் சின்னமாக பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

## புராதன கலையாக்கங்களில் கன்னியர் வடிவங்கள்

புராதன அலங்கார வேலைப்பாடுகளில் மனித வடிவங்களும் சிறப்பாக கன்னியர் வடிவங்களும் நல்ல கற்பனையில் நேர்த்தியாக உருவகிக்கப்பட்டு விளங்குகின்றன. சித்திரங் களிலோ, அலங்காரச் செதுக்கு வேலைகளிலோ இவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. கண்டி, கம்பளை காலங்களிலெல்லாம் நானாவிதமான பெண் வடிவங்கள் காணப்படுகின்றன.

### பூங்கன்னி (நாரிலதா)



இது சிங்கள கலை இலக்கியங்களில் அழகுக் கன்னியின் வடிவமாக வர்ணிக்கப்படுகிறது. கொடி அலங்காரம் வரையும் கலைஞர்கள் 'நாரிலதா' வடி வத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. இது இமாலயத்தில் உள்ள ஒரு வடிவம் என கருதப்படுகின்றது.

தலையில் முடி அணிந்தது போன்று இரு கரங் களிலும் சீன மலரினைப் பிடித்த வண்ணம் காணப் படும் மங்கையின் எழில்மிகுந்த தோற்றமாகும். இதன் கீழ்ப்பகுதி விசித்திரமான இலை குழைகளால் மறைக் கப்பட்டது போல உருவாக்கப்பட்டுள்ளது. சுதாராம ஓவியத்திலும், கடலாதேனிய பௌத்த விகாரையி லும், இலங்காதிலக வாயிற் கதவு வேலைகளிலும் கண்டிக்கால எம்பக்கே மரத்தூண்களிலும் இவ்வா றான வடிவங்களைக் காணக்கூடியதாக உள்ளது. களனி விகாரையின் பழைய ஓவியங்களிலும் இவ் வடிவம் வரையப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கின்னரப்பெண் (கிந்துர)

கின்னரப் பெண் என அழைக்கப்படும் ஒரு வடிவம் எம்பக்கே மரச் செதுக்கு வேலைப் பாடுகளில் காணப்படுகின்றது; இதன் மேற்பகுதி பெண்ணின் வடிவமாகவும் கீழ்ப்பகுதி பறவையின் சாயலாகவும் கற்பனையில் மிக அழகாக உருவகிக்கப்பட்டுள்ளது.

### நவநாகரிகக் குஞ்சரம்

ஒன்பது பெண்களினால் நளினமான முறையில் உருவாக்கப்பட்ட ஒருயானையின் வடிவம்

### சப்த்தி நாரி பல்லக்கு

ஏழு கன்னியரின் வடிவங்களினால் உருவாக்கப்பட்ட ஒரு அழகான பல்லக்குவடிவம். இவ்வாறான வடிவம் டெரிகம விகாரையிலும் தலதா மாளிகை வெளி மண்டபத்திலும் காணக்கூடியதாக உள்ளது.



### பஞ்ச நாரி கடய

ஐந்து பெண் உருவங்களைக் கொண்ட பானை வடிவிலான தோற்றம் செம்பு பித்தளை வேலைகளில் பஞ்சநாரிகடய வடிவம் காணப்படுகின்றது.



எம்பக்கே

இது போன்ற அலங்கார கற்பணை வடிவங்கள் திராவிடக் கலைகளிலும் காணக்கூடியதாகவுள்ளது. காராம்பசு கண்ணனும் கோபியரும் இதில் முக்கியமான அலங்கார அமைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாப்பகூவா மலைவாயில்களில் கல்லினாலான மதிற் சுவர்களில் நடனமாடும் பெண் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பெரகரா தோரணையில் வாத்தியம் வாசிக்கும் பாவனையில் இவை செதுக்கப்பட்டுள்ளன. கம்பளை, கடலாதேனிய அலவத்துவர விகாரையின் கல் அடித்தளத்திலும் யாப்பகூவா மலையின் வாயில் அமைந்ததுபோன்ற நடன உருவங்கள் காணப்படுகின்றன. பொலநறுவ வட்டதாகேயில் மேளம் அடிக்கின்ற குழல் வாசிக்கின்றது போன்ற நடனமாடும் மங்கையர் வடிவங்கள் வரிசையாக அமைந்து காணப்படுகின்றன. இவை அச்சுக்களில் வார்க்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது போல் காணப்படுகிறது கால நீரோட்டத்தில் இவை சிதைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

## மல்யுத்தம் (மல்போர)

மல்போர என்னும் ஒரு அமைப்பு இருவர் மல்யுத்தம் செய்வது போன்ற வடிவமைப்பாகும். மிருந்தலை, அனுரதபுரம் கண்டிக் காலத்தின் தலதாமாளிகை களனி புதிய விகாரை எம்பக்கே செதுக்கு வேலைப்பாடுகள் சுதர்ராம சுவரோவியங்கள் கடலாதேனிய, யாப்பகூவா கலை வேலைப்பாடுகளிலும் காணக்கூடியதாகவுள்ளது.

## விஸ்வகர்ம தேவர்

சிங்கள கலை வடிவங்களில் விஷ்வகர்ம தேவர் எனப்படும் ஒரு வடிவம் குறிப்பிடப்பட்டுள்ளது. கலைகளுக்கு அதிபதி எனக்கூறப்படும் இவ்வடிவம் பத்து கரங்களும் கையில் ஏட்டைப் பிடித்த வண்ணம் எழுத்தாணி, வாழ், சிதம்பரசக்கரம், பூமொட்டு, செம்பு ஆகியவற்றைப் பிடித்த வண்ணம் கழுத்தில் நாகம் சுற்றியவாறு கூறப்படுகின்றது. இது பிரம்மதேவனின் வடிவம் போன்று கலைப்படைப்பின் தேவர் எனக் கூறப்படுகின்றது.

# பிரயோக அலங்காரங்கள்

புராதன அலங்கார காட்டுருக்கள் பொருத்தமானதும், இலகுவானதுமான தொழில் நுணுக்கங்களைக் கையாண்டு ஆக்கப்பட்டவையாகும். ஒரு பொருளின் அலங்கார வடிவத்தை இன்னொரு பொருளுக்கு அமைத்து அழகுறச் செய்வதும் இதில் ஒரு முறையாகும். உதாரணமாக மட்பாண்டங்களில் பின்னல் முறையிலமைந்த அலங்கார வடிவங்களை பிரப்பம் கூடைகளின் இழைப்பு வேலைகளிலும், உலோக வேலைகளிலும் அமைத்துக் கொண்டதில் இருந்தும் இதை அறிந்து கொள்ளலாம். இவ்வாறான அலங்காரங்களை பிரயோக அலங்காரங்கள் (APplied Designs) என வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிப்புரு (பனாவ)

உண்மையாகவே இது ஒரு சிப்பின் பல்வரிசை வடிவமாகும். துணிவிளிம்பு ஓரங்களையும் அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உலோக வேலைகளிலும் அரும்புடன் சேர்ந்து அலங்கரிக்கப்பட்டிருப்பின் மிக அழகாக இருக்கும்.

## அரும்புவ

கட்டிட நிலை ஓரங்களில் அலங்கரிப்பதற்கு சிப்புருவுடனும், பூங்கொடியுடனும் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது. வட்டங்கள் தொடர்ந்து அமைக்கப்பட்ட வடிவமே அரும்பு எனப்படுகிறது. கற் செதுக்கு வேலை, மரம் மற்றும் உலோகம் போன்ற வேலைகளும், அரக்கு வேலை (லக்சா) மட்பாண்ட வேலைகளிலும் இதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## ஒற்றைப்பட்டுக் கயிறு (தனிப்பட்ட லனுவ)

கேத்திர கணித வடிவமைப்பில் பண்டைய கலைஞர்களால் உருவாக்கப்பட்ட வடிவங்களில் ஒன்று ஒடுக்கமான ஒரு பகுதியில் நேர்த்தியான ரேகை வரையப்பட்டு பின்னர் பல வர்ணங்களைப் பாவிப்பதால் இவ்வடிவம் மிக அழகுடையதாக விளங்குகின்றது.

## இரட்டைப்பட்டுக் கயிறு

இது ஒற்றைப்பட்டுக் கயிற்றின் ஒரு அபிவிருத்தி வடிவமாகும். நிலவிரிப்பு, பின்னல் வேலை, அலங்காரங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது நிறமூட்டுவதன் மூலம் அழகு பெறுகின்றது.

## குந்திரிக்கம்

சமாந்தர ரேகைகளினால் உருவகிக்கப்படும் வடிவம் ஒவ்வொரு சமாந்தரங்களுக்கு நடுவாக இரு குறுக்குக் கோடுகள் இடப்பட்டுள்ள வடிவம் பூரணமாகும். அல்வாத்துண்டு (டைமன்) வலைத்துவாரம் என்று அழைக்கப்படும் விஷேச அலங்காரங்களும், தந்த, மர வேலைப்பாடுகளிலும் சிப்புருவுடன் இது பயன்படுத்தப்படுகின்றது.

## கல்வட்டம் (கல்பிந்து)

சதுரம், வட்டம் அல்லது சாய்சதுரம் ஒரே திசையில் மாறி மாறி வைத்தது போல் அமைந்திருக்கும் வடிவமே கல்வட்டம் எனப்படுகின்றது. வர்ண ஓவியங்களிலும் மரச் செதுக்கு வேலைகளிலும் இது காணப்படுகின்றது.

## தனிச்சுழி (ஒற்றைச்சுழி)

அரக்குவேலை (லக்சா) செம்பு போன்ற உலோக வேலைகளிலும் செதுக்கு, அச்சு வேலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மிக இலகுவாக பயன்படுத்தக்கூடியது.

## இரட்டைச்சுழி

இது தனிச்சுழியின் ஒரு அபிவிருத்தியாகும். ஒரு இரேகையின் வளைவு (சுழி) அமைந்திருக்கும். அரக்கு வேலை மற்றும் உலோக வேலைகளில் பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுழிக்கோடு (சுழிவெல)**

ஒற்றைச் சுழி தொடர்ச்சியாகப் படரும் கொடிவடிவத்தில் முக்கியமாக அரக்கு, உலோக வேலைகளில் பயன்படுத்தப்படுகிறது.

**நீரலை (தியரெல)**

நீரின் ஏற்றத்தால் உண்டாகும் அலையைப் போல காணப்படும் சிற்ப வேலைகளிலும், அரக்கு வேலைகளிலும் காணப்படுகின்றது.

**சவடி**

சவடி புராதன தையல் வேலைகளிலும் உலோக, அரக்கு வேலைகளிலும் பாவிக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு முறையான அமைப்பிலும் காணப்படுகின்றது.

**பூவும் மொட்டும் (பூவும் இலைகளும்)**

பொன், வெள்ளி, கைப்பணி வேலைகளில் அனேகமாக பயன்படுத்தப்படுகின்றது: கட்டிடங்களின் வளை (லின்டர்) புடைப்பு வேலையாகக் காணப்படுகின்றது. கற்தூண்களின் தலைப்பகுதியில் இவ்வாறான அலங்கார அமைப்புக்கள் காணப்படுகின்றன. கூரையும், சுவரும் இணையும் இடத்தில் சுவர் அலங்காரமாக இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அரசிலை (போபத)**

கூர்மையான அரசிலை வடிவத்தில் அமைந்துள்ளது. உலோக வேலைகளிலும், தையல் வேலைகளிலும் அனேகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புத்தர் அமர்ந்திருக்கும் பீடங்களில் அரசிலை வடிவங்கள் தலைகீழான அமைப்பில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சலுபொட்ட**

சால்வை வஸ்திரங்களிலும், தையல், நெசவு வேலைகளிலும் அலங்காரமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய சிங்கள அலங்கார வடிவங்களில் சிறந்த ஒன்றாகும்.

**முத்துவெல**


அனுராதபுர, தூபராம, லோகமகாபாய, ருவான்வெலிசய போன்ற இடங்களிலெல்லாம் முத்துவெல காணப்படுகிறது. களனி புது விகாரையில் மனதை ஈர்க்கும் வகையில் தாமரை, அல்லி, கடுப்புல் மல் போன்றவையிலான முத்துவெல காணப்படுகின்றது. மிகப்பழைய கால அனுரதபுர கட்டிடச் சுவர், கூரை இணையும் இடங்களிலும் சுவரோவியங்களிலும் இது பயன்படுத்தப்பட்டுளளது. கற்தூண்களிலும் கற்கட்டுகளிலும் இது அனேகமாகக் காணப்படுகின்றது.

**பூங்கொடி அல்லது வள்ளிக்கொடி (லியவெல)**


அலங்கார வேலைப்பாடு கொண்ட பூங்கொடி அலங்காரம் அபயகிரி வாசல் கடதூண்களிலும் சந்திரவட்டக் கற்களிலும் மரச்செதுக்கு வேலைப்பாடுகளிலும், வர்ணச் சித்திரங்களிலும் இது அனேகமாகக் காணப்படுகின்றது. அனுரதபுர, பொலநறுவை, கண்டிக் கால கைப்பணி வேலைகளிலும் இவ்வலங்காரம் காணப்படுகின்றது. பிச்சிமலரினாலான பூங்கொடி களனி விகாரையில் மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரும்புவ




குந்திருக்கன்




கல்வட்டம் (சல்பிந்து)




பூவும் மொட்டும்



சவடி



முத்துவெல




பலாபேதி



அரசிலை (போபத)




பூங்கொடி (லியவல)



பிச்சுமல்




அன்னாசிமல்




சலுப்பொட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வல்பொத்த



கலஸ்தங்கய



தீச்சுடர்



கர்ணிகா



சுவஸ்திகா

### தீச்சுடர்

சிங்களத்தில் கினிதெல்ல என அழைக்கப்படும் இவ்வலங்காரம் அனுரதபுர, பொல நறுவை சந்திரவட்டக் கற்களிலும் காணப்படுகின்றது. புத்தர் சிலைகளில் தலையின் பின் புறமாக தீச்சுடர் அமைப்பு காணப்படுகின்றது.

### வல்பொத்த

அரக்கு (லாகிரி) வேலைகளிலும், தூண்கள், ஏடுஅட்டை என்பவற்றை அலங்கரிக்க வல்பொத அலங்காரம், களஸ்தங்கய, சவடி இவற்றுடன் தொடர்புடையதாக அலங்கரிக்கப்படுகிறது.

### கலஸ் தங்கய


அரக்கு வேலைகளிலும் கூரை (சீலிங்) வேலைப்பாடுகளிலும் அழகுபடுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. மட்பாண்ட வேலைகளிலும் காணப்படுகிறது. கோணலான சதுரங்களின் நடுவே மலர்க்கிளை போன்ற வடிவங்கள் நிரப்பப்பட்டுக் காணப்படும் நெசவு வேலைகளிலும் இது காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 08

# இஸ்லாமியக் கலை



இஸ்லாமிய வரலாறு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து தொடங்கி பண்டைய அரேபியர்களின் மரபு வழக்குகளையும், பாரசீக சாம்ராஜ்யத்தின் நீண்டகால கட்டங்களைப் பின்பற்றி பிரமாண்டமாக வளர்ச்சியடைந்த ஒன்றாகும். இஸ்லாமியக் கலைகளில் பாரசீக, சிரியா (சரசானிய) பண்புகளில் செல்வாக்கைக் காணக்கூடியதாக உள்ளது. ஆண்டவனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் அருளப்பட்ட திருக்குறானின் விசுவாசத்தை வைத்தே முஸ்லிம்கள் ஒரு புதிய உலகைக் கட்டியெழுப்புவதையே தமது கடமையாகக் கொண்டுள்ளனர். மனிதரது ஆத்மாவை பண்படுத்தி அழகுபடுத்துவதையே இஸ்லாம் இலட்சியமாகக் கொண்டுள்ளது.

இஸ்லாமியர் உலகுக்களித்த வாணிபம், கணிதம், வைத்தியம், தர்க்கசாஸ்திரம், இலக்கியம் என்பவற்றுடன் சிற்ப, சித்திர கட்டிட அழகியற் கலையும் அதி பெருமை வாய்ந்த ஒன்றாகும். இஸ்லாமியக்கலை தொழில்நுட்பம், அழகு, கற்பனை ஆகிய மூன்றும் இணைந்தவையாக விளக்குகின்றது.

வர்த்தக நோக்குடன் நாடோடிகளாய்த் திரிந்த அராபியர்கள் நாகரீகம் கண்ட மேல்நாடுகளையும், கீழைநாடுகளையும் வெற்றி கொண்டதுடன் அந்நாடுகளில் காணப்பட்ட அழகிய சிற்பங்களையும், கட்டிடங்க்ளையும் உற்று உணர்ந்து அறிந்தனர். அவற்றைத் தம் படைப்புக்களில் பிரதிபலிக்கச் செய்தனர். இவர்களது ராஜ்சியம் கலைவளம் கொண்ட உரோமராஜ்சியத்திலும் பார்க்க உயர்ந்ததாக மிளிர்ந்தது

இஸ்லாமியர் வெற்றி கொண்ட நாடுகளில் சிறந்த சிற்ப வல்லுனர்கள் தோன்றினர். அதனால் எந்த நாட்டிலாவது முஸ்லிம்களின் சிற்ப கட்டிடக் கலைகள் காலத்தினால் அழியாது தனித்தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. உலகெங்கிலுமுள்ள புனித பள்ளிவாசலாய் இருந்தாலென்ன? மதத்தைப் போதிக்கும் மத்திராசாக்கள் என்றாலும் கல்லறைகள் ஆனாலும் இஸ்லாமியக் கட்டிடக்கலை தனிக்கோவையுடன் காணக்கூடியதாக உள்ளது.


இஸ்லாமியச் சிற்பிகள் கலை நுணுக்கம் தெரிந்த காரணத்தினால் பிறரிடமிருந்து அறிந்தவற்றைக்கூட மாற்றியமைத்து இஸ்லாமியக்கலையாக உருவகித்துக்கொள்ளும் ஆற்றல் உடையவர்களாக இருந்தனர். அழகியவை என்றும், உயர்ந்தவை என்றும் தாம் கருதக் கூடியவை எல்லாம் ஒன்றுசேர்த்து ஒப்பற்ற கட்டிட, சிற்ப சித்திரத்தை உருவாக்கினர்.

எகிப்திய கட்டிடக்கலை ஸ்பெயினிலும், வட ஆபிரிக்காவிலும் தோன்றிய மோக்கிராட் கட்டிட மரபும் 7ம் நூற்றாண்டில் பாரசீகத்தையும், மொசப்பத்தேனியாவையும் ஆட்சி புரிந்த சரசானிய மன்னர்கள் கையாண்ட பாரசீக கட்டிட மரபும் பௌத்த சிற்ப மரபும் இணைந்தே இஸ்லாமிய கட்டிடக்கலை தோன்றியது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய பள்ளிவாசல்



அழகிய புராதன இஸ்லாமிய மசூதி (பள்ளிவாசல்)

கி. பி. 622ம் ஆண்டில் மதினாவில் கட்டப்பட்ட பள்ளிவாசல் அமைப்பைக் கொண்டே உலகில் பல நாடுகளிலும் இஸ்லாமிய பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டன. இந்த பழமைவாய்ந்த பள்ளிவாசல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களினால் உருவாக்கப்பட்டதாகும். இது சதுரமானதும் கற்களினாலும், மண்ணினாலும் கட்டப்பட்டதாகவும் கூட்டுப் பிரார்த்தனை நடத்துவதற்காக பிரத்தியேக இடமும் அமைக்கப்பட்டிருந்தது. மிம்பர் எனப் படும் ஒரு ஸ்தானம் புதிய அம்சமாக பின்னரே சேர்க்கப்பட்டது. சில காலத்தின் பின்பு மச்ஷிரா (Machrah) எனப்படும் கிராதி அல்லது திரை அமைக்கப்பட்டது. மிஹாராப் என்னும் நீண்ட அரைவட்ட வடிவம் ஒன்றும் சுவரில் உருவாக்கப்பட்டது. இவற்றுக்குப் பின்பே அல்லாவின் திருச்சமூகத்துக்கு வருபவர்கள் தங்களை சுத்தஞ்செய்வதற்காக (வுளு) உபயோகமாக (ஹெளள்) என்னும் தண்ணீர்த் தொட்டியும் உருவாக்கப்பட்டது. மேற் கூறிய அத்தனை அம்சங்களும் இன்று உலகில் காணப்படும் பள்ளிவாசல் ஒவ்வொன்றிலும் காணக்கூடியதாக உள்ளது.

இஸ்லாமிய கட்டிடக்கலையின் இன்று சிறந்து விளங்கும் மினறா (Minaret) என்னும் உயர்ந்த அழகிய மாடத்தூபியும் கற்கும் பட்டமும் (Dome of Tehrock) பின்பே அமைக் கப்படலாயின. இஸ்லாமிய கட்டிடக் கலையில் சிறந்து விளங்கும் மினறா என்னும் நெடிய மாடத்தூபிகள் பள்ளிவாசலுடன் இணைக்கப்பட்டதற்கான காரணம் தொழுகை வேளை யில் உரத்த குரலில் ஒருவர் கூவி அழைப்பது இஸ்லாமிய வழக்கம் அதனை உயர்ந்த இடத்திலிருந்து நிகழ்த்தினால் வெகுதூரத்தில் கேட்குமாகையால் மசூதியில் மினராக்கள் அமைக்கப்பட்டன.

பொதுவாக ஒரு இஸ்லாமிய மசூதியில் திறந்த மண்டபமும் அதனைச் சுற்றியுள்ள தூண்களும், சுவர்களும், அடித்தளமும் அழகிய சலவைக்கல் பதிந்தும், தலைவாயிலில் கேத்திர கணித வடிவில் அமைந்த அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தும் காணப்படும். இஸ்லாமிய கட்டிடக் கலையில் கூரிய குதிரை லாட வடிவிலான மாட வில்வடிவமும் நெடிய அழகான மாட தூபிகளும் பலகணியும் அதில் வெண்கலத்தினாலான குமிழ்களும் பொருத்தப் பட்டு அழகுடன் காணப்படும்.

இன்றும் டமஸ்கஸ், பக்தாத், சமறா போன்ற நகரங்களில் பிரபல்யம் வாய்ந்த அழகிய இஸ்லாமிய கட்டடங்கள் காணப்படுகின்றன. இஸ்பெயினில் உள்ள ஆர்ஜாம்பியா கிரனாடா அரண்மனைகளும் துருக்கியிலுள்ள சுலைமானியா மசூதியும் கைரோவிலுள்ள இபன்தூலூண் மசூதியும் இஸ்லாமிய சிற்பத்துக்குரிய எடுத்துக்காட்டுக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது அண்டை நாடான இந்தியாவிலும் இஸ்லாமிய கட்டடக் கலையின் செல்வாக்கினை நாம் காணக்கூடியதாய் உள்ளது. இந்தியாவிற்கு வந்த துருக்கியர்கள் மாடவில் கும்மட்டம் மினறா என்னும் கட்டட உறுப்புக்களையும் இந்திய கட்டடக்கலையில் புகுத்தினர். மொகலாய ஆட்சியில் இந்திய ஓவிய கட்டடக்கலை புதிய தோற்றம் பெற்றது. பாரசீக செல்வாக்கினால் மெருகூட்டப்பட்டது எனலாம். இன்றும் ஆக்கிரா நகரை அலங்கரிக்கும் 'தாஜ்மகால்' மன்னர் சாஜகானின் மனைவியின் நினைவுச்சின்னமாக விளங்கும் ஒரு அழகிய கட்டிடமாகும்.

## இலங்கையில் இஸ்லாமிய மசூதிகள்

இலங்கையில் இஸ்லாமியர் பரவலாக வாழ்ந்து வரும் மன்னார், புத்தளம், பேருவளை, கொழும்பு, தேவன்துறை, அக்கரைப்பற்று. காத்தான்குடி போன்ற இடங்களில் எல்லாம் இஸ்லாமிய புராதன கட்டிடங்களும் வரலாற்றுச் சின்னங்களும் காணக்கூடியதாக உள்ளன.

இன்று இலங்கையில் பூர்வீக பள்ளிவாசலாக கருதக்கூடியது ஒன்று எனின் அது பேருவளை கெச்சிமலைப் பள்ளிவாசலாகும். இது 15ம் நூற்றாண்டில் அலேச்சாந்திராவில் அமைக்கப்பட்டுள்ள பள்ளிவாசலை ஒத்ததாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் கடலாலும் ஒரு பக்கத்தில் தரையாலும் சூழப்பட்டதாக அமைந்துள்ள இப் பள்ளிவாசலின் எதிர்ப் பக்கத்திலுள்ள வாயில்களும், கதவுகளு தென்னிந்திய சிற்பப்பாணி போன்று அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இரத்தினபுரியில் உள்ள ஜின்னத் பள்ளிவாசல் இலங்கையில் காணப்படும் வனப்புமிக்க பள்ளிவாசல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. கொழும்பிலுள்ள கதிரியா பள்ளிவாசல் இஸ்லாமிய சிற்ப முறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. கவர்ச்சியான வளைமாடத்தின் மூடியும் கோபுர வடிவிலமைந்த தொழுவிடமும் 'மூரிஸ்' சோனக சிற்ப முறையில் அழகுடன் அமைந்து காணப்படுகின்றது.

சண்டிப்பகுதியில் யாப்பகூவா கோட்டை வாசலில் யன்னல்களும் இஸ்லாமிய சிற்ப சாயலைப் போன்று அமைந்து விளங்குகின்றன. கண்டியில் நாயக்கர் மன்னர் காலத்து சிற்ப வேலைப்பாடுகளில் அரேபிய சிற்ப செல்வாக்கினைக் காணக்கூடியதாக உள்ளது.

## அலங்கார சித்திர வேலைப்பாடுகள்

இஸ்லாமிய கலையில் இடம்பெற்றுள்ள இன்னுமொரு அம்சம் அலங்கார சித்திர வேலைப்பாடுகள் ஆகும். மனித உருவத்தையோ உயிரினங்களின் வடிவங்களையோ உருவகித்தல் இஸ்லாமிய கோட்பாட்டிற்கு முரண்பட்ட ஒன்றாக கருதப்படுகின்றது.






அரபு எழுத்தணியலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மோட்சம் செல்லும் கப்பல் (அரபு எழுத்தணி - துருக்கி)

ஆனாலும் மனிதனுக்கு இயல்பான அழகுணர்ச்சியை அது ஒதுக்கிவிடவில்லை. இத்தடை காரணமாக கேத்திரகணித முறையில் இயற்கை உருவங்களை வரைந்து அலங்கரிப்பது இஸ்லாமிய கலைஞருக்கு தனிச் சிறப்பு வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது.

இஸ்லாமிய சித்திரங்களில் வரும் அணியான அலங்கார அமைப்புக்கள் கட்டிடக் கலையில் வரும் அம்சங்கள் அரஸ்பெக் (Arabsque) என அழைக்கப்படுகின்றது. அரஸ்பெக் என்பது இஸ்லாமிய அல்லது அராபிய என்ற சொல்லைக் குறிக்கும் வேறு ஒரு சொல்லாகும். பல்வேறு அமைப்புள்ள இலைகளையும் மலர் அலங்காரங்களையும் கேத்திர கணித அலங்கார அமைப்பில் புனையும் அரஸ்பெக் என்னும் அலங்காரக்கலை இஸ்லாமியருக்கே சொந்தமான ஒன்றாகும்.

இஸ்லாமியக் கலையில் மற்றும் முக்கியமான ஒன்று அரபு எழுத்தணிக் கலையாகும் முனைப்பான அரபு எழுத்துக்களால் கலை ஆக்கங்களை உருவாக்குவதும் இஸ்லாமியக் கலையின் மற்றுமொரு அம்சமாகும். முஸ்லிம்களின் சித்திரங்களிலும், கட்டிடங்களிலும் அரபு எழுத்தணி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அரபு அகர வரிசை எழுத்துக்கள் கற்பனையும் ஒப்பனையும் நிறைந்த ஒன்றாகும். அரபு அகர வரிசை எவ்வாறு தோன்றியது என்பது பற்றிய விடயம் அரேபிய மக்களிடையே ஊகிக்க முடியாமல் இருக்கிறது. ஆயினும் முதன்முதலாக அலங்காரப் பாணியில் வரையப்பட்ட அரபு எழுத்துக்கள் 'கூபி' எழுத்துக்களேயாகும்.

கி. பி. 10ம் நூற்றாண்டில் ஹஸ்ரத் உமர்கத்தாப் அவர்களின் ஆணைப்படி ஸ்தாபிக்கப்பட்ட கூபா நகரத்திலே தோன்றியதென்பதால் இவை இவ்வாறு அழைக்கப்பட்டன. எழுத்தணி அழகுக்கலையைக் கண்டுபிடித்த அல் அஹவால் அவர்கள் அக்காலத்தில் தலை சிறந்த எழுத்தணி ஓவியராக விளங்கினார்.

முஸ்லிம் மக்கள் திருக்குர் ஆனின் மூலபாடங்களை ஏடுகளில் பிரதி செய்யும்போது அளவுப் பொருத்தம், ஒழுங்கு ஆகிய ஓவிய இலக்கணங்களுக்கேற்ப ஏட்டில் தங்களின் கையெழுத்துக்களை மணிமணியாக பொறித்தனர். இவ்வாறு ஏடுகளில் பிரதி செய்தல் கலிக்கிரபிக் (Calligraphy) எனப்பட்டது. இப்பிரதிகளிடையே சிறுசிறு விளக்கப்படங்களையும் வரைந்தனர். முகமது (ஸல்) அவர்களுடைய வரலாற்றுப் பெயர் பெற்ற இஸ்லாமிய பெரியார்களின் வரலாற்றையும் அழகுறச் சித்தரித்தனர். இவை சிற்றோவியம் (Miniatures) என அழைக்கப்பட்டன. சமய நூல்களையும் மகாகவிகளின் கூற்றுக்களையும் பிரதி செய்வது ஆத்ம ஈடேற்றத்திற்கு வழியென அவர்கள் கருதினர்.

அராபியர் கைப்பணி அழகிய கலைப் பொருட்கள் செய்வதிலும் சிறந்த வல்லுனராக விளங்கினர். பட்டாடைத் துணிகள், முசல்லா விரிப்புகள், அழகிய கம்பளங்கள், கண்ணாடிப் பொருட்கள், மட்பாண்டங்கள் செய்வதிலும் சிறந்து விளங்கினர். இன்றுகூட 'கலம்' என்னும் எழுதுகோலையும் காரி என்னும் கைவேலையையும் சேர்த்து கலங்காரி என்னும் தொழில் பாரசீகத்தில் சிறப்புற்று விளங்குகின்றது. நிறக் கண்ணாடித் துண்டுகளை பயன்படுத்தி மொசேக் (Mosaic) அலங்காரக் கலையை அறிமுகஞ் செய்தவர்கள் இஸ்லாமியர்களே. இன்றுகூட செக் (Cheque) என ஆங்கிலத்தில் கூறப்படும் காசோலைக்கு வழங்கப்படும்சொல் ஒரு அராபியச் சொல் என்பதிலிருந்து அவர்களின் மொழிச் செல்வாக்கினை அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 09

# இலங்கையில் ஐரோப்பியக் கலை

ஐரோப்பியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் மேல் நாட்டினரின் கலை, கல்வி, கலாச்சாரம் என்பனவும் இங்கு பரவக் காரண மாயிற்று அதுமாத்திரமன்று இலங்கையின் பண்டைய பாரம்பரிய கலையில் மேல் நாட்டி னரின் தாக்கம் ஏற்படலாயிற்று.

புராதன விகாரை, மரபு ஓவியங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டன. பழைய மரபு முறை மாறி புதிய பாணியில் விகாரை ஓவியங்கள் வரையப்பட்டன. கட்டிடக் கலை, இசைக்கலை, அச்சுக்கலை, கல்விமுறை இவற்றில் முக்கியமானவை. அந்நியர் ஆட்சி இலங்கையில் 15ம் நூற்றாண்டில் ஆரம்பித்தாலும் 18ம் நூற்றாண்டுடன் கண்டி இராச் சியத்தையும் ஆங்கிலேயர் கைப்பற்றியதன் மூலம் இலங்கையின் கலைமரபுகள் முழுமையாக ஒரு மாற்றத்தை எதிர்நோக்கியது.

கிராமப்புற மக்களும் பாமரரும் விகாரைகளிலும், ஆலயங்களிலும் ஜாதகக் கதை களையும் மரபுவழிச் சித்திரங்களையும் கலையாகக் கைக்கொண்டிருந்தனர். 20ம் நூற் றாண்டின் முற்பகுதியில்தான் இலங்கை சித்திரக் கலைஞர் தமது சித்திரத் திறமையினை விருத்தி செய்வதற்காக ஐரோப்பிய (மேல்நாட்டு) முறையினை வளர்க்க முயன்றனர்.

இலங்கை பண்டைய சுவரோவியங்களில் ஐரோப்பிய கலைத் தாக்கத்தினால் புதிய தோற்றம் பெற்ற சுவரோவியமாக களனி ரஜமகா விகாரைச் சித்திரங்களைக் குறிப்பிடலாம். இவை ஓவியர் சோலியஸ் மென்டிஸ் என்பவராலே வரையப்பட்டவையாகும்.

இலங்கையில் ஐரோப்பிய சித்திரக்கலை பரவியமைக்கு ஆரம்ப கர்த்தாவாக விளங் கியவர் அன்ருஸ்நிகலஸ் என்பவரே. வன்டோம் என்னும் ஒல்லாந்த ஓவியரையே இவர் பின்பற்றினார். புகைப்படம் எடுத்தல் பரிட்சயம் இல்லாத அக்காலத்திலே பெறுமதி வாய்ந்த வரலாற்றுச் சம்பவங்களையும் அரச நிகழ்வுகளையும் சிறப்பாக வரைந்து புகழ் பெற்றார்.

1880ம் ஆண்டிலே இலங்கையில் கல்வி கற்ற சமூகத்தினருக்கு ஐரோப்பியருடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் ஒரு ஓவிய குழுவாக இயங்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. இக்காலத்திலே ஏற்படுத்தப்பட்ட கொழும்பு ஓவிய கழகம் பிற்காலத்திலே (Society of Art) என்னும் பெயரில் உருவெடுத்தது.

இலங்கை ஓவியக்கலை மரபில் ஐரோப்பியரின் கலைத்தாக்கம் விக்டோரியா கல்வி, கலை சார் மரபினைக் கொண்டதாகவே விளங்கியது. இதன் பிரதான கருப்பொருள் இயற் கையை பிரதிபண்ணும் கொள்கையாகவே இருந்தது.

1891ம் ஆண்டில் இலங்கை கலா சங்கத்தில் பிரபல்யம் அடைந்த கலைஞர்களாக கேற் முதலியார் A. G. S. அமரசேகரா, J. D A. பெரேரா, டேவிட்பெயின்டர் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர். 1893ம் ஆண்டிலேதான் முதன்முதலாக இலங்கை குடியேற்ற கல்வி முறையில் சித்திரம் ஓர் பாடமாகவும் போதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கலைச்சங்கம் விக்டோரியா மகாராணி காலத்தில் ஓவியப் பாணியை பெரிதும் ஆதரித்தது. கலைக்கூடத்தினுள் (Art Studic) ஓவியம் படைக்கும் முறையும் உருவாகியது. ஓவியங்களில் மரபு மாறினாலும் கருப்பொருள் உள் நாட்டு பாரம்பரியத்தை கொண்டதாகவே இருந்தது. இலங்கை மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் கண்டிய நடனக்காரர், மேளகாரர் போன்ற கலாச்சார சார்புடையதாக இருந்தது. இன்னும் சிறப்பாகக் கூறினால் இலங்கை சிங்கள ஓவியங்களிலும், தமிழ் ஓவியங்களிலும் கருப்பொருளின் அடிப்படையில் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் கலைக்கூட ஓவியமுறை தோன்றுவதற்கு C. E. வின்சர் என்பவரே காரணமாயிருந்தார். 1920ம் ஆண்டில் இவர் இலங்கை கல்வித் திணைக்களத்தில் சித்திர பரிசோதகராகக் கடமை புரிந்துள்ளார். இவ்வாறு ஐரோப்பிய தாக்கத்துடன் வளரத் தொடங்கிய இலங்கை ஓவியக்கலை வரலாறு 1943ம் ஆண்டில் தோற்றம் பெற்ற 43 குழு மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

இலங்கை ஓவியக்கலை வரலாற்றில் சிங்கள ஓவியக் கலைஞர்கள் மாத்திரமன்றி இலங்கைத் தமிழர் மத்தியிலும் ஓவியக் கலை பெற்றிருந்த இடத்தை தரத்தினை அறிய வேண்டியுள்ளது. சிங்கள பிரதேசத்திலுள்ள ஓவியங்களின் குறிப்புடனே இலங்கை ஓவியக் கலை வரலாறு கூறப்பட்டாலும், தமிழரின் பாரம்பரிய ஓவியத்தினை பண்டைய காலம் முதல் தமிழர் வாழும் பிரதேசங்களில் கண்டு பிடிக்கப்பட்ட சுவரோவியங்கள் ஆராயப்பட வேண்டியுள்ளது. இந்துக் கோயில் சுவரோவியங்களுள் அவை பற்றிய தகவல்களும் குறைவாகவே கிடைத்துள்ளன. தமிழர் மத்தியில் கோவில் திரைச்சீலை ஓவியம் மிகப் பிரபல்யமான ஒன்றாகும்.

தமிழர் ஓவியக்கலை மரபில் ஐரோப்பியர் தாக்கம் ஏற்பட்ட விடயத்தைப் பொறுத்தவரையில் சிங்கள ஓவியர்களிடையே ஐரோப்பிய செல்வாக்கு நிகழ்ந்த அதே கால கட்டத்தைத்தான் தமிழர் மத்தியிலும் இச் செல்வாக்கு ஊடுருவியுள்ளது. இதற்கு பிரதான காரணம் சிங்கள ஓவியர்களுடன் தமிழ் ஓவியர்களுக்கு இருந்த தொடர்பே என்று கூறவேண்டும். இதில் S. R. கனகசபையின் பங்கு முக்கியமானதாகும்.

43 குழுவினரின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் 1948இல் வின்ஸர் ஓவியக் கழகம் திரு S. R. கனகசபையினால் தோற்றுவிக்கப்பட்டதொன்றாகும். தமிழர் மத்தியிலும் ஓவியக் கலையின் புதுமைகளை புகுத்த அல்லது பின்பற்ற இவ் ஓவியக் கழகம் வழி செய்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1905ம் ஆண்டில்தான் மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் (Tecchincal College) சித்திரமும் ஓவியமும் பயிலுவதற்காக ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக அல்பெட் பேடாகம் (ALFED BURTACEM) என்னும் ஆங்கிலேயரே பொறுப்பாகவிருந்தார். இதன் பிற்பட்ட காலத்திலேதான் இலங்கை நுண்கலைக் கல்லூரி என்னும் பெயரிலே 1953ம் ஆண்டில் ஒரு கலைக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கை மாணவர்கள் ஓவிய சிற்பக் கலையைக் கற்க வாய்ப்பு ஏற்பட்டது.

## மேலைத்தேய, கீழைத்தேய ஓவியமுறை

மேலைத்தேய ஓவியமுறையானது இயற்கை உருவ அமைப்பும் ஒளி நிழல் காட்டும் தன்மையும் உருவங்கள் கனபரிமாணத்துவம் நிறைந்ததாக விளங்குகிறது. (Art of Mass) இயற்கையின் அம்சத்தை உள்ளபடியே பிரதிபலிக்கும் மேலைத்தேய ஓவிய முறையானது ஒரு குழுவினரைத் திருப்திப்படுத்தும் கலையாகவே விளங்குகின்றது. வாழ்வின் கலைஞனாகவும் பின்பு தத்துவ ஞானியாகவும் விளங்குவது மேல்நாட்டுக் கலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலைத்தேய ஓவியம்
மேரியும் பாலனும்
ஓவியர்: ரபேல்



கீழைத்தேய ஓவியம் - பகவத்கீதை ஓதுதல்
ஓவியர்: ராஜு

கீழைத்தேய ஓவிய முறையோ ஒரு ஆத்மிகத் தன்மையைப் பிரதிபலிப்பதாகவும் ஒரு கதையை தொடர்ச்சியாகச் சொல்வதாகவும் அமைகிறது. லாவண்யமான இரேகைகளின் அலங்காரத் தன்மை ஒளி நிழல் அண்மை, தொலை, திரட்சி போன்ற விதிமுறைகள் ஒதுக்கப்பட்ட தன்மையிலும் காணப்படுகின்றன: (Art of Line)

## இலங்கை ஓவியக்கலையில் 43 குழுவின் பங்களிப்பு

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் பாரம்பரிய கலைமரபுகள் குறிப்பாக கீழைத்தேய கலைமுறை ஐரோப்பியரின் ஆதிக்கத்தினால் பெரும் தாக்கத்திற்குள்ளாயிற்று இந்த வகையில் ஐரோப்பிய கலைப்பாணியின் தாக்கம் கீழைத்தேய கலை மரபுகளில் புகுந்தது; இத் தாக்கத்தினை எமது ஓவியக்கலையும் உள்ளடக்கிக்கொண்டது. எமது பாரம்பரிய மரபு வடிவங்கள் மறைந்து போவது தவிர்க்கப்படவேண்டியதாகும் என உணரப்பட்ட காலத்தில் இலங்கையில் பிரதம சித்திரப் பரிசோதகராகப் பணியாற்றிய C. E. வின்சர் என்பவர் ஐரோப்பிய இயற்கை பண்பியல் பாணிக்கெதிராக ஒரு குழுவைத் தொடங்கினார். இவரை தொடர்ந்து புகைப்படக் கலைஞரும் இசைக் கலைஞருமான லயன்ஸ் வேண்ட் என்பவரின் பங்களிப்பில் இலங்கை ஓவியத்துறை புத்துயிர் பெற்றது. இக் காலகட்டத்தில் ஆக்கபூர்வமான முறையில் தனித்துவப் பண்புடன் இயங்கிய கலைஞர்கள் ஒன்றிணைந்து ஒரு குழுவை உருவாக்கினர். 1943ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்குழு ஆண்டின் அடிப்படையில் "43 குழு" என அழைக்கப்பட்டது. இக் குழுவின் சேவையில் கலைஞரின் பங்களிப்பினை நோக்குவோம்.

43 குழுவில் J. G. பிலீங், ஜோட்ஸ் கலஸற், ஜோன்ஸ் கீற், கொலாட், ஜேஸ்ரின் தரணிகல ரிச்சட்கெப்ரியல் ஆகியோருடன் இலங்கை தமிழர் S. R. கனகசபையும் அங்கத்துவம் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. G. பிலீங் இந்தியாவிலுள்ள J. A. கல்லூரியில் கட்டிடக் கலையும், ஓவியக்கலையும் கற்றிருந்தார். இருந்தாலும் இவர் நாட்டம் ஓவியக் கலையிலேயே இருந்தது. மேல் நாட்டு நவீன ஓவியர் பிகாசோவின் படத்தின் தாக்கம் இவரின் படைப்புகளில் அதிகம் காணப்பட்டதுடன் கியுபிசம் (Cubism) கேத்திர கணித வடிவமைப்பு இவர் ஓவியங்களில் அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

கேலிச் சித்திரக்காரரான ஒப்றேகொலட் ஓவியங்கள் மேல் நாட்டு ஓவியர் கோயோவின் சித்திரங்களைப் பின்பற்றியதாக இருந்தன. இதே போன்று ஜோச்ஸ்கீற்றின் ஓவியங்களில் பிரான்ஸ் ஓவியப்பண்புகள் காணக்கூடியதாக இருந்தன. கலைஞர் மங்சூசிறியின் ஓவியங்கள் இந்திய ஓவியர் நந்தலா போஸின் தன்மையை வெளிப்படுத்தின. ஜோச்ஸ் கலஸன் கரிபீரிஸ் போன்றோரும் ஐரோப்பிய கலையின் செல்வாக்கிலேயே இருந்தனர்.

43 குழுவினரின் நவீன போக்கிற்கு இடங்கொடுத்திருந்தபோதும் முற்றாக ஐரோப்பிய கலையினை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கினை இலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை எனவும் கூறலாம். மேலும் இலங்கையின் மரபுகள் மதிப்பீடுகள் போன்றவற்றை 19ம் நூற்றாண்டிற்குரிய கல்விசார் சிந்தனை கூடத்தினுள் ஓவியம் வரையும் முறையும் ஒழித்து இருபதாம் நூற்றாண்டிற்குரிய நவீன பண்புகளைத் தமது படைப்புகளில் வெளிப்படுத்துவதை அவர்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

## சிறப்பு வாய்ந்த சித்திரக் கலைஞர்கள்

### சோலியஸ் மெண்டிஸ் 1920 - 1975

களனி விகாரை (ரஜமகாவிகாரை) பழைய சுவர் ஓவியங்களை புனருத்தாரணம் செய்தவர் இவரே. பௌத்தசமய வரலாற்றுச் சம்பவங்களைப் புதிய ஐரோப்பிய பாணியில் இவர் இங்கு வரைந்துள்ளார். சங்கமித்திரை வருகை, கேமலதா நந்தகுமார இவற்றில் சிறப்பு வாய்ந்த சித்திரங்களாகும். இவர் இந்தியா சென்று புராதன ஓவியங்களைப் பார்வையிட்டு அதன் தன்மையினை தமக்கே உரித்தான பாணியில் வரைந்தவர். இவரின் படைப்புகள் 12ம் நூற்றாண்டிற்குரிய பொலநறுவை, திவங்க ஓங்யங்களுடன் ஒத்துப்போனாலும் இவ் திவங்க ஓவியங்களில் காணப்படும் பொலிவும் நயமும் சோலியஸ் மெண்டிஸ் ஓவியங்களில் காணப்படவில்லை. இவை இரு பரினாம கண்ணொத்த விதிகள் அடங்கியிருப்பதுடன் இலங்கை சித்திரக் கலையினைப் புதிய வடிவில் திருப்பவும் உதவினார்.

### ஜோஜ் கீட்

1891ம் ஆண்டில் பிறந்த ஜோஜ் கீற் கண்டி திருத்துவக் கல்லூரியில் கல்வி கற்று கலைத் துறையில் ஈடுபட்டார். பத்து வயதில் இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்ட காட்சியை வரைந்து பாராட்டுதலைப் பெற்றார். பௌத்த, இந்து மதக் கலைகளில் அக்கறை கொண்டவராக விளங்கினார். இலங்கை மரபுவழி ஓவியத்தில் நாட்டம்கொண்டு பல ஓவியங்களை வரைந்தார்.

பொறளை கோதமி விகாரையில் இவரது நவீன பாணியில் வரையப்பட்ட மாயாதேவியின் கனவு சித்தாத்தரின் பிறப்பு என்னும் ஓவியங்கள் சிறப்புவாய்ந்தவையாகும். இவரது ஓவியங்கள் எமது பாரம்பரிய ஓவியங்களினதும் நவீன ஓவிய அம்சங்களுடனும் சேர்த்து கோதமி விகாரையில் தீட்டப்பட்டன. யமனை வெல்லுதல் இதில் முக்கிய ஓவியமாகும். இலங்கையின் பாரம்பரிய கலாச்சாரத்தினை வெளிப்படுத்தும் தன்மையினை இவரது ஓவியங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலம்வரை சிறந்த நவீன ஓவியராகவும் திகழ்ந்தார். தனக்கென தனித்துவமான இடத்தைப் பிடித்த ஜோஜ் கீட் 43 குழுவிற்கும் இலங்கை ஓவியத்துறைக்கும் பெருமை சேர்ப்பவராக விளங்கினார். மேலைத்தேய ஓவியர்களான பிக்காஸோ, பரோக் போன்ற ஓவியர்களின் கலைத்தன்மையை இவரது படைப்புகளில் காணலாம்.

## A. G. S. அமரசேகரா 1883 - 1983



பேய் நடனக்காரியின் மகள்

1883ம் ஆண்டு பிறந்த அமரசேகரா மொறட்டுவ குமார கல்லூரியிலும் புனித தோமஸ் கல்லூரியிலும் கல்வி கற்றார். படிக்கும் போது சித்திரப் போட்டியில் பரிசு பெற்று பாராட்டுப் பெற்றார். 1924ம் ஆண்டில் இங்கிலாந்தில் சித்திரக் கண்காட்சியை நடாத்தினார்.

தரைக்காட்சி (Landscape) உருவப்படம் (Pottery) வரைவதில் வல்லவராக விளங்கினார். 1922ம் ஆண்டில் கொழும்பு கலாபவனத்தை அமைப்பதில் முன்னோடியாக விளங்கினார். அழகியவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதே அவரின் படைப்புகளில் முக்கிய நோக்கமாக இருந்தது. நீர் வர்ணம், எண்ணெய் வர்ணம் உபயோகித்து ஓவியம் தீட்டுவதில் வல்லவராக விளங்கினார். மந்திர சக்தி உள்ளவராகவும் திகழ்ந்தார். இவர் தீட்டிய 'பேய் நடனக் காரியின் மகள்' என்னும் ஓவியம் கொழும்பு கலாபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. மகாத்மாகாந்தி, ரவிந்திர தாகூர் போன்ற பெரியோர் உருவங்களை தத்துருவமாக வரைந்து புகழ் பெற்றார். 1924ம் ஆண்டில் றோயல் அக்கடமியில் நடைபெற்ற அகில உலக ஓவியப்போட்டியில் பரிசு பெற்றார்.

## H. T. P. மஞ்சுசூரி

1892ம் ஆண்டில் அரத்தமகயில் பிறந்த மஞ்சுசூரி உள்நாட்டு பாரம்பரிய மரபு ஓவியங்களில் அதிக நாட்டம் கொண்டவராக விளங்கினார். புராதன விகாரைகளிலும், குகைகளிலும் உள்ள பாரம்பரிய ஓவியங்களை உள்ளபடியே பிரதிசெய்வதில் வல்லவராய் விளங்கினார். 1932ம் ஆண்டு இந்திய சாந்தி நிகேதனத்தில் ஓவியக்கலையை பயின்றார். நம் நாட்டு சித்திரக்கலையின் பெருமையை மேல்நாட்டினருக்கு எடுத்துக்காட்டிய பெருமை இவரையே சாரும். சர்வதேச மெக்சைஸ்டே பரிசையும் மஞ்சுசூரி பெற்றவராவார். தாராதேவி என்னும் மஞ்சுசூரியின் சித்திரம் கண்ணாடி செதுக்கலுக்குள்ளாகச் செய்யப்பட்டது. மஞ்சுசூரி புராதன விகாரை ஆலய ஓவியங்களை பேணிப் பாதுகாக்க பெரிதும் உதவினார். இவர் ஒரு பௌத்த துறவியாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டேவிற் பெயின்டர்

இந்திய இமாலய அல்மேரா கிராமத்தில் 1890ம் ஆண்டு பிறந்த டேவிட் பெயின்டர் கண்டி திருத்துவக் கல்லூரியில் கல்விகற்று இங்கிலாந்து சென்று றோயல் அக்கடமியில் ஓவியக்கலை பயின்றார். 1946ம் ஆண்டில் ஓவியக்கலையில் சர்வதேச ஓவியக் கண்காட்சியில் கீழைத்தேய கலைஞர்களுக்கான உயர்ந்த பரிசினைப் பெற்றார். நவீன ஓவிய முறையில் கிறிஸ்தவ தேவாலயங்களில் ஓவியங்கள் பல தீட்டினார். பாரம்பரிய கலையில் பயன்படுத்திய வர்ணங்களிலிருந்து விடுபட்டு டேவிட் பெயின்டர் சித்திரங்களில் நெகிழ்வான வர்ணங்களைப் பயன்படுத்தினார். இவர் மனித உடலை அவ்வாறே தீட்டுவதில் ஆர்வம் காட்டினார். இலங்கை பௌத்த விகாரைகளில் நவீன முறையில் ஓவியமுறை பரவிய காலத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் ஓவியங்கள் தீட்டும் பெருமையை இவர் பெற்றார். இயேசுநாதரின் வாழ்வைக் காட்டும் சித்திரங்களில் அதற்கு இலங்கையரைச் சார்ந்த உடற் தன்மை தேசிய ஆடைகளையும் வரைந்து புகழ்பெற்றார். கண்டி திருத்துவக் கல்லூரியில் இயேசுநாதரின் வாழ்க்கைச் சம்பவங்களையும் கல்கிசை புனித தோமஸ் ஆலயத்தின் ஓவியங்களையும் திறம்பட இவரே தீட்டினார்.

### J. D. A. பெரேரா

1897ம் ஆண்டில் கம்பஹாவில் பிறந்த இவர் கலைத்துறையில் சிறந்து விளங்கிய கலைஞர்களில் ஒருவர். சிலகாலம் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் கடமை புரிந்தார். தத்துருவமான உருவப்படங்களை வரைவதில் சிறந்து விளங்கினார். கல்வித் திணைக்களத்தில் அழகியற் பாடம் தொடர்பாக பல காலம் சேவையாற்றினார். 1953ம் ஆண்டில் கொழும்பு அரசினர் நுண்கலைக் கல்லூரியை ஸ்தாபிப்பதில் முன்னோடியாகவும் அக் கல்லூரியின் முதல்வராகவும் கடமையாற்றி கலையுலகிற்குச் சேவைபுரிந்தார்.

### களனி விகாரை சுவரோவியங்கள் (ரஜமகா விகாரை)



கேமலதா - நந்தகுமார

கொழும்புக்கு அண்மையில் களனி விகாரை அமைந்துள்ளது. இவ் விகாரையின் உள்ளே நீண்ட சாலையும் வலது பக்கத்தில் புதிய பாணியில் வரையப்பட்ட ஓவியங்களும் காணப்படுகின்றன. ஓவியர் சோலியஸ் மென்டிஸ் 1941ம் ஆண்டிலே பழைய முறை ஓவியங்களை மாற்றி புதிய பாணியிலான ஓவியங்களை வரைந்தார். இவ் ஓவியங்கள் சிகிரியா ஓவியங்கள் போன்று சிறப்புற்று விளங்குகின்றன. புத்த பெருமான் களனியை தரிசித்தல், கேமலதா நந்தகுமார, சங்கமித்திரை வெள்ளரசு மரம் கொண்டு வரல் போன்ற பௌத்த வரலாற்றுக் கதைகள் இங்கு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. உருவங்கள் இரேகையினால் முப்பரிமாணத் தன்மையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வர்ணங்களால் வரையப்பட்டுள்ளன இச்சித்திரங்கள தொலைவில் இருந்து பார்ப்பதைவிட அண்மையில் இருந்து பார்க்கும்போதே அதன் கலை நுட்பம் தெளிவாகப் புலப்படும். இங்குள்ள பழைய ஓவியங்கள் கண்டிக்கால ஓவியப்பாணியை சேர்ந்ததாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோதமி விகாரை ஓவியங்கள்

கொழும்பில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அருகே இவ்விகாரை உள்ளது. ஓவியர் ஜோர்ஜ்கீட் இவ்விகாரை ஓவியங்களில் நவீன முறையை புகுத்தியவராவார். பௌத்த சரித்திரங்களான மாயாதேவியின் கனவு, மாறனின்யுத்தம் என்பவை இவற்றில் சிறப்பு வாய்ந்தவை.

மாயாதேவியின்கனவு களனி ஓவியங்களுக்கு சமமாக காணப்பட்டாலும் உருவ அமைப்பு வடிவம் வேறுபட்டுக் காணப்படுகிறது. உண்மைத் தன்மையிலும் வடிவமைப்பிலும் அமைந்து காணப்படவில்லை. சுவரை நிரப்பிய வண்ணம் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. உருவங்கள் மூலம் கருத்து வெளிப்படுவதில் சில இடங்களில் கண்கள் சரியான முறையில் வரையப்படவில்லை. கைகள் தேவைக்கதிகமாக நீண்டவண்ணம் உள்ளன. சித்திரங்கள் கூடுதலாக கடும் வர்ணங்களில் வரையப்பட்டு ரேகைகளால் உருவங்கள் மிக அழகாக வரையப்பட்டுள்ளன.

மாறனின் யுத்தம் கொடூரமான தன்மையை நன்றாக விளக்குகின்றது. கொடூர முகம் காட்டப்பட்டுள்ளது. கடும் சிவப்பு, நீலம், கடும் பச்சை இவ் ஓவியங்ககளில் அனேகமாக காணப்படுகின்றன.

## M. சால்லிஸ்



புத்தரின் பிறப்பு - ஓவியர்: M. சாள்ஸ்

அம்பலாங்கொடையில் 1880ம் ஆண்டு பிறந்த சால்லிஸ் பௌத்த ஓவியங்களுக்கு ஊக்கம் கொடுத்தவர். ஆரம்ப காலத்தில் மேல்நாட்டு பாணியில் பௌத்த ஓவியங்களை வரைந்து ஜேர்மனிக்கு அனுப்பி அச்சிட்டு நம்நாட்டு மக்களுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். விகாரையில் ஓவியங்கள் தீட்டியும் ஜனரஞ்சகமான முறையில் சஞ்சிகையிலும், புத்தகங்களிலும் பௌத்த சித்திரங்களை வரைந்தார். புத்தரது வாழ்வின் நிகழ்ச்சிகளை தம்பிட கோமலு பூர்வாராமய போன்ற விகாரைகளிலும் கொழும்பு மாளிகாகந்தை விகாரையிலும் இவர் தீட்டிய ஓவியங்களைக் காணலாம். இவரின் அரகந்த சீவலி ஓவியங்கள் மக்களின் மதிப்பை பெற்றவையாகும்.

## ஸ்ரான்லி அபயசிங்க

இவர் இலங்கையின் உயர்ந்த சித்திரக் கலைஞராக கருதப்பட்டார். சித்திர ஆசிரியராகவும் பல ஆண்டுகள் கடமைபுரிந்துள்ளார். இலங்கை கலாமன்றத்தில் உப தலைவராகவும் கீழைத்தேய மேலைத்தேய செயல்திட்டக்குழு அங்கத்தவராகவும் இலண்டன் ஆசிய மன்றத் தலைவராகவும் கடமை புரிந்துள்ளார். இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரியில் சித்திரக் கலையில் பயிற்சி பெற்று 1949ம் ஆண்டில் இலங்கை அரசு வழங்கிய புலமைப் பரிசினால் பிரித்தானியா சென்று அங்கு மத்திய கலைக்கல்லூரியிலும் ஓவியக்கல்லூரியிலும் பயிற்சி பெற்று திறமை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்சாரப் பிரச்சினை, தியானம், இலட்சுமியின் பிறப்பு முதலான ஆழ்ந்த கருத்துக்கள் உள்ள ஓவியங்களை தீட்டினார். கண்டி பெரகரா, குயவன் வேலைத்தளம் என்னும் சிறப்பான ஓவியங்களையும் தீட்டியுள்ளார். நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம் என்பவற்றை கையாள்வதில் நிபுணத்துவம் பெற்று விளங்கினார். இறுதிக் காலத்தில் இவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

## திசரணசிங்க

1922ம் ஆண்டில் பிறந்த திசரணசிங்க சித்திரம் சிற்பம் தொடர்பான அறிவினை அரசினர் கலைக்கல்லூரியில் பெற்று திறமை வாய்ந்தவராய் திகழ்ந்தார். சிற்பக் கலையில் விசேட கவனம் செலுத்திய திரணசிங்க 1954ம் ஆண்டில் இலண்டன் சென்று சிற்பக் கலையினைக் கற்று சிறந்த சிற்பக்கலைஞரானார். 1958ம் ஆண்டில் ஒல்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கு சென்று கற்க புலமைப் பரிசைப் பெற்றார்.

ஒப்ஷேவர் பத்திரிகை ஸ்தாபனத்தின் உதவியுடன் இங்கிலாந்தில் இருந்த ரணசிங்க D. S. சேனனாயக்காவின் உருவச் சிலையை உருவாக்கினார். இதுவே இன்று பழைய நாடாளுமன்றத்துக்கு முன் நிறுவப்பட்டு காட்சி அளிப்பதாகும். அவரது திறமையை வெளிப்படுத்தும் சிற்பங்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கையில் 1958ம் ஆண்டில் தமது சித்திரக் கண்காட்சியை நடாத்திப் புகழ் தெற்றார்.

## ஜெஸ்டின் தெரனிகல

மறக்கமுடியாத ஒரு ஓவியர். தெரணிகல படைப்பிலும், கற்பனை ஆற்றலிலும் சிறந்து விளங்கிய இவர் 1903ம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். A. G. S. அமரசேகரா விடம் சித்திரக்கலை பயின்ற இவர் 1922ம் ஆண்டு இலண்டன் கேம்பிறிச் டிரிஸ்ரி வித்தியாலயத்தில் சட்டமாணியப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பிரித்தானியாவில் பிரசித்தி பெற்ற சித்திரக் கலைஞர்களான ஹென்றிடொங்கல், வில்சன்ஸ்டீயர் என்பவர்களின் கீழ் சித்திரக்கலைப் பயிற்சி பெற்றார். 1928ம் ஆண்டு பாரிசிக்குச்சென்று கலை பயின்று இலங்கை திரும்பினார்.

தெரணிகலயின் படைப்புக்கள் இறுக்க வெளிப்பாட்டின் ஒத்திசைவுகளின் பயன்பாடும், சீரமைப்பும் சிறந்த முறையில் கையாளப்படுகின்ற மனித உருவங்களையும் பொருட்களையும் வரைவதில் பிரத்தியேக திறமை காட்டினார். ஜோர்ஜ் பராக், பிகாசோ போன்ற கலைஞர்களின் ஓவியத் தன்மையினை தெரனிகல கலைகளில் காணப்பட்டன. 1958ம் ஆண்டு 'மீன்' எனும் தலைப்பிலான தன்னுடைய ஓவியத்திற்கு யுனஸ்கோவில் உயர்ந்த பரிசைப் பெற்றுக்கொண்டார். ''தங்கமீனுடன் யுவதி'' எனும் ஓவியமும் பெண்பிள்ளை ஒருத்தியின் காருண்யத்தை வெளிப்படுத்தும் சிறந்த ஓவியமாகும்.

## றிச்சட் கெபிரியல்

1924ம் ஆண்டு மாத்தறையில் பிறந்த றிச்சட் கெபிரியல் சென்பீற்றஸ் வித்தியாலயத்தில் கல்வி கற்று அயிரவன் பீரிஸ் கலைஞரின் உதவியுடன் கலையைக் கற்று 43 குழுவில் அங்கத்தவருமானார்.

கிறிஸ்தவ ஓவியங்களிற்கு மாபெரும் சேவையாற்றுபவராக கெபிரியல் கருதப்படுகின்றார். திம்பிரிகசாய, சென் தெரேசா வழிபாட்டுத் தலங்களிலும் உள்ள சுவரோவியம் அம்பீற்றில் தேசிய மையவாடியில் உள்ள மரச்சிற்பம், பம்பலப்பிட்டி இயேசு இல்லத்திலுள்ள மரச்சிற்பம் போன்றவை கெபிரியலின் ஆக்கங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மரவெட்டு (Wood Carving) ஊடகத்தின் மூலம் படைக்கப்படும் ஆக்கங்களை முதலில் கெபிரியல் அறிமுகம் செய்தார். இவர் படைப்புக்கள் சூழலின் பிரதிபலிப்பையும் வெளிப்படுத்துபவையாகவும் விளங்குகின்றன. இவரது பாணியில் தனித்துவம் காணப்படுவதோடு பஞ்சதந்திரக் கதைகளையும், நாட்டார் பாடல்களையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. நாளாந்த வாழ்வின் செயற்பாடுகள் அவரின் சித்திரங்களிற்கு தொனிப் பொருளாக உள்ளன.

**அயிரவன் பீரிஸ்**

1927ம் ஆண்டு ஜனவரியில் பீரீஸ் தெகிவளையில் பிறந்தார். சிறுவயதில் சித்திரக் கலையார்வம் கொண்ட பீரீஸ் கலைஞர் டேவிட் பெயின்ரரின் கீழ் சித்திரக்கலை பயின்றதன் பின்னர் லயனல் வேன்ட் ஆலோசனையின்படி 43 குழுவில் அங்கத்துவரானார். 1945ம் ஆண்டு அரசினர் புலமைப் பரிசினைப் பெற்று இங்கிலாந்து சென்று அஸ்லோ பிரான்ஸ் சித்திரக் கல்லூரியில் சித்திரக் கலை பயின்றார்.

கண்களிற்கு புலப்படும் கற்பனையில் காணும் யதார்த்தத்தில் விருப்பங்கொண்ட அயிரவன் பீரிஸ் நவின சித்திரக் கலைஞர்களுள் முக்கிய இடம் பெற்ற ஓவியராவார். கடற்கரைப் பிரதேசங்களை ஓவியமாக்கும் போது அதனை காரிய வடிவில் கட்டுவது அவருக்கே உரிய தன்மையாகும். கடற்கரை, மீனவர், குடிசைகள், தென்னை மரங்கள், வள்ளங்கள், கடலலைகள் என்பவற்றைக் காட்டும் அயிரவனின் பாணி யதார்த்தமும் காவியமுமானது;

## கிறிஸ்தவ தேவாலயங்கள்





1) புனித தேவரூபம் 2) பிரதான வாயில்
3) உப வாயில் 4) ஜன்னல்

இலங்கையில் கிரேக்க உரோம நாகரீகம் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பிய சமூகத்தினராலே பரவியது. கட்டடம் கட்டுதல், வீடு, வீதி அமைத்தல் போன்றவையும் இவற்றில் அடங்கும். கொழும்பு அரும்பொருட் காட்சிச் சாலை (Museum) கட்டடமானது உரோமானிய கட்டிட அம்சங்களைக் கொண்டதாகும். இதே போன்று பழைய நாடாளுமன்ற கட்டிடமும் கிரேக்க கட்டிட முறையிலான 'தொறிக்' கட்டிட முறையைச் சேர்ந்ததாகும்.

16ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றியதும் மதப்பிரசாரம் செய்து கிறிஸ்தவ மதத்தையும் பரப்பினர். இதில் தேவாலய (Church) கட்டிடமும் முக்கியமான ஒன்றாகும். கி. பி. 3ம் நூற்றாண்டில்தான் போர்த்துக்கல்லில் கிறிஸ்தவ தேவாலயங்கள் உருவாகத் தொடங்கின. இவற்றில் உரோமோனிய கட்டிட அம்சங்கள் பல காணப்பட்டன. புதிய தேவாலயங்கள் கட்டும்போதெல்லாம் பழைய சம்பிரதாய முறைப்படியே கட்டினார்கள். இத்தேவாலய நிலத்தளமானது சிலுவை வடிவில் அமைந்திருந்தது. இரு மருங்கிலும் விறாந்தைகள் கொண்டவையாகவும், மேடையும் அதன் இரு பக்கமும் அறைகளும் அமைக்கப்பட்டன. படிக்கட்டுகள் கொண்ட வாயில்கள், யன்னல் போன்றவற்றின் மேற்பகுதி அரைவட்ட வடிவமான (Arc) வளைவு கொண்டதாகவும் உச்சியின் மேற்பகுதி தேவ உருவங்களும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொதிக் சிற்பமுறை

இலங்கையில் மிகப் பழமையானதும், உன்னதமானதுமான தேவாலயங்களை இன்றும் நீர்கொழும்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் காணக் கூடியதாக உள்ளது. 12ம் நூற்றாண்டில் புதிய முறையில் தேவாலய அமைப்புக்கள் உருவாகின. புரட்டஸ்லாந்து கிறிஸ்தவர்கள் தேவாலயங்களை உருவாக்குவதில் புதுமை களை புகுத்தினர். வர்ணக் கண்ணாடிகளால் அலங்காரம் செய்யப்பட்ட யன்னல்கள் மிக வும் சாய்ந்த கூரையும், முகடுகளும் கொண்ட தாகவும்; வாசல்கள் முகடுகள் போன்ற அமைப்பினைக் கொண்டதாகவும் விளங்கின. இவ்வாறான ஆலய அமைப்புகள் 1658ம் ஆண்டில் இலங்கையிலும் புகுத்தப்பட்டன. இவை கொதிக் (Gothic) கட்டிட முறையென அழைக்கப்பட்டது. ஆயினும் காலப்போக்கில் பிற்காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் கண்டிக்கால கட்டிட மரபுகளையும் கொண்டவையாக உருவாக்கப்பட்டன. கண்டிக் கால கட்டிடக் கலையில் எண்கோண வடிவான கூரையமைப்பு மிக முக்கியமானதொன்றாகும்

கட்டுக்குருந்தை என்னுமிடத்தில் காணப்படும் புனித பிலிப்மேரி தோவாலயம் சிங்கள கட்டிட மரபுகளைக் கொண்டது. வாயிலில் புங்கலஸ் போன்ற அமைப்பும் காணப் படுகிறது. மட்டக்களப்பில் காணப்படும் கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலயமும், மட் டக்களப்பு புனித அன்னைமேரி தேவாலயமும் கண்டிக்கால கூரையமைப்புக் கொண்டதாக அண்மைக் காலத்தில் மாற்றியமைக்கப்பட்ட ஒன்றாக காணக்கூடியதாக உள்ளன.

ஐரோப்பியர் தாம் சென்ற இடங்களில் எல்லாம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினர் என்பது ஒரு குறுகிய கண்ணோட்டமாகும். பாரபட்சமான மதிப்பீடு சற்று விரிவாகக்கூறினால் அவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதிலும் பார்க்க ஒரு மனிதாபிமானம் மிக்க சமத்துவ மும், ஞானமும் உள்ள ஒரு சமுதாயத்தை எழுச்சியுற தம்மாலான பணிகளையும் செய்தனர். அதில் வெற்றியும் பெற்றனர் என்பது புலனாகும்.

ஐரோப்பியரிடம் இருந்து நாம் கிறிஸ்தவ மதத்தை மாத்திரமன்று வாழ்க்கை நடை முறைகள் ஆடையணிகள் நாகரீகம், கல்வி, கலை, கலாச்சாரம், மருத்துவம், மொழி, அரசியல் முறை போன்றவற்றை விரும்பி ஏற்றுக்கொண்டு அவற்றை இன்றும் நம் வாழ்வில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம், என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

## பொறளை சகல புனித தேவாலயம் (All Saints Church)

கொழும்பில் பொறளையில் அமைந்துள்ள இத் தேவாலயம் மனதை ஈர்க்கும் சக் தியை உடையது. 'கொதிக்' கட்டிட முறையில் கட்டப்பட்ட இத் தேவாலய மண்டபம் உயர்ந்த இருபக்க சுவர்களில் மேற்பகுதியில் உள்ள யன்னல்களில் வர்ணக் கண்ணாடிகளி னால் (Stainglass) அழகுமுறையில் நிரப்பப்பட்டுள்ளது இந்த யன்னல் வடிவங்களும் பாரம் பரிய 'கொதிக்' முறையில் உச்சி வளைவு கொண்டு விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழிபடும் மண்டபத்தில் இருந்து பார்க்கும் போது மனதைக் கவரும் வகையில் கிறிஸ்தவ சமயச் சித்திரங்கள் மிகச் சிறப்பாக பிரகாசத்துடன் காணப் படுகின்றன. இந்த பலவர்ண கண்ணாடித் துண்டுகள் வெளிப்புற சூரிய வெளிச்சத்தினால் மிகப் பிரகாச மாக தோன்றுகின்றன. இந்த கண்ணாடித் துண்டு களின் வெளிப்புற கோடுகளினாலான இதன் வோடர் களின் மத்தியில் சித்திரங்கள் பிரத்தியேகமாகத் தெரி யும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறுக்கும் நெடுக்குமான கோடுகளால் சிறிய சதுரத் தொகுதி ஒன்று செய்யப்படுகின்றது. இத் தொகுதிகள் பெரிய சதுரங்களாக ஆக்கப்படுகின்றன. இவ்வாறான சதுரங் கள் கொண்ட வரிசை யன்னலின் மேற்புறத்திலே உச்சி வளைவு கொண்ட அலங்காரப் பகுதியாக பிரிக் கின்றன.

உருவங்கள் கோடுகளால் வரையப்பட்ட போதி லும் புறவரிக் கோடுகள் (Outline) மிகத் தெளிவாக தெரிகின்றன. கடும் வர்ணங்களான கறுப்பு, சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா போன்ற கண்ணாடித் துண்டு கள் பாவிக்கப்பட்டுள்ளன. ஆயினும் பின்னணி மெல் லிய வர்ணங்களால் (Light Colour) ஆக்கப்பட்டுள் ளது.

மண்டபத்தில் வலது இடது பக்கங்களிலுள்ள பத்து யன்னல்களிலும் சித்திரங்கள் காணப்படுகின்றன. தேவதூதர் கன்னி மேரிக்கு வணக்கம் செலுத்துதல், யேசு பாலனை அணைத்த கன்னிமேரி 12 வயதில் இயேசு பண்டிதர்களுக்கு உபதேசம் செய்தல், இயேசுவுக்கு மரணதண்டனை விதித்தல், மரணத்தை வெல்லுதல் என்பன இங்குள்ள முக்கிய கலை வேலைப்பாடாகும்.

**கண்டி கிறிஸ்தவ ஓவியங்கள்**

கண்டி நகரிலுள்ள பிரசித்தி பெற்ற திருத்துவக் கல்லூரி (Trinity College) கிறிஸ் தவ சட்டிடத்தன்மை வித்தியாசமான அமைப்புக் கொண்டதாகும். அரைவாசி சுவர்கள் உடையதும், பல தூண்களையும் கொண்டதுமான நீண்ட மண்டபமும் தூண்களில் அலங் காரமும் கொண்டது. கூரையமைப்பு புராதன சிங்கள கட்டிடத் தன்மையை வெளிப்படுத் துபவையாக விளங்குகின்றன.

முன்னால் வாயில் மண்டப இருபக்கமும் ஒவ்வொரு வாசலுமாக மூன்று வாசல் கள் அமைந்து காணப்படுகின்றன. இங்கு பெரியளவில் ஐந்து சுவர்ச்சித்திரங்கள் வரையப் பட்டுள்ளன. வலது பக்கச் சுவரில் ''நல்ல சமாரியன் கதை'' 12×8, 62 அளவில் வரையப் பட்டுள்ளது. காயம் அடைந்தவருக்கு பரிகாரம் செய்வது போலவும், சீடர்கள் சுற்றி நிற்பது போலவும், ஏழு உருவங்கள் சூழ்ந்து நிற்பது போலவும் தீட்டப்பட்டுள்ளன. ஒரு குதிரையின் வடிவமும் காணப்படுகின்றது. இவ் ஓவியத்தின் முற்பகுதி தாழ்ந்த நிலமாகவும் பின்னா லுள்ள பகுதி மலைப்பிரதேசமாகவும் காட்டப்பட்டுள்ளது.

வேதாகம கதையினை வெளிப்படுத்தும் கருத்தைக் கொண்ட இச் சித்திரங்களில் மனித உருவங்கள் சிங்கள மக்களின் சாயலாக காணப்படுகிறது. படம் வரைந்த காலத்தில் அக்கால படித்த மக்களுக்கு சமமான உருவங்களை வரைந்திருக்கலாமெனக் கூறவேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளது. மெல்லிய சரீரம் உடைய மனிதர்கள் வெண்ணிற ஆடையும் கட்டையயான தலை உரோமமும் உள்ளதாக காணப்படுகின்றனர். இயேசு நாதரின் தலையின் பின் புறத்தே வட்டமான ஒளி பிரகாசிக்கின்றதுபோல் வரையப்பட்டுள்ளது. அடுத்து மூன்று படங்கள் இயேசுவினை சிலுவையில் அறைந்தது போன்றும், வலது, இடது பக்கமாக திருடர்கள் சிலுவையில் அறையப்பட்டது போல வரையப்பட்டுள்ளன. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது போன்று இதன் சூழல் கல்வாரி மலையல்லாது வேறுபட்ட தன்மையில் காணப்படுகின்றது. ஓர் நீர்த்தடாகமும் முன்னால் உள்ளது போன்று வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியங்களை வரைந்த கலைஞர் டேவிட் பெயின்டர் ஆவார். கல்கிசை புனித தோமஸ் ஆலயத்தின் ஓவியங்களையும் வரைந்தவர் இவரே.

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம்

கொழும்பு துறைமுக பகுதியில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயம் சுமார் 175ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இத் தேவாலயம் அந்தோனியார் அடிகளாரால் 1828ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1834ல் பூர்த்தியாக்கப்பட்டது. இவ்வாலயத்தை அமைக்க அந்தோனியார் அடிகளார் அயராது பாடுபட்டார். கடலரிப்பு கொண்டு விளங்கிய இப் பகுதி அந்தோனியார் அடிகளாரின் அளப்பரிய விசுவாசத்தினால் கடல் கொள்ளா நிலப்பரப் பாக மாறியது. முழுக்க முழுக்க உரோமேனிய கட்டிட அம்சங்கள் கொண்டதாக விளங்கும் இத் தேவாலயம் 1822ம் ஆண்டில் ஆலய நிர்வாகிகள் போர்த்துக்கீச கோவாவில் இருந்து புனித அந்தோனியாரின் அழகிய திருவுருவத்தைக் கொண்டுவந்து இத் தேவாலயத்தை அழகு படுத்தினர். இன்று அருள் சேர்க்கும் புனித தலமாக இவ்வாலயம் கொழும்பில் விளங்குகின்றது.

## ஆனந்த குமார சுவாமி

இலங்கை தேசிய தலைவர்களில் ஒருவரான சேர். பொன். இராமநாதன் அவர்களின் சகோதரியின் புதல்வரே ஆனந்த குமாரசுவாமியாவார். இங்கிலாந்தில் ஆரம்பக் கல்வியை விக்லி கல்லூரியில் கற்ற ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இலண்டன் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியானார். இலங்கை அரசினரால் தாதுப்பொருள் ஆய்வுப் பகுதியில் (Mineralogical Survey)தலைவராக பதவி வகித்த காலத்தில் தோறினைற் எனும் தாதுப் பொருளைக் கண்டுபிடித்தார். இவரின் கண்டுபிடிப்பிற்காக இலண்டன் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கி கெரவித்தது. பல தொல்லியல் (Archaeology) ஆய்வுகளை மேற் கொண்ட ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இலங்கை உட்பட கீழைத்தேய கலை, கட்டிட சிற்பங்களில் ஆய்வுகளை மேற்கொண்டார். அழிந்த இடிபாடுகள், சிற்பங்கள் விகாரைகள் கைப்பணிப் பொருட்கள் இவரின் ஆய்வின் மூலம் கீழைத்தேய கலையின் பெருமையை உல கறியச் செய்தார். மத்தியகால சிங்களக்கலை இலங்கை உலோக விக்கிரகங்கள் (Bronzes from Ceylon) சிவ நடனம் (Dance of Siva) போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். ஆங்கிலேய மோகத்திலும், நாகரீகத்திலும் வாழ்ந்த நமது நாட்டு மக்களிற்கு நம் நாட்டின் பழம்பெருமை மிக்க கலைச் சிறப்பினை ஆனந்த குமாரசுவாமி அவர்கள் வெளிப்படுத் திக் காட்டினார்.

## ஓவியர் மார்க்

இலங்கைத் தமிழ் ஓவியர்களை நினைக்கும் போது நவீன பாணி ஓவியத்தின் முன் னோடியாக ஓவியர் மார்க் விளங்குகின்றார். பாரம்பரிய ஓவியங்களையும் வணிக ரீதியான ஓவியங்களையும் பார்த்துப் பழக்கப்பட்ட தமிழ் மக்களின் மத்தியில் நவீன ஓவியத்தை அறிமுகம் செய்வதிலும் மார்க் முன்னோடியாக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் குருநகரில் 1938ம் ஆண்டில் பிறந்த மார்க் தன் சிறுவயதில் பல கைப்பணிப் பொருட்களை ஆக்கி கண்காட்சியில் பரிசு பெற்றவராவார். அரசினர் நுண் கலைக் கல்லூரியில் டேவிட் பெயின்ரர் ஸ்ரான்லி அபேசிங்க போன்ற ஓவியப் பேராசிரியர் களிடம் பயிற்சியும் பாராட்டுதலையும் பெற்றவர். யாழ்ப்பாண ஹாட்லிக் கல்லூரியில் சித்திர ஆசிரியராக நியமனம் பெற்று பல ஓவியக் கண்காட்சிகளை நடாத்தியுள்ளார். 1958ம் ஆண்டில் கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் இவரது படைப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டன. நவீன பாணியில் ஓவியம் படைத்த மார்க் 1957,58 ஒக்ஷாபர் பரிசையும், கவர்ணர் பரிசையும் பெற்றார்.

நடமாடும் சிவன் அர்த்தநாரீஸ்வரர் சிலம்பேந்திய கண்ணகி, தூதுவிடும் தம யந்தி ஒத்திசைவுடன் புதுமையையும் மார்க்கின் ஓவியங்கள் வெளிப்படுத்தின. யாழ்ப்பாணத் தில் நவீன பாணியில் ஓவியத்தை வளர்ப்பதிலும் பல ஓவிய வகுப்பகளையும் நடாத்தியுள் ளார்.

## *S. R* கனகசபை

1901 ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இருபாலை உன்னும் கிராமத்தில் பிறந்த S. R. கனகசபை சென்னை ஓவியக்கல்லூரியில் பயிற்சி பெற்று யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் சித்திராசிரியராக கடமை புரிந்தார் பின்பு சித்திர வித்தியாதிபதியாகவும் (Chef of Inpetor of Art) கடமைபுரிந்து சித்திர பாடத்திற்கு பெருஞ் சேவை செய்தார் 1943 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட 43 ஓவியக் குழுவில் சேர்ந்த தமிழ் உறுப்பினராகவும் விளங்கினார் 1948ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட வின்சர் ஓவியக் கழகத்தின் (Windsor Artclub) மூலம் பல புதிய ஓவியக் கலைஞரை உருவாக்க காரணமாய் இருந்தார் இவரின் படைப்புகள் பார்பதற்கு அதிகம் இல்லையாயினும் சொற்பமே பாதுகாக்கப்பட்டுள்ளன.

## ஓவியர் *M.S.A* அசீஸ்

மட்டக்களப்பில் சிறந்த ஓவியராக கருதப்படுதர். ஜனாப் M. S. A. அசீஸ் ஆவார் தனது கலைச் சேவையை 1958 இல் ஆரம்பித்து சுமார் 30 வருடகாலம் சேவை செய்த சிறந்த விற்பன்னர் அட்டாளைசேனை ஆசிரிய கலாசாலையிலும் மட்டககளப்பு ஆசிரிய கலாசா லையிலும் சித்திரக் கலை விரிவுரையாளராக பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் இவர் 1953ம் ஆண்டு தொடங்கப் பெற்ற அரச நுண்கலை கல்லூரியின் மட்டக்களப்பில் பழைய மாணவர்களில் ஒருவர். Lake House பத்திரிகை ஓவியக் குழுவில் ஒருவராகி தனது சித் திரங்கள் மூலம் வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றவர். முன்னாள் இலங்கை பிரதமர் திரு. S. W. R. D பண்டாரநாயக்கா அவர்கள் மூலம் முன்னாள் இந்திய பிரதமர் திரு. ஜவகல்லால்நேரு அவர்களின் உருவப் படத்தை வரைந்து அன்பளிப்பு செய்த பெருமை இவருக்கு உண்டு. டாக்டர் மல்ல சேகரா முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி பதியூதீன் முகமட் அவர்களின் பாராட்டுக்களை பெற்றவர். இந்தியாவின் அஜந்தா எல்லோரா தாஜ் மகால் போன்ற இடங்களில் எல்லாம் கலைச் சுற்றுலாவை மேற்கொண்டு தனது படைப் புகளில் புதுமைகளை புகுத்தியவர்.

கல்வித் திணைக்களத்தினரால் நடாத்தப் பெற்ற ஆசிரியர்களுக்கான முன்சேவை பயிற்சிகளை நடாத்தியும் ஆசிரிய சேவைக்கால வகுப்புக்களை திறமையுடன் நடாத்தியும் பாராட்டுதலைப் பெற்றார். இன்று இலங்கையின் எப்பகுதி சென்றாலும் இவரின் சித்திரக் கலை பயின்ற ஆசிரியர்களை காணக்கூடியதாக உள்ளது. அறிஞர் அசீஸ் அவர்களினால் அரபு எழுத்தணிக்கண்காட்சியைத் தொடங்கி நடாத்தியும், இலங்கையின் முதல்முதலாக நடை பெற்ற இஸ்லாமிய மகாநாட்டில் ஆராட்சிக் கட்டுரையை தொகுத்து வாசித்த பெருமையும் இவருக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூல்களும், சஞ்சிகைகளும்,

1. Architecture of Srilanka - by C. E. Cokecompura. of Archaeogical Department, Colombo. 7

2. Ahcient Paintings and Sculptures in Sri Lanka by Nandadeva wijesckara of Archaeological Department, Colombo - 7

3, Buddhist Statues by C. E Codecompura,

4. 43 groups Modern Art in Sri Lanka by A. J Gunawardene, TUD. Silva

5. இலங்கைத் தூபிகள் - கலாநிதி செ. பரணவிதான

6. முன்னைய சிங்கள ஓவியங்கள் - நந்தசேன விஜேசேகர

7. இலங்கை திராவிடக் கட்டடக்கலை - பேராசிரியர் கலாநிதி K. இந்திரபாலா

8, கலையும் பண்பும் - பேராசிரியர் சு. வித்தியானந்தன்

9. வியத்தகு இந்தியா - A. L. பசாம்

10. இலங்கையில் சிற்பக்கலை - கட்டுரை வீரகேசரி 08 ஜுன் 1991 பேராசிரியர் வி. சிவகாமி.

11. ஈழத்துத் தமிழர் கலைகள் - கட்டுரை ''பண்பாடு'' பங்குனி இதழ் 1998 பேராசிரியர் சி. மௌனகுரு

12. இஸ்லாமிய கலாச்சாரம் - ஜனாப் முகம்மது சமீம்

13. பொலனறுவ வெண்கலச்சிலைகள் - தொல்லியல் ஆய்வுத்திணைக்களம், கொழும்பு

14. கைப்பணி - கட்டுரை ''பொருளியல் நோக்கு'' 1987 ஒக்டோபர் இதழ்

15. சிறிலங்கா சித்திர இதிகாசய - விஜயசேகர (சிங்களம்)

16. சிங்கள சரசலிய மோஸ்தரய - T. U. R. De சில்வா (சிங்களம்)

17. கலா எகிம - திசநாயக (சிங்களம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்திரம்

# கலைமதிப்பீடு

(பகுதி இரண்டு)

தரம். 9. 10. 11 — 13 மாணவர்களுக்கானது

* ஆதிகால ஐரோப்பியர் கலை
* இந்திய புராதன கலை
* எகிப்திய புராதன கலை
* கிரேக்க புராதன கலை
* சீன பண்டைய கலை
* மறுமலர்ச்சிக் கால கலைஞர்கள்.
* நவீன கலையும் கலைஞர்களும்


ராஜா புத்தக நிலையம்

111. பிரதான வீதி

மட்டக்களப்பு

☎ 22371

ஜெஸ்கொம் - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org